மார்கழி 1993

# எரிமலை

தமிழீழ ஆவணக் காப்பகம்



P'RAYA
87 RUE DE
92600 ASNIERES
FRANCE

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



கையள்ளி மகிழ்ந்த எம்பூமி
காலாற நடந்து திரிந்த எம்பூமி
மெய்வருந்திச் செழிப்பித்த மாவீரர்
உயிரினும் இனியவள் தாயைப்
போற்றிய புதல்வர்

கருவினுள் நொந்தவள் துயரினைச்
சுமந்து
இனிவரும் நாளில் எம் சந்ததி
சிரிக்க வென்றே எழுந்தவர் வீரம்
எம்முளும் எழுகவே.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


# எரிமலை

கலை பண்பாட்டு
அரசியல் சமூக ஏடு

பன்னிரண்டாம் ஆண்டு
மார்கழி 1993

ஆக்கங்கள்
அபிப்பிராயங்கள்
மற்றும் தொடர்புகட்கு

எரிமலை
தாய்மண் வெளியீடு
தமிழர் ஒருங்கிணைப்புக் குழு
C/O T.C.C-France,
341, Rue des Pyrenees,
75020 Paris.
Tel: 43 58 11 42


# போருக்கான அறைகூவல்

எங்கள் தேசியத் தலைவர் பிரபாகரனின் மாவீரர் நாள் செய்தி, தமிழீழம்தான் ஒரே முடிவு என்பதை வலியுறுத்தி நிற்கும் அதேவேளை, பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான சமாதானக் கதவுகள் இன்னும் திறந்து வைக்கப்பட்டுள்ளதாகவே தெரிவித்துள்ளது. ஏற்கனவே எச்ரிக்கப்பட்டு, உஷார் நிலையில் இருக்கும் போதே நடத்தப்பட்ட பூநகரி மீதான விடுதலைப் புலிகளின் தாக்குதல் சிறிலங்கா அரசாங்கத்தை கதிகலங்க வைத்துள்ளது. இவ்வதிர்ச்சி வைத்தியம் அரசாங்கத்தில் பெரும் குழப்பங்களை ஏற்படுத்தியுள்ளது. இனப்பிரச்சினை இல்லை என்று கூறி வந்ததற்கு மாறாக இனப்பிரச்சினையும் உண்டு, பயங்கரவாதப் பிரச்சினையும் என்ற பழைய பல்லவிக்கு இட்டுச்சென்றுள்ளது. அதாவது, இராணுவ ரீதியானதும், பேச்சுவார்த்தை ரீதியானதுமான இரட்டைத் தடத்தில் ஓடுகின்ற தந்திரோபாய நிலைக்கு அரசாங்கத்தை மீண்டும் கொண்டுவந்துள்ளது. எத்தனை தடங்களில் ஓடினாலும், அரசாங்கத்திடம் இராணுவத்தீர்வு காணும் ஒரே நோக்கே உள்ளது என்பதை நுணுகி ஆராய்ந்தால் புரியும்.

இராணுவத் தீர்வுக்கான தந்திரோபாயத் திட்டத்தில் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுதல், தென்தமிழீழத்தை ஆக்கிரமித்தல் என்பன முக்கிய இடத்தை வகிக்கின்றன. யாழ்ப்பாணத்தின் மீதான படையெடுப்பு, மழைகாலம் முடிந்தபின், மார்ச் - ஏப்பிரல் மாத காலங்களில் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்ததைப் பலவீனப்படுத்தும் ஒரு நடவடிக்கையாகவும் பூநகரி மீதான தாக்குதல் அமைந்தது. தமிழீழப் பிரதேசங்களில் முற்றுகையிடல், பரந்த நிலங்களைக் கட்டுப்பாட்டில் வைத்திருத்தல் என்பவற்றினால் அரசாங்கம் அடையக்கூடிய நட்டங்களையும், சாத்தியப்பாடு இன்மையையும் பூநகரித் தாக்குதல் அரசாங்கத்துக்கு உணர்த்தியிருக்கும். ஆயினும், தொடர்ந்து, அரசியல் காரணங்களுக்காகவும், இனவாத காரணங்களுக்காகவும் குடாநாட்டைக் கைப்பற்றும் நோக்குடன் அரசாங்கம் புதிய திட்டங்களை இடவும், அதனை நடைமுறைப் படுத்தவும் முயற்சிக்கும் என்பதைக் காட்டுவதாகவே, ஜெரி.டி. சில்வா என்ற உயர் இராணுவ அதிகாரியை வடபகுதிக்கு இராணுவ நடவடிக்கைகள் முழுமைக்கும் பொறுப்பாக நியமித்துள்ளது காட்டுகின்றது.

கிழக்கு மாகாணத்திலும் வவுனியாவின் சில பகுதிகளிலும் வைக்கவிருந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை அரசாங்கம் பின்போட்டுள்ளதானது, அரசாங்கத்தின் தடுமாற்றத்தையும், சாதகமான சூழ்நிலையை எதிர்நோக்கிய எதிர்பார்ப்பையும் தெளிவாகக் காட்டுகின்றது. அதேவேளை, கிழக்கில் புலிகள் அமைப்பைவிட்டு ஏராளமாக விலகுவதாகவும், கிழக்கு மாகாண இளைஞர்கள் வடபகுதிச் சண்டைகளில் ஈடுபடுத்தப்பட்டு பலிக்கடாவாக்கப் படுவதாகும் பிராந்திய ரீதியாக முரண்பாடுகளை வளர்க்கும் திட்டமிட்ட பிரச்சாரத்திலும் அரசு ஈடுபட்டுள்ளது. இராணுவ உயர்மட்டங்களிலும், அரசாங்கத்துக்கும் இராணுவத்துக்கும் இடையிலும் நிலவும் முரண்பாடுகள் எப்போது வெளிப்பட வெடிக்குமோ என்பதும் அரசின் தடுமாற்றத்திற்குரிய இன்னொரு காரணமாகலாம். மேலும், ஜனாதிபதி, பாராளுமன்றத் தேர்தல்களை எதிர்நோக்கியுள்ள அரசாங்கம், போரில் வெற்றி பெறவேண்டும் என்றோ, பிரச்சினையை தமக்குச் சாதகமான முறையில் தீர்க்க வேணும் என்றோ முயலுகின்ற அதேவேளை, எதிர்க்கட்சிகள், குறிப்பாக சிறிலங்கா சுதந்திரக்கட்சி, அரசாங்கத்தின் தோல்விகள் மீது, தனது அரசியல் இலாபத்தை அடைய முயற்சிக்கிறது. தாம் பதவிக்கு வந்தால் பிரச்சினையைத் தீர்ப்பதாக கூறும் சிறிலங்கா சுதந்திரக்கட்சி, பேசித் தீர்க்கப்போவதாக, தமிழ் மக்களுக்கு ஒரு வேடமும், சிங்கள தேசத்தைப் போருக்குச் சன்னதம் கொள்ளுமாறு சிங்கள மக்களுக்கு இன்னொரு வேடமும் போட்டுக்கொள்ளத் தொடங்கியுள்ளது.

மேலும், மாவீரர் தினத்தின் போதும், விசேடமாக பிரபாகரனின் பிறந்த தினமான கார்த்திகை 26ம் திகதியின் போதும், சிறிலங்காப் பகுதிகள் அனைத்தும் அதி உச்ச உஷார் நிலையில் வைக்கப்பட்டிருந்ததும், சகல அரசாங்க, தனியார் நிறுவனங்களும், பாடசாலைகளும் மூடப்பட்டு, சிங்கள தேசம் ஸ்தம்பித நிலையை அடைந்ததும் அரசாங்கத்தின் பலவீனமான நிலையையும் தற்காப்பு நிலைக்கு அது மிக மோசமாகத் தள்ளப்பட்டுள்ளதையும் எடுத்துக்காட்டியது.

இந்நிலையில், அரசாங்கம் சிங்கள மக்கள் மீதே பூரண நம்பிக்கை வைத்து தனது இராணுவ இலக்கை நோக்கி நடக்கத் தீர்மானித்துள்ளது. இவ்வடிப்படையில், மலையக மக்களின் ஒட்டுமொத்த வாக்குகளையும் அலட்சியப்படுத்தி, மலையக மக்களை ஒதுக்க அது தயங்காது என்பது புலப்பட்டுள்ளது. இது இலங்கைத் தொழிலாளர் காங்கிரசுக்கும், சிங்கள அரசாங்கத்துக்கும் முரண்பாடாய் வெடித்துள்ளது. இதனையும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி பயன்படுத்த முன்வந்துள்ளது. இத்தகைய அரசாங்கத்தின் போர்ப் போக்கிற்கு சிங்கள இனவாதப் பத்திரிகைகள் தூபம் போடவும், துதிபாடவுமே செய்கின்றன. எனவே, பத்திரிகைத் தணிக்கை எதையும் கொண்டுவரத் தேவையில்லை என்றும் அரசாங்கத்தால் உணரப்பட்டு, அதற்கான ஆலோசனைகளும் நிராகரிக்கப்பட்டுள்ளன. அப்படிப் பத்திரிகைகள், செய்தி ஊடகங்கள் மீது நடவடிக்கை எடுப்பதென்றால் குறிப்பிட்ட எதிர்க்கட்சிப் பத்திரிகைகள், தமிழ்ப் பத்திரிகைகள் ஆகியவற்றின் மீதான நடவடிக்கையாகவே இருக்கும்.

சிங்கள தேசம், அரசாங்கத்தின் பின்னால் அணிதிரளுமாறு கோரப்படும் நிலையில், சிங்கள அரசாங்கத்தின் போக்கு இராணுவத்தீர்வு ஒன்றே என்பது புலப்படும் நிலையில், விடுதலைப் புலிகள், தமிழ் மக்களை அணிதிரளுமாறும், ஆயுதமேந்துமாறும், உயிர்க்கொடை முதற்கொண்டு ஈகங்கள் செய்ய முன்வருமாறும், இராணுவ ஆக்கிரமிப்பை முறியடிக்க போர் நிலையில் தமிழீழத்தை முழுமையாக வைக்குமாறும் விடுத்த வேண்டுகோள் தாயகத்திலுள்ள தமிழீழ மக்களை மட்டுமல்ல, உலகெங்கணும் உள்ள தமிழ் மக்கள் அனைவரையும் நோக்கியதொன்றாகவே உள்ளது.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# தமிழீழ எழுச்சியில் சங்கமிக்க ஒரு சபதமெடுப்போம்



மாவீரர் நாள் தமிழீழ தேசத்தின் எழுச்சி நாள். தேச மக்களைத் தலை நிமிர வைத்த நாள். எவருக்கும் பணிந்து போகக்கூடாது; மக்களுக்காக மரணித்த மாவீரர்களின் இழப்பின் சோகத்தில் கூட தலை கவிழக்கூடாது எனச் சபதமிடும் நாள். போர்ப்பரணி பாடிய அப்புனிதர்களைப் போற்றிப் பரவும் நாள். தேசியவிடுதலைக்காக தங்கள் விலைமதிப்பற்ற உயிர்களை விலையாகக் கொடுத்த மாபெரும் மனிதர்களை வணங்கும் நாள். தமிழினம் சந்ததி சந்ததியாக சுதந்திரத்துடன் வாழ வேண்டும் என்பதற்காக தங்கள் சுயத்தை, தங்கள் காயத்தை அழித்துக்கொண்டவர்களை அஞ்சலிக்கும் நாள். பலவீனப்பட்டு, நலிவுற்றிருந்த தமிழீழ மண்ணுக்கு தங்கள் உயிர்க்கொடையால், உயிரும், உணர்வும், உரமும் ஊட்டியவர்களைத் தொழுதேத்தும் நாள்.

புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்களாகிய நாம் இந்நாளில் ஒரு விடயத்தை உணர்ந்து கொள்ள வேண்டும். கூட்டுத்தன்மை வாய்ந்த அரசியல் காரணத்துக்காக, ஒட்டுமொத்தமாக எம்மக்கள் மீது பிரயோகிக்கப்பட்ட அடக்குமுறையின் காரணமாகவே நாங்கள் அகதிகளாக வெளியே வந்தோம். எமது அகதி அந்தஸ்தோ, எமது தற்காலிக வதிவிடமோ நிரந்தரமானதல்ல என்பதும் நாம் உணர்ந்துள்ள விடயமே. எமக்குப் புகலிடமளித்துள்ள நாடுகள் எம்மைப் புறந்தள்ள முயற்சிக்கின்றன என்ற உண்மை ஒருபுறம் இருக்க, பெருமையும், நாகரிகச் சிறப்பும் மிக்க எம்மக்கள், எங்கெங்கோ சிதறுண்டு, நிரந்தர அடிமைகளாக அகதிகளாக வாழ விரும்பவில்லை என்பதும் உண்மையே. ஒரு தேசிய மக்கள் என்ற கூட்டான அடிப்படையில் சுதந்திரத்திற்கும், சமத்துவத்திற்குமான எங்கள் போராட்டம் எம்மண்ணிலேயே தவிர வேறெங்கும் நிறைவு பெறாது என்பதும் நாம் கற்றறிந்த விடயமே. நாம் புகலிடம் தேடிப் புகுந்த நாடுகளில் இவற்றைக் கனவிலும் நினைத்துக்கூடப் பார்க்க முடியாது என்பதே பரிதாபத்துக்குரியது.

ஆனால், இன்னொரு புறம், எமது மண்ணில் இன்னொரு அதிசயம் நிகழ்வதைக் காண்பீர்கள். அடக்குமுறைக்கு எதிரான கூட்டான மனஒருமைப்பாட்டையும், கூட்டான விடுதலைச் செயற்பாடுகளையும், கூட்டான சுதந்திர தாகத்தையும் கொண்ட எம்மக்களால் நடைபெறும் போராட்டத்தை நோக்குகின்றீர்கள். இந்தக் கூட்டுப் பிணைப்பு என்பது இன்று நேற்று ஏற்பட்டதல்ல. பல்லாயிரம் ஆண்டுகால வரலாற்றோடும், பண்பாட்டோடும், வாழ்வோடும் இணைந்தது; கலந்தது; மண்ணோடு ஐக்கியமானது; மனங்களின் சங்கமத்தால் உருவானது; காலப்போக்கினால் இறுகியது. ஒருங்கிணைந்த விடுதலையை அவாவுவது, உலகில் எங்கெங்கும் நெல்லிக்கனி போல் சிதறுண்ட மக்களையும் ஒருங்கிணைப்பது. பொது நலனுக்காக உயிரையும் கொடுத்துப் போராடுவது.

விடுதலைக்காகச் சிந்தப்படும் ஒவ்வொரு இரத்தத் துளியும் எம் அனைவருக்காகவுமே சிந்தப்படுகிறது. எமக்காகவே உயிர் இழக்கப்படுகின்றது. அனுபவிக்கும் வேதனைகளும், படும் காயங்களும், கொட்டும் வியர்வைகளும், வழியும் கண்ணீர்களும் எமக்காகவே என்பதை நாம் உணர வேண்டும். இப்போராட்டத்துக்கும் எனக்கும் சம்பந்தமில்லையென்று சொல்பவன் தன்னைத்தானே ஏமாற்றிக்கொள்கிறான்.

எமது மக்களினதும் போராளிகளினதும் உழைப்பினால் மட்டுமல்ல, உயிரினாலும், குருதியினாலும் உருவாக்கப்படும் சுதந்திரத் தாயகமே நிலையானது. உறுதியானது; நிரந்தரமானது. உடல்களைக் கல்லுகளாகவும், செங்குருதியைக் கலவையாகவும் கொண்டு கட்டப்பட்ட உறுதியான கட்டிடம் இது. அழகிய மனங்களைக் கொண்டு உருவாகும் மலர் வனம் அது. அதுதான் பாதுகாப்பு அரண்கொண்டு எழுப்பப்படும் எமது தாயகம்.

உயிரைக் கொடுத்து உருவாக்கப்படும் உறுதியான தேசத்தையும், அதன் நிரந்தரத்தையும், பாதுகாப்பையும் அதில் எமக்காக நாம் வளர்க்கப்போகும் சுபீட்சத்தையும் நாம் எண்ணிப் பார்க்கும் போது, தற்காலிகங்களும், கனவுகளும், மாயங்களும், போலிகளும், எமக்குச் சொந்தமில்லாத இரவல் நாடுகளும் எவ்வளவு அற்பமானவை என்பது புலப்படும். இங்கு எமது உயிர் மெல்லமெல்ல உறிஞ்சப்படுதலுக்கும், அங்கு எமது உயிரின் ஊட்டத்


www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

திற்காக உயிர்க்கொடை கொடுத்தலுக்குமுரிய இணையாத இடைவெளியை அறிந்துகொள்வோம்.

உயிர்கொடை கொடுக்கும் செயற்பாடு சாதாரண விடயமல்ல. அது வரலாற்றுத் தேவையையும், அதற்கான கடமையையும் உணர்த்தி நிற்கிறது. ஒரு இனத்தின் இருப்பையும், அதன் வளமான வாழ்வையும், அதன் சுதந்திரத்தையும் உத்தரவாதம் செய்யும் வரலாற்றுக் கடமை கொண்டது. அக்கடமையை உணர்ந்து கொண்டு, தங்கள் உயிர்த்தியாகத்தினால் அதிஉயர் அர்ப்பணிப்புக்குச் செயல் வடிவம் கொடுத்தோரே மாவீரர்கள். அதிலும், தங்கள் மரணத்தின் உருவத்தையும், நேரத்தையும் நிச்சயித்துக் கொண்டு களம் செல்லும் கரும்புலிகளின் தோற்றம் போராட்டத்தின் இன்னொரு பரிமாணத்தை வெளிப்படுத்தி நிற்கிறது. இந்த மாவீரர் தற்கொடையின் மகத்துவத்தையும், அதன் உட்பொருளையும், எம் அனைவரினதும் விடுதலைக்கான சக்தி அதிலிருந்து புறப்படுவதையும் நாம் உணர்ந்து கொண்டு, தமிழீழ எழுச்சிப் பிரவாகத்தில் நாமும் சங்கமமாக இன்றைய நாளில் சபதமெடுப்போம்.


**புலம்பெயர்ந்த தமிழீழ மக்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் சர்வதேசச் செயலகம் விடுத்த அறிக்கையிலிருந்து.**



# காவிய நாயகன் கிட்டு

காவியநாயகன் கிட்டு எனும் நூல் திரு. பழ. நெடுமாறன் அவர்களால் எழுதி வெளியிடப்பட்டுள்ளது. இந்நூலில் கிட்டுவினுடைய போராட்ட வாழ்க்கை வரலாறு பற்றியும் அவருடனான தனது நேரடி அனுபவங்களையும் ஆழ்ந்து அனுபவித்து வெளிப்படுத்தியுள்ளார். அவரின் போராட்ட வரலாறுகள் பற்றி பேசும் புகைப்படங்களும் பக்கத்திற்குப் பக்கம் போடப்பட்டுள்ளன. விளையும் பயிர் முளையிலே தெரியும் என்ற ரீதியில் கிட்டுவின் சிறுவயது வாழ்க்கையுடன் இந்நூல் ஆரம்பமாகிறது. மேலும் கிட்டுவை நவீன நாயகனாகவும், எல்லையற்ற பாசம் பொழிபவனாகவும், நல்ல ராஜதந்திரியாகவும், பல்முகக் கலைஞனாகவும், மக்கள் தலைவனாகவும், தலைவனின் தோழனாகவும் கண்டுள்ளார். கடலில் இந்திய அரசின் சதிக்கு 16.01.1993 அன்று பலியாகிவிட்ட தாளாச் சோகத்தில் மூழ்கிய திரு.பழ.நெடுமாறன் “இனமான உணர்வுள்ள தமிழர்களே உணர்வால் இணைவோம் வாருங்கள்” என இந்நூல் மூலம் அறைகூவல் விடுத்து நிற்கிறார்.

இந்நூலை தமிழக மக்களின் நெஞ்சங்களில் எரியும் தீயின் வெளிப்பாடாகக் கொள்ளலாம்.




## தலைவர் பிரபாகரனின் கருத்துத் தொகுப்பு

தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் அவர்களின் கருத்துக்களின் தொகுப்பு, நூல் உருவில் வெளிவந்துள்ளது. “எனது மக்களின் விடுதலைக்காக” என்ற தலைப்பில் கடந்த பத்து ஆண்டுகளாகத் தலைவர் பிரபாகரன் பத்திரிகைகளுக்கு வழங்கிய செவ்விகள் மற்றும் அவ்வப்போது தமிழீழ விடுதலைப் போராட்ட சூழ்நிலையை விளக்கி அவர்வெளியிட்ட அறிக்கைகள், சமூகப் பொருளாதார பண்பாட்டுப் பிரச்சினைகள் குறித்து அவர் வெளியிட்ட கருத்துக்கள் ஆகியன அடங்கியதாக இந்நூல் வெளிவந்துள்ளது. 315 பக்கங்களைக் கொண்ட இந்நூலில் தலைவனின் பல புகைப்படங்களும் இடம் பெறுகின்றன.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


# பூநகரித் தாக்குதலின் பூகம்ப அதிர்வுகள்

## கடல்வழித் தாக்குதல்

இத்தாக்குதலில் இன்னொரு முக்கியத்துவம் என்னவெனில், கடல்வழியாகத் தரை இறக்கப்பட்ட கெரில்லாப் போராளிகளால் நடத்தப்பட்டதாகும். எனவே இங்கு தமிழீழத் தரைப் படையினதும், கடற்படையினதும் ஒருங்கிணைக்கப்பட்ட செயற்பாடு நடந்துள்ளதை அவதானிக்க முடிகிறது. படகுகளின் போக்குவரத்தை கண்காணித்து அறிவிக்கும் ராடர் நிலையத்தின் மீது தாக்குதல் நடத்தி, அதனைக் கைப்பற்றிச் செயலிழக்கச் செய்ததோடு தாக்குதல் ஆரம்பமானது. நாகதேவன்துறை கடற்படை முகாம் மீதான தாக்குதலில் மேஜர் கணேசின் கரும்புலித் தாக்குதல் நடைபெற்றுள்ளது. ராடர் மீதான முதல் தாக்குதல், இன்னும் ஏராளமான விடுதலை வீரர்களைத் தாங்கிய படகுகள் பூநகரியை நோக்கி கிளாலிக் கடலினூடு வரவும், தரையிறங்குவதற்கும் வசதியாகவே நடைபெற்றுள்ளதாக ஊகிக்க முடிகிறது. கிளாலி நோக்கிய சிறிலங்கா இராணுவப் படை எடுப்பின்போது 2500 படகுகள் சேவையில் இருந்ததாகவும், தாக்குதல் நடைபெறப் போவதை ஏற்கனவே அறிந்து கொண்ட விடுதலைப் புலிகள் பழுதான 200 படகுகளைத் தவிர ஏனையவற்றை அப்புறப்படுத்தி விட்டதாகவும் தெரிகிறது. எனவே, ஏராளமான படகுகள் பூநகரி மீதான தாக்குதலுக்குப் போராளிகளை ஏற்றி, இறக்கப் பயன் படுத்தப்பட்டிருக்கும் என்பதும் வாஸ்தவமே.

## மின்னல் வேகத்தாக்குதல்

சிறிலங்காவின் கஜபா படைப் பிரிவு, இலகு ஆயுதத் தரைப்படைப் பிரிவு ஆகியவற்றின் 2 பற்றாலியன்கள், கடற்படையினர் என 2000 பேர் முகாம்களில் நிலைகொண்டிருந்துள்ளனர். இத்தகு முதல்தர தளத்தின்மீது அதிகாலை 1.45 மணிக்கு ஆரம்பித்த தாக்குதலானது 8.00 மணிக்கு இரண்டு முகாம்களையும் கைப்பற்றியதுடன் முடிவடைந்துவிட்டது என்பது உலக சாதனையாகும். கைப்பற்றுதலும், கைப்பற்றிய ஆயுத தளபாடங்களை அகற்றுதலும், தப்பியோடிய இராணுவத்தினரைத் தேடி அழித்தலும், காயப்பட்ட போராளிகளை வைத்தியசாலைக்கு அனுப்புதலும் என்ற ரீதியில் 3 நாள் இராணுவ நடவடிக்கை என்ற ரீதியில் இத்தாக்குதல் விடுதலைப் புலிகளால் திட்டமிடப்பட்டிருந்தது. அத்திட்டமிட்டவாறே, விடுதலைப் புலிகள்




வளவன்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

3ம் நாளே கைப்பற்றித் தரைமட்டமாக்கப்பட்ட தளத்தைவிட்டு நீங்கிவிட்டனர். மூன்று நாட்களும் கடற்புலிகள் கடல்நீரேரியின் மேற்குப் பகுதியில் நின்ற 4 டோரா பீரங்கிப் படகுகள், 2 கப்பல்கள் மற்றும் தரையிறங்கும் படகுகளைத் தாக்கியதோடு, எடுத்துக்கொண்ட பணி முடியும் வரை, கடல் நீரேரியை தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்துள்ளனர். பூநகரியின் ஒடுங்கிய வடக்குநோக்கித் தள்ளப்பட்ட படையினரை சிறிலங்கா அரசாங்கம் காப்பாற்ற முடிந்துள்ளது. சிறிலங்கா அரச கணக்கின் பிரகாரம் 550 பேரானவரே மீட்கப்பட்டுள்ளனர். இக்கணக்கின் பிரகாரம் பார்த்தால் 1000க்கு மேற்பட்ட இராணுவத்தினர் விடுதலைப் புலிகளின் தாக்குதலினால் கொல்லப்பட்டுள்ளனர் என்பது புலப்படுகிறது. இதனை விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடமும் உறுதிசெய்துள்ளது.

இப்பகுதியை விட்டு விடுதலைப் புலிகள் நீங்கியது, யுத்த தந்திர விதிகளுக்கு உட்பட்ட செயலாகவே உள்ளது. வெளியான, பற்றைக் காடுகளே உள்ள சதுப்பு நிலமான சாதகமற்ற ஒரு பகுதியில் ஒரு கெரில்லா அணி நிலைகொள்வது தற்கொலைக்கு ஒப்பான ஒன்றாகவே இருக்கும். ஒரு மரபுப் படையினராலேயே தக்கவைத்துக் கொள்ளக்கூடிய இந்நிலப் பகுதியைப் பிடித்து நிலைகொள்ளுதலோ, அந்நிலப்பகுதிக்காகச் சண்டையிடுதலோ கெரில்லாப் போராளிகளுக்கு அழிவையே ஏற்படுத்தும். இவ்வழிவுகளை மரபு ரீதியான பெரும் சிங்கள இராணுவம் ஏற்றாலும் பாரிய பாதிப்பு ஏற்படப்போவதில்லை. ஆனால், சிறியளவிலான கெரில்லா இராணுவத்திற்கு இத்தகு இழப்புக்கள் ஈடுகட்ட முடியாத ஒன்றாக இருக்கும். ஆயினும், ஒரு மரபு ரீதியான சிறிலங்கா இராணுவப் பெரும் படையணியே இப்பகுதியில் தோல்வியைத் தழுவிக்கொண்டது முக்கியமாகும். எனவே, மீண்டும் இப்பகுதியில் சிறிலங்கா அரசாங்கம் நிலைகொள்வது குறித்து இரு முறையல்ல, பலமுறை யோசிக்கும்; இதுபோன்ற இன்னொரு தாக்குதலுக்கு உள்ளாகும் ஆபத்தையும் அது உணர்ந்தே இருக்கும். எனவே ஆனையிறவு, பூநகரி ஆகிய பாதைகளை இறுக மூடிவிட்டதாக எண்ணியிருந்த சிறிலங்கா அரசுக்கு ஒரு கதவு தகர்க்கப்பட்டதானது பெரும் அடியாகவே உள்ளது. சுற்றிவளைத்தல், பொருளாதாரத் தடையை இறுக்குதல், போக்குவரத்தைத் தடைசெய்தல் போன்ற விடயங்களை நடைமுறைப் படுத்துதலில் பூநகரியைப் பயன் படுத்தல் இனிமேல் சிக்கலான ஒன்றாகவே இருக்கும்

## கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

அரசாங்க கணிப்பின் பிரகாரம் 30 கோடி ரூபாவுக்கு மேற்பட்ட ஆயுதங்களை அரசாங்கம் பறிகொடுத்துள்ளது. கிளாலிச் சண்டையின்போது, டாங்கிகள் அழிக்கப்பட்டனவாயினும், டாங்கிகள் இயங்குநிலையில் கைப்பற்றப்பட்டது, விடுதலைப் புலிகள் இனிமேல் டாங்கிகளைச் சண்டையில் பயன் படுத்தும் சந்தர்ப்பத்தைக் கொடுத்

## தப்பி ஓடிய 3000 படையினர்

### அரசால் துரத்திப் பிடிப்பு

சிறிலங்கா இராணுவத்திலிருந்து தப்பி ஓடிய படையினர் தேடிக்கண்டுபிடிக்கப்பட்டு வடக்கு கிழக்குப் பகுதிகளுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர்.

இதுவரை தப்பியோடிய படையினருள் 18 படை அதிகாரிகளும், 3000 படையினரும் தேடிக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு உடனடியாக மன்னிப்பு அளிக்கப்பட்டு முன்னர் வேலை செய்த வடக்கு கிழக்கு பகுதிகளுக்கு அனுப்பிவைக்கப்படுகின்றனர். இவர்கள் தப்பி ஓடியதற்காக பாதுகாப்புச் சட்டத்தின்படி தண்டிக்கப்படவேண்டும். ஆனால் இவர்கள் முன்னர் வேலை செய்த இடங்களுக்குச் செல்ல சம்மதித்ததனால் அவர்களை மன்னித்து அவ்வவ் இடங்களுக்கு அனுப்பி வைக்கும்படி இராணுவத் தளபதி உத்தரவிட்டுள்ளார்.




www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

துள்ளது. மேலும், விடுதலைப் புலிகளிடம் தான் இழந்ததாக கூறும் 120 மி.மி. பீரங்கி ஏவுகணைகள் தமிழீழப் பகுதிகளில் உள்ள முகாம்களை, விமானத் தளங்களைப் பதம்பார்க்கத் தொடங்கும் என்பதோடு, முகாம்கள் மீதான தாக்குதல்களையும் எளிதாக்கும். சிறிலங்கா அரசாங்கம், விடுதலைப் புலிகளுக்கும் சேர்த்தே ஆயுதங்களை வாங்குகிறது என்ற நகைச்சுவையை உறுதிப்படுத்துவதாக உள்ளது.

## அரசியல் விளைவுகள்

சிறிலங்கா அரசாங்கத்தையும், இராணுவத்தையும் மிகுந்த நெருக்கடிக்கு இத்தாக்குதல் உள்ளாக்கியுள்ளது. சிங்களத் தலைமையின் தகுதிமீது சிங்கள மக்களை நம்பிக்கை இழக்க வைத்துள்ளது. இளைப்பாறிய விமானப்படைத் தளபதி ஹரி குணத்திலகா கூறியது போல், இராணுவத்தின் உறுதியை இது வெகுவாகப் பாதித்துவிட்டது. இதன் எதிரொலியாக சிங்கள தேசத்தின் மன உறுதி சிதறடிக்கப் பட்டுவிட்டது. இவ் மனஉறுதி சீர்குலைவின் விளைவு, அரசாங்கமும் இராணுவமும் மேலும் முரண்படவும், ஒருவருக்கொருவர் வாக்குவாதப்படவும் வழிவகுக்கும். இது மேலும் சிங்கள தேசத்தில் குழப்பத்தையும், பலவீனத்தையுமே ஏற்படுத்தும். எனவே, சிறிலங்கா அரசாங்கமும் ஜனாதிபதியும் இனப்பிரச்சினையே இல்லை என்று கூறுவதையும், போர் வெற்றி குறித்து கனவு காணுவதையும் விடுத்து, தமிழ் மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமையை அங்கிகரித்து விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தி பிரச்சினையைச் சமாதானமாகத் தீர்க்க முன்வருவார்களா என்பது கேள்விக்குறியே. சிங்கள இனவாதம் தோல்விகளாலும் திருந்தும் என்று கூறமுடியாது. சிங்கள இனவாதம் போர்முனையில் இறுதித் தோல்வியைச் சந்திக்கும் வரை தொடர்ந்து தலைவரித் தாடியபடியே இருக்கும் என்பது மிகக் கசப்பான உண்மையாக உள்ளது.

***


"வடக்கு கிழக்குப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு கடுமையான அரசியல் போக்குடன் இராணுவ அணுகுமுறையையும் இணைத்து உறுதியான இராணுவத் தீர்வைக் காண்பதற்கு அரசு முயன்று வருகிறது".

அரசு தற்பொழுது ஆபத்தான வழியைப் பின்பற்றி வருகிறது. விரைவில் பொருளாதார வளர்ச்சி ஏற்படும் என்ற நம்பிக்கை ஒருபுறமும் அரசுப் பணம் பெருமளவில் செலவானாலும் யுத்தத்தை மேலும் முனைப்பாக நடாத்துவது என்பது மறுபுறமுமான அரசின் இவ்வாறான போக்கில் ஆபத்துக்கள் அதிகமாக உள்ளன.

கடந்தசில மாதங்களாக வட கிழக்கு யுத்தம் தொடர்பாக அரசின் போக்கு கடும் போக்காக இறுகி வருகிறது. இனப்பிரச்சினையே இங்கு இல்லை என்று ஜனாதிபதி கூறிவிட்டார்.

டி.பி. விஜயதுங்கா ஒரு கடும் போக்காளராக சிங்கள, பௌத்த மதக் கொள்கைகளே நாட்டின் தலையாய கொள்கைகளாக இருக்க வேண்டும் என்ற கருத்தில் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார். பௌத்தமதக் கோட்பாடுகளை பாதுகாக்க வேண்டும் என்றும் அரசு உறுதி பூண்டுள்ளது. அடுத்த ஆண்டு நடைபெற உள்ள தேர்தலில் பெரும்பான்மை இனத்தவரைக் கவருவதற்காக வகுக்கப்பட்டிருக்கும் தந்திரமே இது.

பி.பி.சி தனது கண்ணோட்டத்தில்




www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்





# போராட்டம்

- அடேல் ஆன் -

*************

பூமியின் இதயத்திலிருந்து
ஒரு ஓலம் எழுகிறது.
கொடுந்துயரில் விதும்பி
எமது தேசம் அழுகிறது.
நாட்டின் உடல் சிதைந்த உதிரம்
நதியாக கரைபுரண்டு ஓடுகிறது.
நிலம் சிவந்து நடுங்க
நெருப்பு விதைகள்
வாய்பிளந்து வெடிக்கிறது.
மண்ணின் மடியில்
புதுமுளைகள் தளிர்க்க
நம்பிக்கை பிறக்கிறது.

வெய்யிலில் வளர்ந்து
வெள்ளத்தில் நீராடி
புயலில் விளையாடி
தலைநிமிர்ந்தன தளிர்கள்.
தேசத்தின் அடிவானில்
உதிக்கும் சூரியனின்
இரத்தம் பெருக்கெடுக்க
புதிய வரலாறு
உதயம் பெற்றது.
பெருமைபெற்ற பழமை
உறுதிபெற்ற புதுமையாக
மறுபிறப்பு எடுத்தது.

சுதந்திர தீ
சுவாலையாக எரிந்து
பூமியைச் சுடுகிறது.
போராளிகளின் மூச்சு
எரிமலையாய் கொதிக்கிறது.
சாவின் கரங்களால்
தணிக்க முடியாத
நெருப்பு அலைகள்
வீறுகொண்டு எழுந்து
விடுதலை முரசு கொட்ட
எமது தேசம்
விழித்தது.

*(ஆங்கிலத்திலிருந்து
மொழிபெயர்க்கப்பட்டது)*

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# ஒரு மலையின் சரிவு

அவனுடைய சாவு ஓர் இலையின் உதிர்வு அல்ல; ஒரு மலையின் சரிவு ஆகும்.


மேஜர் கணேஸ் தமிழீழ விடுதலைப் போர் வரலாற்றில் மேனி சிலிர்க்க வைக்கும் ஒரு அத்தியாயம் ஆகிவிட்டான்.

பெருத்த மீசை, தடித்த உதடுகள், பருத்த மார்பு, களத்தில் வெடித்த எரிமலையாய் உலா வந்தவன் கணேஸ்.

மூதூர், ஆறுகளால் துண்டு துண்டாகி புவியியல் நிலையில் ஆங்காங்கே சிதறிக்கிடக்கும் நிலப் பரப்பு; கொலைவெறிச் சிங்கள வரின் குடியேற்றப்பகுதி; இஸ்லாமியத் தமிழருக்குப் பாதுகாப்பு என்ற பெயரில் அவர்கள் வாழ்வையே சூறையாடும் முஸ்லீம் ஊர்காவல் வெறிப்படையின் இருண்ட கூடாரம்; 9 இராணுவ முகாம்களாலும் 3 அதிரடிக் காவல் நிலையங்களாலும் வளைக்கப்பட்ட தமிழீழத்தின் முள்வேலிப் பகுதி. அங்கேதான், விடுதலைப் புலிகள் இயக்கத்தை வித்திட்டு வளர்த்தான் கணேஸ்.

1981ம் ஆண்டு தலைவர் பிரபாகரனைச் சந்தித்து விடுதலைப் புலிகள் இயக்கத்தில் சேர்ந்தபோது அவனுக்கு வயது இருபதுதான். ஆனால் அப்போதே அவன் கண்களில் நெருப்பின் அலை பொங்கிற்று. ஒன்றாய்ப் படித்த காலத்தில் ஆசீர் சீலனோடு சேர்ந்து வளர்த்துக்கொண்ட விடுதலை உணர்வுகள் ஆழப்பதிந்திருந்தன.

தளபதி சீலனுக்குப் பக்கத்தில் அவன் ஒரு வீரனாய்க் களத்தில்



**மேஜர் கணேஸ்**
*சித்திரவேல் சிற்றம்பலம்*
**பேராறு, கந்தளாய்**
**பிறப்பு: 09.04.1961**
**வீரச்சாவு: 05.11.1986**

நின்ற காலம் உண்டு. அந்த நாட்கள் கணேஸின் வாழ்க்கையில் அவன் பாடம் கற்ற நாட்களாகும்.


மீசாலை முற்றுகையில் தளபதி சீலன் களத்தில் மீளாத்துயில் கொண்ட நிகழ்ச்சி கணேஸ் நெஞ்சில் மின்னலின் கொடிய வீச்சாயிற்று. தன் இனிய பள்ளிக் கூட நண்பனின் அந்தப் பெரிய சாவை அவன் என்றும் மறந்ததில்லை.

நெல்லியடியில்தான் அவனுடைய முதல் களப் போர். இங்கேதான் 02.07.1982 அன்று, ரோந்துப் பொலிஸ் படையினரைச் சாகடித்து, வீறுகொண்ட தன் போராட்ட வரலாற்றின் முதல் அத்தியாயத்தை எழுதினான். ஒப்பில்லாத அந்த மாவீரன் தொடர்ந்து கண்ட களங்கள் ஒன்றா? இரண்டா? சாவகச்சேரி பொலிஸ் நிலையத் தாக்குதல், உமையாள்புரம் இராணுவ வாகனங்கள் மீதான அதிரடி, 13 இராணுவ வெறியர்களை முதன்முறை பலி கொண்ட திருநெல்வேலி வரலாற்றுப்போர், களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலையத் தாக்குதல், திருக்கோவில் நீதிமன்றத்தில் துரோகி ஒருவன் மீதான துப்பாக்கிப் பிரயோகம், ஈச்சிலம்பற்றை முற்றுகைத் தகர்ப்பு, கட்டைப் பறிச்சான் கண்ணிவெடித்தாக்குதல், பாலம்பட்டாறு இராணுவ மோதல், புலிகள் வரலாற்றில் முதன் முதல் இராணுவத்தின் எல்.எம்.ஜி. வகைத் துப்பாக்கியைக் கைப்பற்றிய பட்டித்திடல் கவசவண்டி தகர்ப்பு, இறால்குழி சுற்றிவளைப்பு மீறல் போர், 3ம் கொலனி இராணுவ நேரடி மோதல், வாகரை கண்ணிவெடி அதிரடித் தாக்குதல், தெஹிவத்த பொலிஸ் கொமாண்டோக்கள் கடத்திச்சென்று நடுக் காட்டில் கற்பழிக்க முயன்ற தமிழ்ப் பெண்களை மீட்டெடுத்த தீரப் போர், எமது விடுதலை வரலாற்றில் முதல் தடவை சிங்கள ஏகாதிபத்தியத்தின் ஹெலிகொப்டர் போர் விமானத்தைச் சுட்டு வீழ்த்திய கூனித்தீவு முற்றுகை உடைப்பு, சம்பூர் யுத்தம், வெருகல் விடுதலைப் புலிகள் முகாம் வளைப்பு முயற்சி முறியடிப்பு. ஆம்..... கணேஸ் புகழின் எல்லை கடந்த மாவீரன்.

தமிழீழத்தின் வடக்கெல்லைக் கிராமங்களில் ஒன்றான காரைநகர் தொடக்கம், தெற்கெல்லைக் கிராமங்களில் ஒன்றான திருக்கோவில் வரை களங்கள் பார்த்த கணேஸ், தமிழீழம் முழுவதையும் தன் இரண்டு கால்களால் அளந்தான். யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, திருகோணமலை,

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# துணிவுக்கும் தாக்குதலுக்கும் பெயர் பெற்ற கடற்புலிகள்

**"கடற்புலிகள் துணிவுக்கும் தாக்குதலுக்கும் பெயர்பெற்றவர்கள். புலிகளின் படகுகளை வழிமறித்துத் தாக்கும்போது அவதானத்துடன் நடக்க வேண்டும். இழப்புக்களின் மத்தியிலும் கடற்படையின் ரோந்துக் கப்பல்கள் மீது றொக்கட் தாக்குதலை நடாத்த கடற்புலிகளின் படகுகள் ரோந்துக் கப்பலில் இருந்து சுமார் 75 மீற்றர் தூரம் வரை நெருங்கி வருவதாக யுத்த முனையிலிருந்துவரும் இராணுவத் தகவல்கள் தெரிவிக்கின்றன."**

**இராணுவ விமர்சகர் றோகான் குணசேகர ஐலண்ட் பத்திரிகையில் எழுதிய கட்டுரையிலிருந்து.**

மட்டக்களப்பு என்று நீண்டுகிடந்த தமிழீழத்தை இணைத்து நின்ற அவன் செயல் வடக்குக்கும் கிழக்குக்கும் வேலிபோட நினைப் போருக்கு வரலாறு கொடுத்த சரியான அடியாகும்.

கந்தளாய் என்னும் கிராமத்தில் எளிமையான குடும்பத்தில் பிறந்த கணேஸ் ஆடம்பரம் இல்லாதவனாய் எளிமையானவனாகவே கடைசிவரை வாழ்ந்தான். புலிகள் அவனை விரும்பினார்கள் என்று சொல்வதை விட அவனைப்போல் இருக்க விரும்பினார்கள் என்பதே, பொருத்தமானது.

கூனித்தீவின் அழகான உப்பாற்றங்கரையில், புலிகள் அவனுக்குப் பக்கத்தில் உட்கார்ந்து மகிழ மகிழப் பேசுவார்களே! வெருகல் மண்ணுக்குப் பச்சை வண்ணம் பூசும் வயல்களில் புலிகளின் கைகளைப் பற்றியபடியே சிரிக்கச் சிரிக்கப் பேசி அவன் உலா வருவானே ஓ!.... அந்த நாட்கள் மிக மிக இனிமையானவை.

இஸ்லாமியர், இஸ்லாமியர் அல்லாதார் இடையே மதக்கலவரத்தை ஏற்படுத்தித் தமிழினத்தைப் பிரிக்கச் சிங்கள ஆட்சியாளர் முனைந்த ஒரு சந்தர்ப்பத்தில் கலவரத்தை நிறுத்த மூதூர் நகருக்கு பிரசைகள் குழுவை அனுப்பினான் கணேஸ். அக்குழுவைக் கூலிப்படையினர் கைதுசெய்தபோது, போராடி அவர்களை அவன் மீட்ட களப்போர், இன்னொரு மெய் சிலிர்க்கும் வரலாற்று நிகழ்வே. புலிகளுக்குப் பக்கத்தில் மட்டுமல்ல மக்களுக்குப் பக்கத்திலும் அவன் நெருக்கமாகவே நின்றான்.

சாவு அந்த மாவீரனைச் சந்தித்த நாள் கொடுமையானது!

திருக்கோணமலை மாவட்டத்திலுள்ள பெரிய பாலம் என்ற இடத்தில், 05/11/86 அன்று 4 மணி அளவில் நிகழ்ந்த இராணுவத்தின் சுற்றிவளைப்பில், மேஜர் கணேஸ், நெருப்பின் நடுவில் ஐந்து ஆண்டுகள் நின்று விளையாடிய விடுதலைப் புலி நேர் நின்று எதிரிகளை மோதி நிமிர்ந்த தலையோடு மரணத்தை ஏற்றுக் கொண்டான்.

தமிழீழத் தலைவர் பிரபாகரனின் மாபெரும் துப்பாக்கிகளில் ஒன்று மௌனத்தைத் தழுவிற்று.

ஓ...... கணேஸ்!......

நீ போய்விட்டாயா? இல்லை....!

அகதிகள் முகாமில் இருந்து உன்தாய் ஆசையோடு உனக்கென்று சமைத்துக் கொடுத்த சோற்றுப் பொட்டலத்தோடு, உன் தந்தை பயந்து பயந்து உன்னைக் காண வருவாரே......

அந்தச் சோற்றுப் பொதியை அவிழ்த்து வைத்து ஒவ்வொரு பிடியாய்ப் பிடித்து நீ புலிகள் வாயில் ஆசையோடு ஊட்டுவாயே!

நீ ஊட்டிய சோறு எங்கள் உடலில் இரத்தமாகிவிட்டதையா.


நடக்கிறோம், தொடர்ந்து நடக்கிறோம்......

அதே உப்பாற்றங்கரை...... அதே வயல்வெளிகள்.....!

நன்றி: விடுதலைப் புலிகள்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்




*'சாலையோரம் ஆலைகளும் சோலைகளும் நிறைந்த எங்கள் தமிழீழம் இது.'*

ஓவியர் சு. செம்மலையான்

சு. செம்மலையான் ஒரு போராளியாகவும் ஓவியத்தில் ஆர்வமுள்ள கலைஞனாகவும் விளங்குகிறார். மாவீரர்களின் தியாகமும், தீயாய் பற்றி எரிகின்ற விடுதலை உணர்வும், ஈக உணர்வும் இவரது ஓவியங்களில் முனைப்புக் கொள்கின்றன. நிறப் பென்சில்களையும், நிறக் கட்டிகளையும் கொண்டே இவர் தனது கூடுதலான ஓவியங்களுக்கு வர்ணம் தீட்டுகிறார்.

1992ம் ஆண்டு மாவீரர்நாள் சுவரொட்டிக்காக இவரது ஓவியமும் தேசியத் தலைவர் அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டது இங்கு குறிப்பிடத் தக்கது.



## தொடுவானம் தூரத்தில் இல்லை

என் அன்பே
அழுவதை நிறுத்து!
நீர்வழி கண்ணீர்த்தேக்கம்
கரை கட்டி கடலும்
உப்புக் கரிக்கும்.
உன் நெஞ்சின் சுடும்வெப்பம்
கரை மணலும் வெந்து வேகும்.

இங்கே தொலைத்தது
உன் அப்பனையும், ஆத்தாளையும்
மட்டுமல்ல,
உன் சுதந்திரத்தையும் தான்.
தொலைந்தது தொலைய
மிஞ்சி இருக்கிறது
உன் தன்மான உணர்ச்சி.

காலம் கரையை கட்டியதில்லை.
அதனால் தானே
கடலலைகள் கரையை
ஓங்கி அடிக்கின்றன.
அஃறிணைகளே உணர்வை
ஓங்கி காட்ட
உயர்திணை உன்பலம்
உனக்குத் தெரியாதா?

சிங்கவேட்டைக்கு சிலிர்தெழும்பு
"பயப்படாதையடா; எங்கட கடல்
எங்கட கடற்கரை
நான் இருக்கிறன்."
அதனால் தொடுவானம் தூரத்திலில்லை.

*ந. முரளிதரன், சூரிச்*

*புரட்டாதி, 1993 மாத எரிமலையில் வெளிவந்த புகைப்படத்திற்கான கவிதை.*

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்







# புலோப்பளைச் சமரில் அழிக்கப்பட்ட ரி-55 ரக டாங்கிகள்



'யாழ்தேவி' இராணுவ நடவடிக்கையின் போது புலோப்பளையில் ரீ_55 ரக டாங்கிகள் விடுதலைப் புலிகளால் தாக்கி அழிக்கப்பட்டன. கவச வாகனங்கள் சகிதம் பல்லாயிரக் கணக்கான இராணுவத்தினர் கிளாலியை நோக்கி படையெடுப்பை மேற்கொண்ட போதே இவ் டாங்கிகள் அழிக்கப்பட்டன. விடுதலைப் புலிகளால் விசேடமாக உருவாக்கப்பட்ட டாங்கி எதிர்புப் படையணியினரே இத்தாக்குதலை மேற்கொண்டிருந்தனர். டாங்கி எதிர்ப்புப் பீரங்கிகளாலும், ஆர்.பி.ஜீ. றொக்கட் லோஞ்சரைக் கொண்டும் மேற்கொண்ட தாக்குதலில் டாங்கிகள் அழியுண்டு கிடப்பதை நீங்கள் இப்புகைப்படங்களில் காண்கிறீர்கள். ரீ_55 ரக டாங்கி, பூநகரி இராணுவத் தளம் மீதான தாக்குதலிலும் விடுதலைப் புலிகளினால் கைப்பற்றப்பட்டது இங்கு குறிப்பிடத்தக்கது.

'களிறு எறிந்து பெயர்த்தல் காளைக்குக் கடனே' என்ற புறப்பாடல் போல் நவீன யுத்தத்தில் டாங்கியைச் சிதைத்தல் புலிவீரனின் பெருமைக்குரிய செயலாக விளங்குகிறது.




www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# துணிச்சல் மிக்க போர்க்களச் செய்தித்துறை

போர்க்களத்தில் எழுத்தாளர்கள், இலக்கியதாரர்கள், கலைஞர்கள், புகைப்படக் கலைஞர்கள். நேர் நிற்றல் என்பது மகத்தானதே. போராளிகளுக்கு இணையானவர்களாக அவர்கள் செயலாற்றுதல் நிதர்சனத்தை மக்களுக்கு நேர் தரிசனமாக்குகிறது.



தமிழீழ கள வரலாற்று நிகழ்வுகளை வீடியோ படமாக்குவதில் நிதர்சனம் வீடியோ படப்பிடிப்புப் போராளிகள் செயலாற்றி வருகின்றார்கள்.

அண்மையில் நடந்த வரலாற்றுப் புகழ் வாய்ந்த புலோப்பளைச் சமரில் விடுதலைப் புலிகளின் அதிரடித் தாக்குதல் அணியுடன் அவர்களும் களம் இறங்கினர். பல்லாயிரக்கணக்கான இராணுவத்தினரை வெட்டை வெளியில் திடீரென விடுதலைப் புலிகள் எதிர் கொண்ட போது, இராணுவம் தயார் நிலைக்கு வர முடியாத பேரதிர்ச்சி நிலைக்குள் அமிழ்ந்தது. அவர்களின் தந்திரோபாயமே அவர்களைப் பலி கொண்டது. மரபு ரீதியான இராணுவம், மரபு ரீதியான ஆயுத தளபாடங்களைக் கொண்டு எதிரியை வெட்ட வெளியில் சண்டைக்கிழுத்து ஏராளமான எதிரியைக் கொல்லும் போர்த் தந்திரோபாயத்தை விடுதலைப் புலிக் கெரிலாக்கள் இராணுவத்தினர் மீதே பிரயோகித்ததானது அதிர்ச்சித் தாக்குதலாய் அமைந்தது. பல ஆயிரக் கணக்கான இராணுவத்தை வெட்டை வெளியில், நூற்றுக் கணக்கான விடுதலைப் புலிகள் எதிர் கொண்டமை, விடுதலைப் புலிகள் போர் ஆற்றும் திறனின் சிகரமாக இருக்கின்றது. வெட்ட வெளியில் எதிரி கண்டுகொள்ள முடியாதவாறு தம்மை உருமறைப்புச் செய்து கொண்டதும், எதிரி சற்றும் சிந்திக்க முடியாதவாறு விடுதலைப் புலிகள் எதிர் கொண்டு அவர்களுக்கு அதிர்ச்சி ஏற்படுத்தி தாக்கியமையும் மிகத் திறன் வாய்ந்த போர்க்கள உத்திகளாக அமைந்தன. இதைத் தவிர, இராணுவம் பின்வாங்கி ஓடும் காட்சிகளும் படமாக்கப்பட்டிருந்தன.

மேலும் இச்சமரில் இரு டாங்கிகள், R.P.G. தாக்குதலினால் பற்றி எரியத் தொடங்கியதும் ஏனைய கவச வாகனங்கள், டாங்கிகள் பின்நோக்கி வேகமாக ஓடிய ஓட்டமும் வீடியோவில் பதிவாக்கப்பட்டிருக்கின்றது.

எந்த ஒரு சண்டையிலும் எடுக்கப்படாத காட்சிகளை இதில் படமாக்கியிருக்கின்றார்கள்.

சிங்கள இராணுவத்தின் அச்ச மனோபாவம், அவர்களது மனநிலை, அவர்களின் தந்திரங்கள், போர் உத்திகள், அவர்களின் பாவனையில் உள்ள ஆயுதங்கள், போரின் திறன், அவசர நேரத்தில் அவர்கள் திட்டமிட்டு செயலாற்ற முடியாத நிலை போன்ற பல இராணுவப் பலவீனங்களை அவதானிக்கக் கூடியதாகவும் ஆராய்ச்சிக்கு உட்படுத்தக் கூடியதாகவும் படப்பிடிப்பை மிகத் துணிச்சலோடு மேற்கொண்டார்கள்.

இந்த கள நிதர்சனத்தை மக்களுக்கு நேர் தரிசனமாக்கும்போது இரு வீடியோப் படக் கலைஞர்கள் வீர மரணம் அடைந்தார்கள். அவர்களுக்கு எமது வீரவணக்கங்கள். இரு கமராப் புகைப்பட கலைஞர்கள் காயமுற்றார்கள். சிலமணி நேரம் நடந்த இவ் அதிரடித் தாக்குதலின்போது கமராவும் முன்னேறி அற்புதமான மேலும் பல சண்டைக்காட்சிகளை துல்லியமாக படமாக்கியிருந்தது.

**ஒரு போராளியின் ஓலையிலிருந்து**

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# தமிழீழத்தின் முதலாவது வீடியோ சஞ்சிகை

– ரகுராம் –

தகவல் தொடர்புச் சாதனங்களின் வளர்ச்சியும் ஆற்றலும் அதிகரித்துச் செல்ல, செல்ல உலகம் குறுகியதாகி வருவதாக அறிவியலாளர்கள் கூறுகின்றனர். அச்சு ரீதியான தொடர்புச் சாதனங்களின் (Print Media) வளர்ச்சி, இன்று இலத்திரனியல் தகவல் தொடர்புச் சாதனங்களின் (Electronic Media), செய்மதித் தொடர்பு வரையான வளர்ச்சியாகி, பல்கிப் பெருகி நிற்கின்றன.

தகவல் தொடர்புச் சாதனங்கள்; பத்திரிகைகள் போன்ற கட்புல சாதனங்களாகவும், வானொலி போன்ற செவிப்புல சாதனங்களாகவும், தொலைக்காட்சி போன்ற கட்புலமும் செவிப்புலமும் இணைந்த சாதனங்களாகவும் இன்று காணப்படுகின்றன. செக்கோஸ்லாவியாவில் நடாத்தப்பட்ட ஆய்வொன்றின் பிரகாரம், செவிப்புலன் மூலமாக 11 வீதமானோரும் கட்புல, செவிப்புல இணைந்த சாதனங்கள் மூலமாக 93 வீதமானோரும் அறிவு பெறுவதாக காணப்படுகின்றது. மேலும், கேட்கும் தகவல்களில் 20 வீதம் மனதில் பதிவதாகவும், கேட்பதிலும் பார்ப்பதிலுமான தகவல்களில் 50 வீதம் மனதில் பதிவதாகவும் இவ்வாய்வு கூறுகிறது.

கட்புல, செவிப்புல சாதனங்களின் வளர்ச்சி இன்று வீடியோ சஞ்சிகைகளின் வளர்ச்சி வரை உருப்பெற்றிருக்கிறது. சாதாரண சஞ்சிகைகளில் காணப்படும் பல்வேறு அம்சங்களை தாங்கி வரும் அதேபாணியில், வீடியோ சஞ்சிகைகளும் (Video Magazines) பல்வேறுபட்ட தகவல்களையும் செய்திகளையும் கொண்டு உருவாகின்றன. இவ்வகையில் தமிழீழத்தின் முதலாவது வீடியோ சஞ்சிகையான "ஒளிவீச்சு", நிதர்சனம் நிறுவனம் மூலம் தற்போது வெளிவந்துகொண்டிருக்கிறது.

தொழினுட்ப ரீதியலான வசதிகள் மிகக் குறைந்த இக்காலப் பகுதியில், போராளிகளினதும் ஆர்வலர்களினதும் ஆற்றலின் வெளிப்பாடாக, தனது நான்காவது வெளியீட்டையும் கடந்த வாரம் நிதர்சனம் வெளியிட்டுள்ளது. கடந்த வைகாசி மாதம் தனது முதலாவது வெளியீட்டை ஆரம்பித்து மாதாந்த ரீதியாக ஆவணி மாத சஞ்சிகை வரை ஒளிவீச்சு வெளிவந்துள்ளது.

ஒளிவீச்சு வீடியோ சஞ்சிகை தாங்கிவரும் அம்சங்களைக் கருதின்,

குறித்த மாதப் பகுதியில் தமிழீழத்தில் நடைபெற்ற முக்கிய நிகழ்வுகளையும் செய்திகளையும் கொண்டு செய்திச்சரம் என்னும் பகுதி அமைகிறது. களத்தில் நேரடியாக பதிவுசெய்யப்பட்ட போராட்டச் செய்திகள் உள்ளடங்கிய உள்நாட்டுச் செய்திகள் இதில் இடம்பெறுகின்றன. இறுதியாக வெளிவந்துள்ள ஒளிவீச்சு சஞ்சிகையில், கடந்த ஆவணி மாதத்தில் காவியமான கடற்புலிகளுடனான இறுதி நிமிடங்கள் எனும் பகுதி விசேடமாக வெளிவந்துள்ளது.




மாவீரர் நினைவு என்னும் பகுதியில் குறிப்பிட்ட மாதப் பகுதியில் வீரச்சாவடைந்த மாவீரர்களின் நினைவுப் படங்களும், அவர்தம் அஞ்சலி நிகழ்வுகளும் இடம் பெறுகின்றன.

மண்ணும் மக்களும் என்னும் பகுதியில் மக்களின் அன்றாட வாழ்க்கை நிகழ்வுகள், மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், தமிழீழ மண்ணில் நடைபெறும் விசேட விழாக்கள் என்பவை பற்றிய தகவல்கள் போன்றன காட்சிப்படுத்தப்படுகின்றன.

நோய்கள் பற்றிய விளக்கங்கள், தடுப்பு முறைகள், சிகிச்சைகள் போன்றன மருத்துவப் பகுதியில் இடம்பெறுகின்றன.

விளையாட்டுப் பகுதியில் தமிழீழத்தின் பல பாகங்களிலும் நடைபெறும் விளையாட்டுக்கள் பற்றிய செய்திகளும், புதிய வெளியீடுகள் என்னும் தலைப்பின் கீழ் குறிப்பிட்ட மாதப் பகுதியில் புதிதாக வெளிவந்த நூல்கள், சஞ்சிகைகள் பற்றிய அறிமுகங்களும் இடம்பெறுகின்றன.

தமிழீழ மக்களின் கலை, பண்பாட்டு, விளக்க கோலங்களும், விசேடமாக இடம்பெற்ற கலை நிகழ்வுகளும், கலையும் மக்களும் என்னும் பிரிவில் அமைகின்றன.

இறுதிப் பகுதியாக குறும்படங்கள், விவரணங்கள் என்பன இடம்பெறுகின்றன. வைகாசி மாத வெளியீட்டில் 'கண்ணீர்' எனும் குறும்படமும், ஆடி மாத வெளியீட்டில் 'நேற்று' எனும் குறும்படமும் இறுதியாக வெளிவந்த ஒளிவீச்சு சஞ்சிகையில், லெப். சீலன் இறுதிக் கணங்களை நினைவு கூறும் 'வீர சீலம்' எனும் குறும்படமும் வெளிவந்துள்ளது. ஆனிமாத வெளியீட்டில், மடு அகதி முகாம் மக்கள் பற்றிய விவரணத்தைக் (Documentary) காட்சிப்படுத்தியுள்ளார்கள்.

இவற்றுள் 'கண்ணீர்' எனும் குறும்படமும், உரையாடல்களற்ற நிலையில் உணர்ச்சிகளை வெளிப்படுத்தி உணர்த்தும் வகையிலமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

சராசரியாக 75 நிமிடங்களைக் கொண்டுள்ள ஒளிவீச்சு வீடியோ சஞ்சிகைகள், தமிழீழத்தின் பின்தங்கிய கிராமப்பகுதிகளில் கொண்டுசெல்லப்பட்டு திரையிடப்படுகின்றன. இவ் வீடியோ சஞ்சிகைகளை தனிப்பட்டவர்கள் காண்பதற்கேற்ப வகையிலும் வழங்கப்பட்டு வருகின்றன. இவற்றைவிட தமிழீழ நிகழ்வுகளை அறிந்து கொள்ளும் பொருட்டு, தமிழர் வாழும் பிறநாடுகளுக்கும் ஒளிவீச்சு வீடியோ சஞ்சிகைகள் அனுப்பப்பட்டு வருகின்றன.

தகுந்த கருவிகளின்றியும், சிறப்பாக உருவாக்கப்பட்டு வெளிவரும் இவ் வீடியோ சஞ்சிகை போராளிக் கலைஞர்களின் ஆற்றல்களாலும் திறமைகளாலும் மென்மேலும் மெருகடையும் என்பதில் ஐயமில்லை.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# பிறமொழிச் சொல் நீங்கிய தமிழ் மொழி

திராவிட மொழிக் குடும்பத்திலே தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு ஆகிய நான்கு மொழிகளே இலக்கிய வளங்கொண்டன. இவற்றுள் தமிழ் மொழியிலேயே கி.மு. 300 தொடக்கமாக இயற்றப்பட்ட இலக்கியங்கள் உள்ளன. ஏனைய மூன்று மொழிகளுக்கும் பிற்பட்ட காலத்திலேயே இலக்கிய வரலாறு தொடங்குகின்றது. (கல்வெட்டுச் சான்றுகளின்படி, கன்னட மொழியிலே கி.பி.450 அளவில் காலத்தால் முந்திய இலக்கியப் புனைவு தொடங்கியதெனலாம். தமிழ் மொழியினை விட ஏனைய மூன்று மொழிகளும் பெருமளவிலே வடமொழிச் செல்வாக்குக்கு உட்பட்டன. தெலுங்கு, கன்னட, மலையாள மொழிகளின் ஒலியமைப்பு, வரிவடிவ அமைப்பு, சொல்லமைப்பு, இலக்கண அமைப்பு ஆகியன வடமொழியின் பாதிப்புக்குட்பட்டன. இந்த வகையில், தமிழ்மொழியில் வடமொழிச் செல்வாக்கு மிகக் குறைந்த அளவிலேயே ஏற்பட்டது. எனினும், இன்றைய தமிழ் மொழியினை எடுத்து நோக்கும்பொழுது அம்மொழியிலே பெருந்தொகையான பிறமொழிச் சொற்கள் பயின்று வருவதைக் காண்கிறோம். பிறமொழிச் சொற்கள் தமிழிலே வந்துசேர்ந்த வரலாற்றை முதலிலே நோக்குவோம்.

## தமிழில் பிறமொழிச் சொற்கள் வந்த வரலாறு

எமது பண்டைய தமிழ் இலக்கணமாகிய தொல்காப்பியமும் சங்க இலக்கியப் பாடல்களும் தோன்றிய காலத்திலே, ஆரியருடைய பண்பாடு தமிழகத்திலே பெருமளவு பரவவில்லை. இதனால் இந்நூல்களிலே வடமொழியாகிய சமஸ்கிருதத்தின் சொற்கள் பெருந்தொகையாகக் கலக்கவில்லை. எனினும், இந்நூல்களிலே சில வடசொற்கள் காணப்படுகின்றன. கி.மு.200 அளவில் தமிழ்நாட்டுக்கும் கிரேக்க உரோமப் பேரரசுக்குமிடையே நடைபெற்ற வணிகத்தின் பயனாகச் சில கிரேக்கச் சொற்கள் தமிழிலும், சில தமிழ்ச் சொற்கள் கிரேக்க மொழியிலும் கலக்கலாயின. கி.பி.300க்குப் பின்னர் எழுந்த தமிழ் நூல்களிலே, படிப்படியாக வடமொழிச் சொற்களின் சேர்க்கை பெருகத் தொடங்கியது.. புத்த, சமண சமய கோட்பாடுகளையும், மறைநூற் கோட்பாடுகளையும் உள்வாங்கத் தொடங்கிய தமிழ்ச் சமூகம், அவற்றிற்குரிய சொற்களையும் கடன்வாங்குவது இன்றியமையாததாயிற்று. கி.பி.600 அளவில் தமிழ்நாட்டில் ஆட்சி தொடங்கிய பல்லவ மன்னர்கள், வடமொழியை அரச மொழியாகப் பயன்படுத்தினர். கி.பி.10ம் நூற்றாண்டில் பேரரசு ஒன்றை நிலைநிறுத்திய சோழப் பெருமன்னர்கள் வடமொழிக்கு ஆதரவு நல்கியது மட்டுமன்றித் தங்கள் பெயர்களையும் வடமொழியிலேயே அமைத்துக் கொண்டனர்.

பேராசிரியர் அ. சண்முகதாஸ்
தலைவர், தமிழ்த்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

அரசியல், பண்பாடு ஆகியவற்றின் விளைவாலே பெருந்தொகையான வடசொற்கள் தமிழிலே சேரலாயின.

வடமொழி தவிர்ந்த வேறு சில பிறமொழிகளிலிருந்தும் தமிழிலே சொற்கள் வந்து சேர்ந்தன. திராவிட மொழிகளாகிய தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய மொழிச் சொற்கள் தமிழிலே பயின்று வந்தன. இஸ்லாமியருடைய தமிழகப் படையெடுப்புகளின் விளைவாகச் சில உருது, அரபுச் சொற்களும் வந்துசேர்ந்தன. கி.பி.16 ஆம் நூற்றாண்டிலிருந்து ஐரோப்பியருடைய வருகையால், போர்த்துக்கேய, டச்சு, ஆங்கில, பிரெஞ்சு, ஜெர்மன் சொற்களும் தமிழிலே கலக்கத் தொடங்கின. வடமொழிச் செல்வாக்கு தமிழ் மொழியிலே பெரிய அளவிலே பதிந்ததுபோல் ஆங்கில மொழிச் செல்வாக்கும் பதியலாயிற்று.

பிறமொழிச் சொற்களைத் தன்மொழிப் பாங்காக்கும் போக்கு எல்லா மொழிகளிலுமே காணப்படுகின்றது. தமிழ் மொழியின் அணைக்கட்டு என்னுஞ் சொல்லினையும் மிளகுதண்ணீர் என்னுஞ் சொல்லினையும் ஆங்கிலமொழி முறையே, Anicut என்றும் Mulligatawny என்றும் தன்மொழிப் பாங்காக்கியுள்ளது. இதேபோல் Table என்னும் ஆங்கில மொழிச் சொல்லினை தேபுரு என்றும் India என்னும் சொல்லினை இந்தோ என்றும் யப்பானிய மொழி மாற்றியமைத்துள்ளது. ஒவ்வொரு மொழி பேசுவோரும் தம் மொழியின் ஒலியமைப்புக்கேற்ப, தாம் ஒலிக்கின்ற பாங்கிற்கேற்பவே பிறமொழிச் சொற்களை அமைத்துக்கொள்வர். தமிழ் மொழி பேசுவோரும் இதற்கு இயைபுடையவரே. இதனாலேதான் Verandah என்னும் சொல்லை விறாந்தை என்றும், Vassa என்னும் பாளி மொழிச் சொல்லை வசி என்றும் அமைத்துக் கொண்டனர். படிப்பறிவற்ற தமிழ் மக்கள் பிறமொழிச் சொற்களைப் பயன்படுத்தினால், அவற்றைத் தமிழ் மொழி ஒலிக்கேற்பவே கிளர்ந்தனர்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


படித்த தமிழ் மக்கள்தான் வட மொழிச் சொற்களை அம்மொழி ஒலிகளுடனும், ஆங்கில மொழிச் சொற்களை அம்மொழி ஒலிகளுடனும் கிளர்ந்து வந்துள்ளனர். இவர்களுடைய இந்த நிலைப் பாட்டினாலேயே பிறமொழிச் சொல்லாதிக்கம் எம்மொழியிலேற் பட்டுள்ளது. இந்நிலை நீக்கப்பட வேண்டும் என்ற கருத்து தற்போது முனைப்புப் பெற்று வருகின்றது.

## தனித் தமிழ் உணர்வின் தோற்றமும் வரலாறும்

தமிழ் மொழியின் தனித்துவம் பற்றிக் குறைவாகக் கூறும் எதிர்த் தூண்டல்களின் விளைவாகவே, தனித்தமிழ் உணர்வு வளர்ச்சியடைந்தது. இவ்வெதிர்த்தூண்டல்களின் உச்ச நிலையாக அமைந்தது, 18ம் நூற்றாண்டில், பிரயோக விவேகம் என்னும் இலக்கண நூலின் ஆசிரியர் சுப்பிரமணிய தீட்சிதரின் முயற்சியாகும். இவர் தமிழ் மொழிக்கும் வடமொழிக்கும் இலக்கணம் ஒன்றே எனச் சாதித்தார். அத்துடன் தமிழ் என்னுஞ் சொல்லையே திரமிள என்னும் வட சொல்லினின்றும் தோன்றியதாகக் கூறினார். 19ம் நூற்றாண்டில் தமிழ் மொழியைக் கற்றறிந்த மேலைப்புல அறிஞரும், எங்கள் நாட்டு அறிஞரும் தமிழ் மொழியின் தனிச் சிறப்பியல்புகளைத் திராவிட மொழிக்குடும்பப் பின்னணியிலே ஆராய்ந்து கூற முற்பட்டனர். திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்னும் நூலை (1856) வெளியிட்ட ஆயர் ரொபர்ட் கோல்ட்வெல், வின்சுலோ போன்ற மேலைத்தேய அறிஞர்கள் குறிப்பிடப்பட வேண்டியவர்கள். கோல்ட்வெல் அவர்களே முதன் முதலாக திராவிட மொழிக் குடும்பம் ஒன்றினை இனங்கண்டு, அதில் சிறப்புத் தன்மை வாய்ந்தது தமிழ் மொழி எனக்கொண்டு, அம்மொழி வடமொழியினின்றும் பிறக்கவில்லை; அதற்கெனத் தனித்துவமான பல சிறப்புப் பண்புகள் உண்டு என்பதையும் விளக்கிக் கூறினார். தனித்தமிழ் உணர்வினைப் பேராசிரியர் சுந்தரம் பிள்ளையினுடைய மனோன்மணியம் நாடகத்தில் அமைந்துள்ள தமிழ் வாழ்த்து புலப்படுத்துகின்றது.

**"கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலையாளமும் துளுவும்**
**உன்னுதரத் துதித்தெழுந்தே ஒன்றுபல ஆயிடினும்**
**ஆரியம் போல் உலகவழக்கு அழிந்தொழிந்து சிதையா உன்**
**சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே"**

என்று சுந்தரம்பிள்ளை பாடிய தமிழ்த் தெய்வ வணக்கம் தமிழ் உணர்வின் வெளிப்பாடாயமைந்தது. சோமசுந்தர நாயகர், பரிதிமாற் கலைஞர், பாம்பன் குமரகுருபர சுவாமிகள், மறைமலையடிகள், நீலாம்பிகை அம்மையார், தேவநேயப்பாவாணர் போன்றோர் தனித்தமிழ் உணர்வினைத் தம் எழுத்துக்களாலும் இயக்கம் ஊடாகவும் வளர்த்தவர்கள். மறைமலையடிகள் தொடங்கிய தனித்தமிழ் இயக்கத்துக்கு ஓர் சமூக, பண்பாட்டு, அரசியற் பின்னணி

# தமிழீழத்திலும் சிறீலங்காவிலும்

கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லத்தில் 2ம் லெப்.காந்தன் (தர்மகுலசிங்கம் பிரதீபன், மாசார்ப்பளை) என்னும் மாவீரனின் இறுதி நிகழ்வு நடைபெற்று முடியும்போது அம்மாவீரனின் தந்தையார் தனது அடுத்த மகனை, விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளரிடம் போராளியாக இணைத்தார்.

"என்னுடைய அடுத்த மகனும் வீரச்சாவை எய்தினால் நானும் போர்க்களத்துக்கு வருவேன்." என அவர் உணர்ச்சி ததும்பக் கூறினார். மண்மீட்புப் போரில் போராளியாக இணைத்து வைத்து தன் மகனுக்கு உணர்ச்சி பூர்வமாக விடை கொடுத்து நின்றார் அத் தந்தை.

முல்லை மாவட்டத்தில் கார்த்திகை மாதம் 12ம் திகதி செவ்வாயன்று 2ம் லெப். காந்தன் வீரச்சாவடைந்தார்.

வடபகுதியில் கடமை புரியும் தமது பிள்ளைகளை திருப்பித் தம்மிடம் ஒப்படைக்குமாறு இராணுவத்தின் பெற்றோர்கள் மன்றாட்டமாக கேட்டுள்ளார்கள். கொழும்பில் உள்ள இராணுவத் தலைமையகத்தை முற்றுகையிட்டுள்ள மேற்படி பெற்றோர் தம்மிடம் ஒப்படைக்குமாறு நிர்ப்பந்தித்து வருவது சிறிலங்கா அரசுக்கு புதிய நெருக்கடியை உருவாக்கியுள்ளது.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

கிளாலியிலிருந்து சிறிலங்கா இராணுவம் வாபஸ் பெற்றமைக்கு, அப்பகுதி மழைக்காலத்தில் கடினமான பிரதேசமாக இருக்கும் என்பதினாலேயே என இராணுவத் தரப்பில் கூறப்படுகின்றது. இது உண்மையில் முட்டாள்தனமான அறிவிப்பு.

இது நடவடிக்கை திட்டமிடப் படும் போது கருத்திற் கொள்ளப் பட்டிருக்க வேண்டிய ஒரு விடயம். இது திட்டமிடலில் உள்ள பலவீனமே.

சண்டே ரைம்ஸ்
பாதுகாப்புத் துறைச் செய்தியாளர்
எழுதிய கட்டுரையிலிருந்து.




இருந்தது. அதுபற்றி இங்கு நோக்க வேண்டிய தேவை இல்லை. மொழியியல் அடிப்படையிலே இவ்வியக்கத்தினை நோக்குமிடத்து, அது சிறப்பாக தமிழிலே இருந்து வந்துள்ள வடமொழிச் செல்வாக்குக்கும் பொதுவாக பிறமொழித் தாக்கத்திற்கும் எதிராகச் செயற் பட்டு, தனித்தமிழ்ச் சொற்களையே பயன்படுத்தி நாள் வேலைகளை நலமுடன் செய்வதற்கு ஊக்கம் அளித்த இயக்கமெனக் கொள்ள லாம்.

## தமிழில் மக்கட் பெயர்

பண்டைக் காலத் தமிழ்மக்கள் தமிழிலேயே தம் பெயர்களை வைத்துக்கொண்டனர். நெடுஞ் செழியன், சேரலாதன், செல்வக் கடுங்கோ, பாரி, கரிகாலன், கோப் பெருஞ்சோழன் என்றெல்லாம மன்னர் பெயர்கள் அமைந்தன. கணியன் பூங்குன்றன், பரணர், பொத்தியார், நச்செள்ளை, நெட்டிமை, பேயன் என்னும் பெயர்கள் கொண்ட புல்வர்கள் வாழ்ந்துள்ளனர். எம்முடைய பண்டைத் தமிழ் இலக்கியங்களாகிய சங்க இலக்கியங்களிலே பெயர் தெரியாத புலவர்கள் பலர், பாடல் கள் பாடியுள்ளனர். சங்கப் பாடல் களை தொகுத்த பிற்கால ஆசிரியர் கள், அத்தகைய புலவர்களுக்குப் பெயர் வழங்குவதற்கு ஓர் புதிய வழியினைக் கையாண்டனர். அப்புலவர்கள் தங்கள் பாடல் களிலே கையாண்ட கருத்து நயமுள்ள தொடர்களை அல்லது உவமைகளை அவர்களுக்குப் பெயர் களாக இட்டனர். குறுந்தொகை 41 ஆவது பாடலிலே தலைமகனைப் பிரிந்திருக்கும் தலைவியுடைய மன நிலையைப் புலப்படுத்த "அணிலாடு முன்றில்" போல என்னும் உவமை ஆளப்பட்டுள்ளது. மக்கள் நட மாட்டம் இல்லாத வெறும் வீட்டின் முற்றத்திலேதான் அணில்கள் விளையாடுவதை நாம் காணலாம். தலைவியுடைய மனம் அணில் விளையாடும் வீட்டு முற்றத்தைப் போலுள்ளது எனப் புலவர் உவமை கூறுவதன் மூலம், தலைவியுடைய தனிமையினையும் அவள் மனத்து வெறுமையையும் வெளிப்படுத்து கின்றார். இதனால் இப்புலவர் அணிலாடு முன்றிலார் என்னும் பெயரைப் பெற்றார். காதல் கொண்ட இரு நெஞ்சங்கள் இரண்டறப் பிரிக்க முடியாதவாறு கலந்தன என்னும் கருத்து நிகழ்வைத் "செம்புலப் பெயல் நீர்போல" என்னும் உவமையைக் கையாண்டு செம்மண் நிலத்திலே பெய்த மழைநீர் போல அம்மண்ணோடு கலந்து அதன் தன்மையை அடைவது போல என்னும் விளக்கத்தாலே காட்சி நிகழ்வாகக் காட்டுந்திறனை நோக்கி இப்புலவருக்கு செம்புலப் பெயல் நீரார் என்னும் பெயர் வழங்கப் பட்டது. இவ்வாறு வெள்ளிவீதியார், மீனெறி தூண்டிலார், தேய்புரிப் பழங் கயிற்றினார், ஓரிற் பிச்சையார், கங்குல் வெள்ளத்தார் எனப் பல பெயர்கள் புலவர்களுக்கு வழங்கப்பட்டன. எல்லாப் பெயர்க ளுமே தனித் தமிழ்ப் பெயர்கள். இப்பெயர்களை இன்று கேட்போ ருக்கு இவை வேடிக்கையான வையாய் அமையலாம். ஆனால்,

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


பிறமொழிகளிலே அமைந்துள்ள சில பெயர்களை அறியின், இத்தமிழ்ப் பெயர்கள் வேடிக்கையானவையாக தோன்றமாட்டா. Wood House - 'மரவீடு', Goldwater - 'பொன்னீர்' Bush - 'பற்றை', Riverbank 'ஆற்றங்கரை' என்னும் ஆங்கிலப் பெயர்களையும், Oyama- 'பெருமலை' Nakamura - 'நடுஊர்', Haruko 'வேனில் மகள்' Mori- 'பெருங்காடு' என்னும் ஜப்பானியப் பெயர்களையும் கேட்பவர்கள், அவை வேடிக்கையானவை என்றுதான் கூறுவார்கள்.

எங்களுக்கு எங்களுடைய பெயர்களையே பிறமொழிச் சொற்களிலே பூணும் அளவுக்குப் பிறமொழி ஆதிக்கம் பெற்றுவிட்டது. எந்த மொழியிலும் (அதாவது இந்தியத் துணைக்கண்டத்துக்கு அப்பாற்பட்ட நாடுகளிலே பேசப் படும் மொழிகளில்) இந்நிலை ஏற்பட்டதில்லை. மக்கட்பெயர்களை பிறமொழிகளிலே இடுவதால் வரும் இடர்பாடுகள் பற்றியும் நாம் இங்கு மனங்கொள்ள வேண்டும். நல்ல பொன்னிற மேனியுடைய பெண் பிள்ளைக்குப் பொன்னி என்னும் பெயருக்குப் பதிலாக சியாமளா (கறுப்பி) பெயர் வைத்தால் எப்படி இருக்கும். தமிழர் மண்ணின் இயற்கைப் பின்னணியிலே மக்கட் பெயர்கள் அமைவதற்குப் பதிலாக கடவுட் பெயர்கள் சூட்டவேண்டும் என்னும் நிலைப்பாடு எம் சமூகத்திலே உருவாகியதனால், பல வடமொழிப் பெயர்களும், ஆங்கிலக் கிறிஸ்த்தவப் பெயர்களும் பரவலாக இடம்பெறத்தொடங்கின. தமிழர்கள் என்று எம்மைத் தனித்துவமாக இனங்காட்டிக் கொள்வதற்கு நாமும் எம் முன்னோரும் விட்ட பிழையை வருங்கால இளைய தலைமுறை யினர் திருத்தித் தம் பிள்ளைகளுக்கு இனிய தமிழ்ப்பெயர்களை இடுவ தன் மூலமும், நாம் எல்லோரும் இயன்றளவு தமிழ்ச் சொற்களையே நடைமுறைப் பயன்பாட்டுக்கு ஆளுவதன் மூலமும், பிறமொழிச் செல்வாக்கினைக் குறைத்துக் கொள்ளலாம். அண்மையிலே

**நான் ஆத்மரீதியாக உணர்கிறேன். இன்றில்லாவிட்டாலும் என்றோ ஒரு நாள் எனது மக்கள் நிச்சயமாக விடுதலையடைவார்கள்.**

***திலீபன்***

வெளிவந்த மக்கட்பெயர் அகர வரிசை என்னும் நூலிலே 453 மகளிர் பெயர்களும், 587 ஆடவர் பெயர்களும் இடம்பெற்றுள்ளன. எல்லாம் தமிழ்ச் சொற்களினாலே ஆன பெயர்களாகும். மக்களை பெறும் புதுமணத்தவர்க்கு இந்நூல் பெரிதும் பயனுடையதாக அமை யும்.

நாம் ஒவ்வொரு நாளும் பயன்படுத்தும் எத்தனையோ பிறமொழிச் சொற்களுக்கு நிகரான தமிழ்ச்சொற்கள் எம்மொழியிலேயே இருக்கின்றன. அவற்றை வழங்கத் தொடங்கினால் கால ஓட்டத்தில் அவை நிலைபெற்ற வழக்கினைப் பெற்றுவிடும். நாம் நாடோறும் பெரும்பாலும் பயன்படுத்தும் சில சொற்களையும், அவற்றுக்கு நிகரான தமிழ்ச்சொற்களையும் எடுத்துக் காட்டுகளாக கீழே தருகிறோம்.

அங்குலம் - விரற்கிடை,
அஞ்சலி - வணக்கம்,
அந்தரம் - பரபரப்பு,
அநியாயம் - முறையின்மை,
அநுதினம் - நாளாந்தம் நாடோறும்,
அநேகம் - பல,
இலகு - எளிது,
உத்தியோகம் - தொழில்,
காரியம் - செயல்,
மசோதா - சட்டமூலம்.

பின் அட்டைப்பட விளக்கம்

ஓவியம்: ஓவியர் மகா

தலைப்பு: மாவீரர்

சில சொற்களைக் கேட்டவுடன் இவை பிறமொழிச் சொற்களா எனப் பலர் வியப்படைவதுண்டு. அந்தளவுக்கு 'தேவர் யார் கயவர் யார்' என்று வேறுபாடு காண முடியாத படி பிறமொழிச் சொற் கள் எம்மொழியிலே கலந்துவிட்டன. அச்சொற்கள் உணர்த்தும் பொருளை உணர்த்தக்கூடிய தமிழ்ச் சொற்கள் இருப்பின் அவற்றைப் பயன்படுத்துவதே சாலச்சிறந்த தாகும். இது தொடர்பாக ஒரு சிறப்பான நிலைப்பாட்டினை நாம் நெஞ்சிருத்த வேண்டும். அதாவது, தனித்தமிழ்ச் சொற்களைப் பயன் படுத்தவேண்டும் என்ற நோக்கி னால் மக்கள் விளங்கமுடியாத கரடுமுரடான கடும்சொற்களை எழுதுவதிலோ, பேசுவதிலோ பயனேதும் இல்லாமல் போய்விடும். ஆனால், நாடோறும் நாம் பயன் படுத்தும் ஒரு பொருளை தமிழ் மொழியிலே அழைக்க வேண்டு மெனில், அதற்கு எளிதான தமிழ்ச் சொல் வாய்க்காவிட்டாலும், அறிமு கப்படுத்தப்படும் எச்சொல்லும் நாள டைவில் மக்கள் வாயிலே வந்து சேர்ந்துவிடும். இன்று யாழ்ப்பாணத் துத் தமிழ் மக்கள் வாயிலே தவழும் அங்காடி, குளிரோடை, சுவையருவி போன்ற சொற்களை எடுத்துக் காட்டுகளாக காட்டலாம்.

ஒவ்வொருவரும் எம்மால் இயன்றவரையில் பிறமொழிச் சொற்களுக்குப் பதிலாக தமிழ்ச் சொற்களை பயன்படுத்துவதனை ஓரளவு நினைவுறுதியுடன் முயற் சிப்பின், தனித்தமிழ்ப் பயன்பாடு பரவலாகிவிடும். புதுப்புதுக் கருது கோள்களும், கொள்கைகளும், பொருட்களும் எம்மிடையே வந்து சேரும்போது, அவற்றுக்கான புதுப் புதுத் தமிழச் சொற்களை நாம் ஆக்கும்போது, எம்முடைய மொழி யும் வளர்ச்சியடையும். பெருந் தொகையான புதிய சொற்கள் சொற்களஞ்சியத்திலே இடம்பெறும். உலக வளர்ச்சிகளையெல்லாம் எதிர் கொள்ளத்தக்க வகையிலே தனித் தமிழ் பயன்பாட்டை செம்மை செய்ய வேண்டியவர்களாக நாம் முயற்சிக்கவேண்டியது இன்றியமை யாததாகும்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


## யாழ். நகரில் 5000 மரங்கள் நாட்ட ஏற்பாடு

யாழ். மாநகர சபையின் நீர் விநியோகப் பகுதியினர் யாழ். நகரப் பகுதியில் நிழல் மரங்களை நாட்டுவதிலும் அவற்றைப் பாதுகாப்பதிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

இவ்வருட முடிவிற்குள் ஸ்ரான்லி வீதியில் வாகை மரங்களும், கஸ்தூரியார் வீதியில் மலைவேம்பு மரங்களும் நாட்டப்படவுள்ளன.

ஆஸ்பத்திரிவீதி, மத்திய பஸ்நிலையம், பருத்தித்துறை வீதி, றக்கா வீதி ஆகிய பகுதிகளில் நாட்டப்பட்ட மரங்கள் தொடர்ந்து பராமரிக்கப்படுகின்றன. சவுக்கு, மலைவேம்பு, இலுப்பை, வேம்பு, வாகை போன்ற 5000 மரங்களை யாழ். நகரப்பகுதியில் ஐந்துவருடங்களில் நாட்டி பராமரிப்பதற்கு இப்பகுதியினர் திட்டமிட்டுள்ளனர். இத்திட்டத்தை அமுல் செய்ய பொதுமக்களின் பங்களிப்பு அவசியம் தேவை எனவும், இத்திட்டத்திற்கு தேவையான மரங்களை தாம் விதை போட்டு உற்பத்தியாக்கத் தொடங்கியுள்ளதாகவும் மேற்படி பகுதியின் பொறியியலாளர் திரு. பொ. தவராஜா தெரிவித்துள்ளார்.





இராணுவ நடவடிக்கைகளினாலும், இயற்கை அனர்த்தங்களினாலும் சீர் குலைந்துபோன எமது காட்டு வளத்தைப் புதுப்பிக்க தமிழர் புனர்வாழ்வுக்கழகம் பாடசாலைகள், மாணவர்கள் பங்கேற்கும் மரநடுகைப் போட்டியொன்றினை நடாத்தி வருகின்றது. மாணவர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்ற இத்திட்டம் அவர்களை உற்சாகத்துடன் மரநடுகையில் ஈடுபடுத்தியுள்ளது. பாடசாலைகளிலும், வீதியோரங்களிலும் சிறு கூடுகளினுள்ளே தளிர்கள் தலைநீட்டத் தொடங்கியுள்ளமை எதிர்காலம் பற்றிய நம்பிக்கையை ஏற்படுத்துகின்றது.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# எதிர்ப்புச்சக்தி

- நம்பியாரூரான் -



தூத்தல் மழையுக்கை நிக்காதை எண்டு
சொன்னாற் கேளாளாம்!
காய்ச்சல் தலையிடி எண்டு வந்தா
கயிட்டப் படுகிறதார்?
தாய் செய்த முறைப்பாட்டைப்
பொருட்படுத்தாது
தமயந்தி என் மகள் பூக்கொய்து
கொண்டிருக்கிறாள்!
அவள் நிற்கும் திசையில்,
வேலிக்கப்பால்,
செல்லி,
களையெடுத்தபடி!
அவள் நனைவது பற்றி
மூகத்தால் அழ ஆருமற்று!
செல்லிக்கும் என் மகள் வயதுதான்.
தமயந்திக்கு மழை படக்கூடாது!
வெய்யில் சுடக்கூடாது!
"மதலையைப் பெறுநாள் துன்பம்
வளர்த்திடு நாளும் துன்பம்"
பாடியவன் அநுபவசாலி.
மூத்தவன் முகுந்தன் பிறந்தபோது
வீடே அமர்க்களப்பட்டது!
பக்குவம் சொல்ல
தூக்க, 'எடுக்க'
பலபேர்!
எந்தக் குறைபாடும் இருக்கக் கூடாதென்று
எத்தனை முன்னேற்பாடு!
என்றாலும்,
காலை வேளைகளில்
ஒரு தும்மல்!
காற்றுப்பட்டால் ஒரு கணகணப்பு!
எங்காவது போயிருந்தால்
வயிற்றுக்கோளாறு!
"எதிர்ப்புசக்தி இருந்தால்
அடிக்கடி நோய் பிடிக்காது!"
மருத்துவர் கருத்தை மதித்து,
ஜேர்மன் தயாரிப்பான Polyvisol ஐ,
ஊற்றுப் பேனைக்கு மை நிரப்புவது போல,
வேளை தவறாமல்,
அவள் வாய்க்குள் பிரயோகித்தும்
கடைசிவரை
எதிர்ப்புசக்தி வர மறுத்துவிட்டது!
முகுந்தன்
ஒருவாறு வளர்ந்து
ஜேர்மனிக்கே போய்விட்டான்!
இப்பொழுது எழுதுகிறான்,
பிறநாட்டவர்க்கு
அங்கு
பலத்த எதிர்ப்பாம்!
இவனுக்கோ
இன்னும்
எதிர்ப்புச்சக்தி வருவதாயில்லை!
பக்கத்து வீட்டுப் பாலன்
உவள் செல்லியின் தமையன்
பனாட்டுத்தின்று,
ஒடியற்கூழ் குடித்து வளர்ந்தவன்
நோய்நொடி கிடையாது
Polyvisol உம் இல்லை,
புட்டிப்பாலும் இல்லை!
பனைமரம்போல,
ஆறடி இருப்பான்!
அண்டைக்குப் பார்க்கிறன்;
அளவெட்டியிலை
ஒரு பனைக்குப் பின்னால்
'கவர்' எடுத்தபடி!
ஜேர்மனியில் இருந்து ஊட்டம் பெற்றவன்
ஜேர்மனியோடை!
பனையில் இருந்து ஊட்டம் பெற்றவன்
பனையோடை!

www.tamileelamarchive.com

 தமிழீழ ஆவணக் காப்பகம்

# திலீபன் ஞாபகார்த்த கல்விக் கண்காட்சியும் நூலக வாரமும்

நா. யோகேந்திரநாதன்

**14.09.93 தொடக்கம் 17.09.93 வரை கிளி/இந்து மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற தியாகி திலீபன் ஞாபகார்த்தக் கண்காட்சி பற்றிய கட்டுரை**

இன்று தமிழீழத்தில் கல்வியும், போராட்டமும் ஒன்றுடன் ஒன்று பிரிக்கப்பட முடியாதவை என்பது யதார்த்தமாகிவிட்டது. கல்விக்கான போராட்டமும், போராட்டத்திற்கான கல்வியுமாகி ஒன்றுடன் ஒன்று சங்கமமாகிவிட்டன.

கிளிநொச்சி இந்து மகா வித்தியாலயத்தில் 4 நாட்களாக இடம்பெற்ற லெப். கேணல் திலீபனின் ஞாபகார்த்த கண் காட்சியும், நூலக வாரமும் இதற்கு ஒரு குறிப்பிடத்தக்க முன்னுதாரணமாகத் திகழ்கிறது.

தியாகி திலீபனின் தற்கொடை ஒரு விடுதலை பெற்ற தேசத்தை, சுபீட்சம் கொழிக்கும் ஒரு பூமியை நவீன அறிவினால் அலங்கரிக்கப் பட்ட ஒரு மண்ணை இலக்காகக் கொண்டது.

அந்த இலக்கை நோக்கிய பார்வை இக்கண்காட்சியில் அமைந்திருந்தது ஒரு சிறப்பான அம்சம்.

கண்காட்சியின் நுழைவாயில் உள்ளூர் மூலப்பொருட்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டதொரு ஆடுபாலத்தால் அலங்கரிக்கப் படுகின்றது.

சீமெந்து, இரும்புக்கம்பி என்பன தடைசெய்யப்பட்ட எமது தேசத்தில் அடிக்கடி பாதைகளைக் குறுக்கிடும் காட்டாறுகளும், வாய்க்கால்களும் நிறைந்த வன்னி மண்ணில் இது காலத்தின் தேவைக்குப் பதிலாய் அமைகிறது.

கிளிநொச்சி மாவட்டத்தை வளமாக்கும் இரணைமடுக்குளம் இங்கே மாதிரியாக அமைக்கப் பட்டிருக்கிறது. குளத்தின் அமைப்பு, நீரேந்தும் பகுதியின் அவசியம் என்பன ஒரு மாணவனால் விளக்கம் கொடுக்கப்படுகின்றன. குளத்தின் மாதிரி வெறும் காட்சிப் பொருளாயன்றி எமக்குக் காலமிடும் கட்டளையை விளக்குகிறது. ஆயுதப் போராட்டம் வெற்றியை நோக்கி வீறுநடை போடும் இந் நேரத்தில் உற்பத்திப் போரின் உற்ற நண்பனான இரணைமடுக்குளம் தேவைகளைப் புரியவைக்கும் காட்சியாகிறது.

லெப். கேணல் திலீபன் ஒரு விஞ்ஞான மாணவன். அவன் சமூகம் பற்றி, எமது தேசம் பற்றி, தேசிய விடுதலை பற்றிக் கொண்டிருந்த விஞ்ஞான ரீதியான பார்வை அவனைச் சரியான பாதையைத் தேர்ந்தெடுக்க வைத்தது.

இங்கும் விஞ்ஞான மாணவர்கள் தங்கள் ஆக்கங்களைத் தேசத்தின் தேவை கருதி அமைத்திருந்தமை ஒரு முக்கியமான விஷயமாகும். தீ எரிவதற்கு வெளியிலுள்ள பிராணவாயு அவசியம் என்பதை விளக்க, ஒரு மாணவன் உமியை எரித்து உபயோகிக்கும் அடுப்பை வைத்து விளக்கம் கொடுத்துக் கொண்டிருந்தமை நெஞ்சைத் தொட்டது.

மனித இனத்தின் பரிணாம வளர்ச்சி, தாவரங்கள் பற்றிய காட்சிகள், விலங்கியல் விளக்கங்கள், ஒரு விவசாயப் பிரதேசம், விஞ்ஞானப் பார்வை பெற்றுக்கொண்டிருப்பதை உணர்த்தியது.

சுகாதாரப் பகுதி, கணக்கியல் பகுதி, புவியியல் பகுதி என பற்பல கண்காட்சிகள் எமது தேசத்தின் தேவையை ஒட்டி இருந்தமை ஒரு சிறப்பம்சம்.

சுற்றுச் சூழல் மாசடைவதை விளங்கப்படுத்தும் ஒரு படம் பலரின் கவனத்தையும் ஈர்த்ததில் வியப்பில்லை. ஒரு கனமான விடயம் ஒரு இலகுவான படம் மூலம் விளங்கப்படுத்தப்பட்டிருந்தது.

எமது மூலிகை வளங்கள் பற்றியும் அதன் பயன்பாடு பற்றியும்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

இரு காட்சிசாலைகள் (வட்டக்கச்சி, கிளிநொச்சி) அமைக்கப் பட்டிருந்தன. மருந்துத்தடை எமது மக்களின் ஆரோக்கியத்துக்குச் சவால்விடும் இந்நாடுகளில் ஒரு நம்பிக்கை தரும் விளக்கங்கள் இங்கே தரப்பட்டமை ஒரு அவசியமான அம்சம்.

சுகாதாரப் பகுதியினரின் கண்காட்சி எமது ஆரோக்கியத்தை பாதிக்கும் விஷயங்களைத் தெளிவுபடுத்தியது.

விவசாயப்பகுதி, எமது உற்பத்தி இலக்குகளை எவ்வாறு அபிவிருத்தி செய்யதல், நீர் வீணாவதை எவ்வாறு தடுத்தல் போன்ற பயனுள்ள விஷயங்களைத் தெளிவு படுத்தியது.

புவியியல் பகுதியில் அமைக்கப் பட்டிருந்த தமிழீழத்தின் மாதிரி பலரைக் கவர்ந்ததில் வியப்பில்லை. எமது எல்லைப் புறங்கள், தாக்கப் பட்ட இராணுவ முகாம்கள் போன்ற சில தேவையான விஷயங் களுக்கு விளக்கும் அளிக்கப் பட்டிருப்பின் மேலும் இக்காட்சி பயனுள்ளதாக அமைந்திருக்கும்

எல்லாவற்றிலும் மேலான மண்கிண்டிமலை இராணுவ முகாமின் மாதிரி அமைப்பு பலரைக் கவர்ந்ததில் வியப்பில்லை.

இவ்வமைப்பைப் பார்த்தவர்கள் இவ்வளவு பாதுகாப்பான ஒரு முகாமைத் தாக்கி அழித்ததைப் பற்றியும், எமது போராளிகளின் திறமைகளையும், தியாகங்களையும் பெருமையுடன் கதைத்துக்கொண்டு சென்றதைக் காணக்கூடிய தாயுள்ளது.

அடிப்படையில் திலீபன் நினைவு நாட்களுக்கு இது காத்திரமான பங்களிப்பு என்று கூறுவது மிகையாகாது. இதன் சிறப்புக்கு உழைத்த ஆசிரியர்கள், மாணவர்கள் ஏனைய சம்பந்தப் பட்ட அனைவரும் பாராட்டப்பட வேண்டியவர்களே. எனினும் தேசம் உங்களிடம் மேலும் நிறையவே எதிர்பார்க்கிறது என்பதையும் நினைவுபடுத்துகிறோம்.

★★★

# இவர்கள் சொந்த தேசத்தவர்கள்


தலைமுறை.... தலைமுறையாய்
விடியுமென்று விழித்திருந்து
கண்களுக்குள்
கனவை தேக்குபவர்கள்

"நல்ல சோறு"யென்பது
மறந்துபோன ஞாபகங்கள்.
பட்டினியுடன் பழகுவதால்
"வெறி" இவர்களிடம்
தொற்றிக் கொள்வதில்லை.....!
எதிரிகளுக்கு மட்டும் எதிரியாய்...

சிங்கள நாய்களினால்
இடிக்கப்படுவதும், எரிக்கப்படுவதும்
வீடுகளேயன்றி
இவர்களின் நெஞ்சுரமல்ல....!

கடந்த காலங்களிலிருந்து
இன்றுவரை
இவர்களின் சுவாசிப்பு காற்றினுள்
நம்பிக்கையும் புகுந்து கொள்கிறது.

இன்றைய சோகம்
நாளையோ...,
நாளை மறுநாளோ....,
எந்த நாழிகளிலாவது
சொந்த தேசத்து மக்களுக்கு
விடியல் விடை கிடைக்கும்.



இது
இன்று வரை நடந்திருக்கும்
போராட்டத்தின் முடிவு.
இதனால்...
நம்பிக்கையின் வெளிப்பாடே
தன் விதைகளை
தாய் மண்ணுக்குள்
ஊன்றி விட்டு
இன வெறியர்களின் நடுவில்
சொந்த தேசத்து அகதிகளாய்...

- புதுவை இளவேனில் -

புரட்டாதி 1993 இதழில் வெளியான
புகைப்படத்துக்கான கவிதை.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# தமிழீழப் பெண்களும் மாறிவரும் மன இயல்புகளும்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்






www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

## எங்கள் தாயகம் எத்தனை அழகு!

தாயின் மடிச்சுகத்தையும்
தாயக மண்ணின் தனிச்சுகத்தையும்
எழுதத் தொடங்கினால்....
ஏன் பேனா வற்றுவதில்லை?
"அமுதசுரபி" போலவும்
"அட்சயபாத்திரம்" போலவும்
ஏன் அள்ள அள்ளக் குறைவதில்லை?
எந்தையர் பூமி எத்தனை அழகு!
கள்ளிச்செடி படர்ந்த கலடுத் தரையானாலும்
பச்சை போர்த்த படுக்கைபோல



பார்க்கும் போது கண்ணில் காதல் வழிகிறதே!
ஒழுங்கில்லாத ஒற்றையடிப் பாதைகள்கூட
உச்சி வகிடெடுத்த பேரழகியின் தலையைப் போல
உன்னத அழகோடு ஓடி வருகின்றனவே.
ஏன்?
தொட்டளைந்த பூமியின் சுகமும், மணமும்
எட்ட இருக்கும் நிலத்தில் ஏற்படாது.
எங்கள் அன்னைமண் எத்தனை எழில்
பிஞ்சுப் பிள்ளைகளின் பூவிரல்கள் போல....
வைகாசி மாதத்து மாமரங்கள் போல....
துள்ளிக் குதிக்கும் பிள்ளைக் கன்றுகள் போல....
வெள்ளலைகள் கரையோதுக்கும்
நுரைப்பூக்களைப் போல....
எங்கள் தாயகம் எத்தனை அழகு!
தமிழீழம் சந்தனக்காடு
இதிகாசத்தில் படித்த இந்திரன் பூமி.
"தால்ஏரி" காலெடுத்து நடக்கும் "காஷ்மீரை"
காணக் கண்கோடி வேண்டுமாமே!

# உலைக்களம்

**வியாசன்**

"ஹவாய்" தீவின் கடற்கரையில்
ஒருநாள் நடந்துவிட்டு இறந்தாலே
பிறந்த பலன் பூரணப்படுமாமே!
யார் சொன்னது?
தென்தமிழீழத்தைத் தெரியாத ஒருவன்
சொல்லியிருக்கலாம்.
மஞ்சள் வெயில் மேனிதழுவும் மாலைநேரம்
கோணமலையில் நின்று கீழே பாருங்கள்.
கோட்டை வாசலில் நிமிர்ந்து நின்று
பாதாளமலையின் பக்கமாக விழிகளை வீசுங்கள்;
உவமையற்ற அழகை உணர்வீர்கள்.
வார்த்தைகள் தோற்றுப்போகும்.
பேற்றுக்கால தாய்மை அழகோடு
நெற்பயிர்கள்
பால்மணிக் கதிர்கள் தள்ளும் பருவத்தில்
தம்பலகாமத்து வயல் வரம்புகளில்
காலாற நடந்து பாருங்கள்
காலமழை பொய்க்காத காலத்தில்
கந்தளாய் குளம் நிறைந்திருக்கும் நேரத்தில்
உயர்ந்த அணைக்கட்டில் உட்கார்ந்து கொண்டு

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


தாள அசைவுக்குச் சதிராடும் பெண்களைப் போல
நீளப் பறக்கும் வெண்கொக்குகளை நிமிர்ந்து
பாருங்கள்
கந்தளாயின் காலடியில்
காஷ்மீர் கைகட்டி நிற்கும்.
நிலம் வெளிக்காத புலரிப் பொழுதில்
"வெருகல்" வேலன் திருவிழாக் காலத்தில்
மாவலி கங்கையின் மடியிலே விழுங்கள்
கொட்டியாரக் குடாக்கடல் தேடி
கைநீட்டி வந்து கட்டித் தழுவும்
ஆற்றின் அருகில் அமர்ந்து கொள்ளுங்கள்
எங்கள் தாயகம் எத்தனை அழகு!
தென்தமிழீழம் சுந்தரப் பூமி.
கன்னங்குடா,
பட்டித்திடல்
இன்னும் இன்னும் எத்தனை ஊர்கள்
அத்தனையும் அழகு.
வெள்ளிநிலா விளக்கேற்றிக் கொள்ளும்
நள்ளிரவில்
புளியந்தீவில் பொன்னாவரசு பூத்திரிக்கும் காலத்தில்
மட்டுநகர் வாவிக்கு வாருங்கள்
மேலே பெண்ணுருவும், கீழே மீனுருவும் கொண்ட
"நீரரமகளிர்"
குரலெடுத்துப் பாடிக் குளிப்பார்கள்...
படகெடுத்துப் பக்கத்தில் போனால்
முகம் மறைத்து... முக்குளித்து விடுவார்கள்.
கற்பனையென்றாலும் எத்தனை சுகம்!
மட்டக்களப்பு புல்வெளிகளில்
மேய்ச்சல் முடிந்து வீடு திரும்பும் பசுக்களின்
மடிசுரந்து வீதியெங்கும் வெள்ளமாகும்;
கன்றை நினைத்து கால்களை நனைக்கும்.
வண்டு துளைபோட்ட மூங்கில் காடுகள்
வாத்தியம் இசைக்கும்
வாழைச்சேனை கரும்புக் காட்டில்
நிலத்துநீரை தண்டுகள் உறிஞ்சுவதில்லை
கரும்புச் சாறை நிலம்தான் குடித்துக் கொள்கிறது.
இலங்கை இந்து சமுத்திரத்தில் மிதக்கும்
ஒரு தீவு;
ஆனால் இரண்டு நாடுகள்.
தமிழீழம் பருவநிலை மாறுபடும் பகுதிகள் அடங்கிய
பரந்த தேசமல்ல...
ஒரேநாளில்
உதயத்தை காங்கேசன்துறையிலும்
அஸ்தமனத்தை அக்கரைப்பற்றிலும்
பார்த்துவிட்டு படுக்கைக்குப் போகலாம்.
மட்டக்களப்பின் முட்டித் தயிர்
புளிக்க முன்னர்
புங்குடுதீவுத் திருமணமொன்றின்
பந்தியிலே பரிமாறப்படும்.
யாழ்ப்பாணத்துக் 'கறுத்தக்கொழும்பான்'
அழுக முன்னர்
திருக்கோவில் தெருக்களில் விற்பனைக்கிருக்கும்.
வடதமிழீழம் வரண்டது;
வரண்டதேச தவிர சுருண்டதல்ல.....
தென்தமிழீழம் செழிப்பானது;
செழிப்பானதே தவிர செருக்கானதல்ல....
திருமலை தமிழீழத்தின் தலைநகர்.
எங்கள் வானத்துக்கு நிலவு ஒன்றுதான்;
தலைவனும் ஒருவன்தான்.
இன்று,
மனங்களை அடைத்து நின்ற மலைகளெல்லாம்
விடுதலை அதிர்வால்
வெடித்துச் சிதறுகின்றன.
பிரதேசப் பிரிவுகள்
போராட்டத் தீயால் பொசுங்கி எரிகின்றன.
தென்தமிழீழம்
எங்கள் தாயகத்தின் தலைவாசல்;
தானியக் களஞ்சியம்;
பாலும் தயிரும் பயிருக்குப் பாய்ச்சும் நிலம்
இன்று
தமிழரின் குருதி பாயும் நிலம்.
அவர்களின் கதண்ணீரைத் துடைக்க
கைகளை நீட்டுவோம்.
எதிரியைக் கலைத்து எல்லையைப் பூட்டுவோம்!

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# போர்க்கால இலக்கியங்கள்



அவருக்கு எரிச்சலுடன் கூடிய சிரிப்பு வந்தது. 'நாளைக்கு வெள்ளனத்தோட அச்சகத்துக்குப் போகவேண்டும். அப்பதான் அந்தப் புத்தக வேலை முடியும் எண்டு பாத்தா.... சைக்கிள் எல்லாத்தையும் கெடுத்துவிடும் போல இருக்கே?' மனதில் எழுந்த ஆத்திர ஆவேசத் துடன் சைக்கிளை வாசற்படி ஏற்றினார். சைக்கிள் சத்தம் வீட்டிற்குள் தகவல் பரிமாற்றம் செய்திருக்க வேண்டும். அவர் மனைவி ஓடிவந்தாள். அவர் முகத் தைப் பார்த்துவிட்டு 'என்னப்பா?' என்பது போல் தயக்கம் கொண்டு நின்றாள்.

'இதொரு இழவு.... சைக்கிளுக் குக் காத்துப்போட்டுது. காலையிலை படுக்கையாலை எழுந்தோடன 'சைக்கிள் ஒட்ட' பஞ்சு வேலைக்குப் போறதுக்கு முந்திப் போய் விட வேணும்... அப்பதான் நேரத்துக்கு 'பிறசு'க்குப் போகமுடியும்.....'

'காரில் போய் வந்த மனுசன் இப்ப இந்த ஓட்டச் சைக்கிளில் உடம்பு முறிய உழக்கிறதே!' என்று உருகி நின்றாள்.

"நான் சொன்னாக் கேட்டாத் தானே? இப்படியெல்லாம் முறிய வேண்டும் எண்டு என்ன தலை எழுத்தே?... பேசாம..." என்று அவள் ஆரம்பிக்கவும், அவள் என்ன சொல்லப் போகிறாள் என்பதனை ஊகித்தவராய் 'சரி சரி... நீ உன்ர புராணத்தை வாசலில் நிண்டு ஆரம்பத்து விடாத....' என்று உறுமினார்.

"இப்பத்த றோட்டுக்களெல்லாம் றோட்டுக்கள் போலவே கிடக்கு?..... இதுகளில சைக்கிள் ஓட்டுற தெண்டா சும்மாவே?.... இவ்வளவு

வீட்டு வாசலில் சைக்கிளை விட்டு இறங்கிய போது, சில்லுக்குக் காற்றுப் போனது போலிருந்தது. வலது கைப் பெருவிரலால் பின் சில்லை அழுத்திப் பார்த்தார். காற்று இறங்கி இருந்தது.

'சீ! எத்தனை தரம் எண்டுதான் ஒட்டுறது? ஒரு ஒட்டுக்குப் பத்துப் பத்தாக கொட்டி அழுததுக்குப் பதிலாகப் புதிசாவே போட்டிருக் கலாம். எண்டாலும் ரயரும் ரியூப்பும் என்ன விலை விக்குது?..... அந்த விலைக்கு விக்கிற ரயரும் ரியூப்பும் என்ன திறமோ.. அதுகளும் கொம்பனியால 'கொண்டெம்ப்' செய்ததுகளாகத்தான இங்க வருகுது. கம்பிக்கட்டு விட்ட ரயர்களும், ஜொயிண்டால காற்றுப்போற ரியூப்புகளுமா.... இப்பத்த சொலுசன், கொம்பவுண்ட் எல்லாம் முந்தி மாதிரியே கிடக்கு.... வெயிலுக்கை உருகிப் போகுது... சைக்கிள் பாட்ஸ் எண்டு என்னத்தை வாங்கக் கிடக்குது?..... கிறீஸ் இல்லை... போல்ஸ் இல்லை... வால்வ்ரியூப் இல்லை.... இதெல்லாம் தடை செய்யப்பட்ட பொருட்களாம்..... பொடியள் ஆமியை 'அட்டாக்' பண்ண சைக்கிளைப் பாவிக்கின மாம்....

**செம்பியன் செல்வன்**

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


நாள் ரயர் ரியூப் நிண்டு பிடிச்சதே என்ர கெட்டித்தனத்தால தான் கண்டியோ? முந்தி பொம்மர் சகடை எண்டு வந்து வீசி வீடு.... வாசல்... டிரான்ஸ் போமர்... றோட்டுக்களை அழிச்சாங்கள்.... குண்டும் குழியுமாக்கினாங்கள்.... இப்ப புகாரா... சுப்ப சொனிக்... எண்டு வந்து நகரத்தை நரகக் குழியாக்கிறாங்கள்..."

அவர் 'ஸ்ராண்டில்' சைக்கிளை நிற்பாட்டிவிட்டு 'கரியரிலி'ருந்த கொப்பிக் கட்டுகளை அவிழ்த் தெடுத்தார். அவள் அவற்றை வாங்கிச் சென்று மேசையில் வைத்தாள்.

'இப்ப பேப்பருக்கே பஞ்சம் வந்திட்டுது. அச்சிடும் பேப்பர் முந்தி றீம் முந்நூறு நானூறு எண்டு இருந்திச்சுது. இப்ப மூவாயிரம் நாலாயிரம் எண்டு ஏறிப்போச்சு.... அந்த விலைக்கும் சாமான் கிடைக் கிறது கஷ்டமாயிருக்கு... இப்ப கொப்பித் தாளிலதான் எதையெண் டாலும் அச்சடிக்க வேண்டியிருக்கு. பொடியள் காகிதத்தில குண்டு விமானம் செய்து வந்து தாக்கு வாங்களெண்டோ... அல்லது குண்டுகளே செய்துவிடுவான்க ளெண்டோ பயந்து காகிதமும் தடைசெய்யப்பட்ட பொருளாகி விட்டது...'

கூறிக்கொண்டே அவர் வீட்டிற் குள் நுழைந்தார். அவரின் பின்னால் மனைவியும் சென்றாள். கூடம் மெல்லிய ஒளியில் தடம் காட்டியது. சுவாமி படங்களின் முன்னால் எரிந்துகொண்டிருந்த அகல் விளக்குகள் மெல்லிய ஒளியுடன் தேங்காய் நெய் மணத்தையும் பரப்பிக்கொண்டிருந்தன. விழிகளை சமையலறைப்பக்கம் திருப்பினார். அங்கு அடுப்பு நெருப்பு ஒளி காட்டிக்கொண்டிருந்தது. அவள் அவருக்காக ஏதோ சூடாக தயாரித் துக் கொண்டிருக்க வேண்டும்.

"பிள்ளையள் எல்லாம் எங்கை யப்பா?" அவர் மெல்ல வினாவினார்.

"அதுகள் இவ்வளவு நேரமும் 'அப்பா அப்பா' எண்டு கேட்டுக் கொண்டு கிடந்ததுகள். சாப்பிட் டுட்டு இப்பதான் படுத்ததுகள்." என்றபோது மணி ஒன்பது அடித்தது.

"இண்டைக்கு நானும் வர நல்லாத்தான் செண்டுபோச்சு. நாலைஞ்சு இடத்தில பேப்பர் கிடக்கு எண்டு அலைஞ்சு திரிஞ் சதில வர நேரம் போச்சு. உந்தக் கொப்பியளைத்தான் வாங்க முடிஞ்சுது. முந்தி பத்து பதினொரு மணிவரை கண் முழிச்சுப் படிச்ச பிள்ளையள்... இப்ப ஆறேழு மணிக்கே படுக்கையைப் போடு துகள்.. இதுகள் எங்க படிச்சு நல்லா வரப்போகுதுகள்?...."

"ஏனப்பா.... அப்படிச் சொல்லு றீர்? அதுகள் என்ன பாடத்தில குறைவாவே மாக்ஸ் எடுக்குதுகள்? இப்ப நேர காலத்தோட மண்ணெய் தட்டுப்பாட்டில... இரவுச் சமையல் முடியுது... பிறகு ஏன் ஆறி அவலாப் போகவிடுவான் எண்டு கூப்பிட்டு நான்தான் சாப்பாட்டைக் குடுக் கிறன்.... சாப்பிட்டுட்டுப் படிக்கு துகள்... மின்சார விளக்கில படிச்சதுகளின் கண் உந்த விளக்கில களைச்சுப்போய் விடுகிறது... அதுகள் பாவங்களப்பா..."

"பேசிக்கொண்டு நிண்டது போதும்... முதலில் ஒரு விளக்குக் கொண்டுவாரும், கிணற்றடிக்குப் போக..."

அவள் அவசரமாக ஓடி விளக்கை எடுத்துவந்தாள் அவர் கை, கால், முகம் கழுவி வந்து துடைத்து திருநீறு பூசி சாமி படத்துக்கு முன் நின்று கண்மூடிக் கும்பிட்டு விட்டு பக்கத்திலிருந்த ஈசிச்சேரை இழுத்துப் போட்டு 'முருகா!' என்றவாறு அதில் சரிந்தார். தெற்குப்பக்க சுவரோரக் கண்ணாடி உடைந்து வெறும் சதுரமாகக் காட்சியளித்த யன்ன லூடாக காற்று சுகமாக வீசிற்று.

"சாப்பிடேல்லியேயப்பா...." மனைவி கேட்டாள். "கொஞ்சம் பொறுமப்பா!..... எப்பன் ஆறியிருந்து சாப்பிடுவம்...." அவர் கொஞ்சம் கண்ணை மூடினார். நெற்றிப் பொட்டில் இதுவரை நிலவிய கொதிப்பு சற்று அடங்கி.... இதமாக...

'எப்படி இருந்த தொழில்.... வாழ்க்கை?... எல்லாத்தையும் எப்படி இந்த அரசாங்கம் நாசமாக்கிப் போட்டுது... இருபத்தைந்து பேருக்கு மேலாக வேலை கொடுத்து 'கைடல்பேர்க் மிஷின், பிளேட்டிங் மிஷின்' என்று ஓடிக்கொண்டிருந்த

# போர்க்காலக் கருத்தரங்கு

**தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள போர்க்காலச் சூழ்நிலைகளை முன்னிட்டு தமிழீழ விடுதலைப் புலிகளால் கிராமங்கள் தோறும் போர்க்காலக் கருத்தரங்குகள் நடத்தப்பட்டு வருகின்றன. சங்கானை வட்டப் பிரதேசத்திலுள்ள இந்து இளைஞர் மன்றத்தின் முன்றலில் இடம்பெற்ற இத்தகு கருத்தரங்கொன்றில் போர்க்காலச் சூழலில் மக்களின் பங்களிப்பு பற்றிய கருத்துரைகளும், போர்க்கால நிகழ்வுகளை மையமாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட வீதி நாடகங்களும் சென்ற மாதத்திற்கான நிகழ்வுகளைக் கொண்ட ஒளிவீச்சு தொலைக்காட்சியும் நடைபெற்றன.**

**தொல்புரம் மத்திய சனசமூக நிலையம், மூளாய் இந்து இளைஞர் மன்றம், வட்டுக்கோட்டை கண்ணகை அம்மன் கோவிலடி, இடம்பெயர்ந்தோர் முகாம்கள் ஆகியவற்றில் நடைபெற்ற மேற்படி கருத்தரங்கொன்றில் பெரும்திரளான மக்கள் கலந்துகொண்டனர். விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர்களின் கருத்துரைகளும், சிறப்புரைகளும் அங்கு இடம்பெற்றன.**

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

அச்சகத்தை எப்படி நாசப்படுத்தி னாங்கள்...'

அவரால் அந்த நாளை மறக்கவே முடியவில்லை....

உச்சி வெயில். வெளியே கத்தரி வெயில் கனன்றுகொண்டிருக்க... வேலையாட்கள் பாதிப்பேர் மதிய உணவுக்குப் போய்விட.... அவர் தனக்கு வீட்டிலிருந்து வரும் சாப்பாட்டிற்காக காத்திருந்த வேளையில்தான் வாசலில் 'ஆமிட்ரக்' வந்து நிற்கிறது.

தொப்!... தொப்!... என்று ஆமிக்காரர்கள் குதிக்கிறார்கள். அவர்களைத் தொடர்ந்து சீருடை யணியாத ஆயுதபாணிகளாக சில இளைஞர்கள்....

'டேய்... முதலாளி எங்க நிக்கிறான்?...' அந்த இளைஞர்கள் கேட்பது காதில் விழ, நெஞ்சம் 'படபட'க்கிறது. மனம் எதனையோ விபரீதமாக கற்பனை செய்யத் தொடங்குகிறது...

யாரோ அவரது அறையைக் காட்டுகிறார்கள்.

அவருக்கு பிரக்ஞை தவறிய தென, கனவுபோல் கண்களிலே திரையொன்று விரிகிறது.

"டேய்!.... இந்த நோட்டீசு நீதான அடிச்சது?..." ஏதோவொன் றைக் காட்டுகிறார்கள். அவர் அதனை வாங்கிப் பார்க்கிறார். அவருக்குப் புரிந்துவிடுகிறது. அவர் அச்சகத்தில் அடித்ததுதான். யாருக்கு அடித்துக் கொடுத்தது என்பதும் விளங்குகிறது. என்றோ.... எப்போதோ.... அடித்துக் கொடுத் தது.... ஆனால் அச்சகத்தின் பெயரில்லை...

இவர் இல்லையெனத் தலை யாட்டுகிறார். அவ்வளவுதான் 'பளார்!' முகத்தில் ஒரு அறை விழுகிறது. அவருக்கு கண்முன்னால் பூச்சிகள் பறக்கின்றன. கரிக் கோட்டுச் சித்திரங்கள் கலைந்து போய் நடமாடுகின்றன.

நீ பொடியளுக்கு அச்சடித்துக் கொடுக்கிறவன்.... இது புலிகளின்ரை அச்சகம்... இங்கிருந்துதான் எல்லா நோட்டீசும் வெளிக்கிடுது... உண்மையைச் சொல்...

அவர் திடமாக மறுக்கிறார். வெளியில் சென்றிருந்த வேலை யாட்கள் புத்திசாலித்தனமாக 'ட்றக்'கைக் கண்டதும் வெளியி லேயே மாறிவிட்டார்கள். அகப் பட்டது அவரும் நாலைந்து தொழிலாளரும்தான்.

அவர்கள் அச்சகத்தையே புரட்டி எடுக்கிறார்கள். நோட்டீசின் மூலப் பிரதியைத் தேடுகிறார்கள். கிடைக்கவில்லை...

திரும்பவும் அவரிடம் வருகி றார்கள்.

"டேய்... உண்மையைச் சொல்.... இல்லாட்டி உன்னை இதிலேயே அடிச்சுக் கொண்டுபோடுவம்..." வந்த ஆமி பார்த்துக்கொண்டிருக்க அவர்கள் ஊளையிடுகிறார்கள்.

அச்சாகிக் கிடக்கும் 'போம்'களைக் கலைக்கிறார்கள்... 'கலிப்புறுவ்'களை சிதறுகிறார்கள்.... மிசினில் ஓடிக்கொண்டிருந்த 'மற்றரை' வாசித்துப் பார்க்கிறார் கள்... அங்கு சிவப்பு மட்டையில் 'பைன்ட்' ஆகிக் கொண்டிருந்த புத்தகத்தை அது வணிகவியல் பாடப்புத்தகம் என்று புரியாமல் அதை ஆமியிடம் காட்டி புரட்சி... இரத்தம்... பயங்கரவாதப் புத்தகம் என்றெல்லாம் கதைக்க... ஒரு ஆமி பல்லை நெறுமியபடி அவரை நோக்கி வருகிறான்.... மறுவிநாடி அவர் தரையில் புரள்கிறார். அவர் தலைமயிரைப் கொத்தாகப் பற்றி...

'இந்த அச்சு உன்ர பிறசில தான் இருக்கு... நல்லா விசாரிச் சுப்போட்டுத்தான் வந்தனாங்கள்... சொல்... இவங்கள் எங்க இருக் கிறாங்கள்... ஆர் ஓடர் தந்தது... தந்தவனைக் காட்டு...' பொடியன் களைப் பற்றிப் புரியாதவர்கள் ஏதோதோ கேட்டுச் சித்திரவதை செய்கிறார்கள். கீழே விழுந்து கிடந்தவரை ஒருவன் மூலையில் சாத்திக் கிடந்த தும்புத் தடியால் பிரட்டி எடுக்கிறான்....

"உன்னை இங்கு வைச்சுக் கேட்டா நீ சொல்லமாட்டாய்... அங்க கொண்டுபோனாத்தான் சரியாப் பதில் சொல்லுவாய்.... எழும்படா..." அவர் எழும்ப முயற்சிக்கிறார். முடியவில்லை.... "எழும்படா. என்னடா பாசாங்கு செய்கிறாய்!" என்று ஒருவன் தும்புக்கட்டையை கைபிடிக்கில் செருகி நிமிர்த்துகிறான். அவர் வேதனையுடன் எழுந்து நிற்க, அவன் பலமாகத் தள்ளுகிறான். அவர் கால்பாவாமல் தடுமாறி கதவடியில் போய் முட்டிக்கொண்டு நிற்கிறார். அவரை அடித்துக் கொண்டே வாசல்வரை கொண்டு போகிறார்கள்.... யாரோ ஒருவன் அவரைத் தூக்கி ட்ரக்கில் போட, கோட்டையை நோக்கி அது விரைகிறது.

கோட்டை.... பலாலி இராணுவ முகாம் என்று அவர்களது 'பிக்னிக் ஸ்பொட்'களிடையே அவரது சித்திரவதைகள்.... வஞ்சகப் பேச்சுக்கள்.... ஆசை வார்த்தைகள்

## தமிழ் நாட்டில் வீடுகளிலும் கடைகளிலும் பிரபா படம்

தமிழ்நாட்டிலுள்ள பல கிராமங் களில் வர்த்தகநிலையங்கள் மற்றும் வீடுகளில் விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனின் உருவப்படம் காணப் படுகிறது.

தமிழ்நாட்டு நகரப்பகுதிகளில் முன்னர் பிரபாகரன் படம் இருந்த இடங்களில் இந்தியாவின் தடை உத்தரவிற்குப் பின்னர் புலிமுகப் படங்கள் காட்சியளிக்கின்றன.

சில வீடுகளிலும் புலிமுகப் படங்கள் இருப்பதைக் காணக் கூடியதாக இருக்கிறது. இது விடுதலைப் புலிகளுக்கு தமிழக மக்களின் ஆதரவு அதிகரித்துள்ளதைக் காட்டுவதாக தெரிவிக்கப்படுகிறது.

(செய்தி: ஈழநாதம்)

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


என்று காலம் ஓட, இந்திய இராணுவம் மூட்டை கட்ட அவர் விடுதலையாகி வருகிறார்....

அன்றிலிருந்து அச்சகம் என்றாலே அவர் மனைவிக்கு அடிவயிற்றிலே நெருப்பு போல... ஆனால்... அவரிலோ பலத்த மாற்றம். ...அவர் ஒருபோதும் முதலாளியாக இருந்ததில்லை. தொழிலாளர்களுடன் தானும் ஒரு தொழிலாளியாக வேலை செய்வதில் மிகுந்த சந்தோசம் கொள்பவர். அச்சகத்தின் சகல பிரிவு வேலைகளும் அவருக்கு அத்துபடி. ஒரு உன்னதமான தொழிலாளியே சிறந்த முதலாளியாக இருக்க வேண்டும் என்று எண்ணுபவர். அச்சக வேலையில் நாள்தோறும் ஏதோ வொரு படைப்பு புத்தம் புதிதாக வெளியேறும்போது, மகிழ்ச்சியின் களிப்பில் வியர்வைத் துளிகள் உலர்ந்து மணம்பரப்பும்.

இராணுவத்தின் சித்திரவதை முகாம்களும், அங்கு 'பொடியள்' படும் கஷ்டங்களும் போராட்டம் பற்றிய புதிய பார்வையை அவரிடம் எழுப்பியிருந்தன. அதில் அச்சகங்களின் முக்கியத்துவம் என்ன என்பதும் அவருக்குப் புலனாகின. பொடியளை அவர் நெஞ்சம் நேசிக்கத் தொடங்கியது.

விடுதலையாகி வீடு வந்தால்....

வீட்டு நிலைமை மோசமாகி யிருந்தது.... மனைவியும் பிள்ளைகளும் 'அரைவாசி'யாய்ப் போயிருந் தார்கள்.... தலைவனில்லாத வீடு... நல்ல தலைவனில்லாத நாடும் இப்படித்தான் ஆகும் என்று அவர் மனதில் ஏனோ பட்டது... எட்ட விழுந்த குண்டுகள் கூட தன் வீட்டின் தாவார ஓடுகளையும், யன்னல் கண்ணாடிகளையும் உடைத்திருப்பதைக் கண்டார். கிணற்று நீர் குடிப்பதற்கு உதவா மலும், குளித்ததினால் உடற் சருமத்தில் சொறிகளையும் உண்டாக்கியிருப்பதையும் பார்த்த போது வாய்விட்டே அலறிவிட்டார்.

அச்சகத்தை ஓடோடிப்போய்ப் பார்த்தார். பலத்த சேதத்துக்கு ஆளாகியிருந்தது. பல எழுத்துக் கேஸ்களைக் காணவில்லை. 'கைடல் பேர்க்கில்' சில பாகங்களைக் காணவில்லை. 'ஸ்டிக்கர்', 'லெட்' எல்லாமே மாயமாக மறைந் திருந்தன. மின்சாரம் ஓடிய வயர்கள்... பல்ப்... மீற்றர் எல்லாம் அறுந்தும் உடைந்தும்....

அவரது இரத்தமே உறைந்து போயிற்று.

'நான் சோரமாட்டேன். ஒரு போதும் சோரமாட்டேன்' என்று சொல்லிக்கொண்டார்.

அச்சகத்தைப் புதுப்பிக்கத் தொடங்கியதும்தான் எத்தனை 'வேலைப்பளு' காத்திருக்கிறது என்று பட்டது.

மின்சாரம் இல்லை. மோட்டார் வாங்கி இணைத்தார். எரிபொருளை அரசாங்கம் தடைசெய்தது. மண் ணெய்க்கும் தட்டுப்பாடு.... பிளேட் டின் மிஷினைக் காலால் அழுத்த லாம் என்றால் அச்சுத்தாளைக் கண்டு இராணுவம் அச்சம் கொள்கிறது. காகிதப் பஞ்சம்....

அவள் அவசரமாக உள்ளே இருந்து வருகிறாள்.

"இஞ்சரப்பா !...."

அவர் விழிகளைத் திறந்தார். அவள் கையில் ஒரு வெளிநாட்டு விமானத் தபால்.. முகத்தில் ஒரு பரபரப்பு...

"ஓ!... 'மேர்க்ஸ் குமண' கப்பல் இம்முறை தபால் பொதிகளையும் கொண்டுவந்துள்ளதாக நேற்று 'ஈழநாத'த்தில் படித்தது நினைவுக்கு வந்தது.... இவளுக்கும் கனடா மச்சாள் தங்கச்சி கடிதம் போட்டிருக்கிறாள் போல...."

அவர் விழிகளை மூடிக் கொண்டார்.

"என்னப்பா நித்திரையே... உங்கட தங்கச்சியெல்லே கடிதம் போட்டிருக்கிறாள்."

"என்னவாம்?...." கண்களைத் திறக்காமலே கேட்டார். ஏதோ எதிர்பார்த்து வந்தவளுக்கு ஏமாற்ற மாக இருந்தது.

"என்னப்பா!.... இப்படிக் கேக்கி

# ஒரு 'புலி'யைக் கொல்ல 300 இலட்சம் செலவு!

சிறீலங்கா அரசு ஒரு புலியைக் கொல்ல 300 இலட்சம் ரூபாவைச் செலவிடுகிறது என மக்கள் நண்பர் அமைப்பின் இணை அமைப்பாளரான சம்பிக ரணவக்க கூறியுள்ளார்.

காலி நகரசபையில் நடைபெற்ற இந்த அமைப்பின் கருத்தரங்கில் பேசிய அவர் இந்த அரசு இந்த வருடமும் மூவாயிரம் கோடி ரூபாக்களை வெளிநாட்டு நிதி உதவியாகப் பெற்றுக்கொண்டு யுத்தம் புரிகிறது. கடந்த காலத்தில் கொல்லப்பட்ட விடுதலைப் புலிகளின் எண்ணிக்கையை அரசின் புள்ளிவிபரங்களுடன் கணக்கிட்டால் ஒரு புலியைக் கொல்ல 300 இலட்சம் ரூபாவை அரசு செலவிட்டுள்ளதை அவதானிக்கலாம்.

நாட்டில் 20 இலட்சம் இளைஞர்களும் யுவதிகளும் தொழிலின்றி அலைகின்றனர். நாட்டில் 60 சதவீதமானோருக்கு போஷாக்கு இல்லை. இலங்கையையும் சோமாலியாவாக மாற்ற முயற்சி நடைபெறுகிறது. இதற்கு நாம் இடமளிக்க முடியுமா? படுகொலை அரசியலை முடிவுக்குக் கொண்டுவருவது எவ்வாறு? என்றெல்லாம் நாம் சிந்திக்க வேண்டும் எனவும் அவர் இங்கு குறிப்பிட்டார்.

நன்றி: ஈழநாதம்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

றியள்.... கடிதத்தைப் படிக்காமல்..."

"என்னத்த எணை படிக்கிறது? நாலுமாசத்துக்கு முந்திப் போட்டதாயிருக்கும்.... அதில இருக்கிற புதினம் எல்லாம் பழசாப்போயிருக்கும்.... அதில வேறென்னத்த எழுதியிருக்கப்போறாள்... நாலு மாசத்துக்கு முந்தி அவளின்ரை பேத்டே நடந்திருக்கும்... அந்தப் படங்களோட, அண்ணை ஏன் அங்க கிடந்து கஷ்டப்படவேணும்.... அவரையும் கூட்டிக்கொண்டு வா எண்டு எழுதியிருக்கிறாளே..."

அவளின் ஈர விழிகள் அந்த இருளிலும் பள பளத்து வியப்பால் விரிவது அவருக்குத் தெரிந்தது.

"உங்களுக்கு எல்லாம் நக்கல்தான். இப்ப இங்க என்ன எங்களுக்குக் கொட்டிக்கிடக்கு? அச்சகமும் முந்தி மாதிரிப்போல இல்லை. அச்சடிக்க எழுத்தில்லை... மையில்லை... காகிதமுமில்லை... கரண்டுமில்லை... வருமானமும் குறைவு... பொருட்களின் விலையோ நாலுமடங்கு... பேசாம எல்லாத்தையும் விட்டிட்டு அங்க போனா நிம்மதியாச் சீவிக்கலாம்..."

"நீ என்ன யோசித்துத்தான் பேசுறியோ?... நிலவுக்கஞ்சி பரதேசம் போனது போலத்தான் இருக்கு... இங்கயெண்டாலும் உரிமைக்காகப் போராடலாம்... அங்க அப்படி முடியுமே... ஆராருக்கோ உழைச்சு கொடுக்கவோ நாங்கள்? இப்படி உழைச்சு உழைச்சுக் கொடுக்கக் கொடுக்க அவங்கள் உயர்வடைகிறாங்கள்... நாங்கள் கீழகீழ போய்க்கொண்டிருக்கிறம்..."

அவள் முகம் ஏமாற்றத்தால் சுருங்கியது.

"அப்ப என்னப்பா சொல்லுறியள்?...."

"என்னத்த சொல்லுறது? அங்க போய் என்ன செக்கியூறிற்றி வேலையே செய்யிறது... பெரிய பெரிய இங்கத்த நீதவான்கள் கூட அதைத்தான் செய்யினமாம்.... இங்க எங்கட மண்ணை அந்நியன் தீண்ட அதுக்கு யார் செக்கியூறிற்றி... இந்தப் பொடியளோ?.. இங்க அரை வயிறெண்டாலும் மானமா சொந்த வீடு வாசல் தொழில் எண்டு சீவிக்கிறம்... அங்க போய் இன்னும் அடிமைச் சீவியமே?... கள்ளர் போலப் போய்... கள்ளர் போல உழைத்து.. கள்ளர் போல வாழ்ந்து... இதில இன்னும் பெரிய வேதனை என்னனண்டால் பெரியவை நாங்கள் தான் நாசமாப் போறமெண்டு எங்கட சந்ததியையுமெல்லே முகவரியில்லா அடிமைகளாக்கி விடுறம்..."

அவர் ஈசிச்சேரை விட்டு எழுந்தார்.

"சரி சரி வந்து சாப்பாட்டைப் போடும். காலையில வெள்ளன எழும்ப வேணும்....?

அவள் முகம் சுண்டியவளாக நடந்தாள்.

அதிகாலையிலேயே எழுந்து போய் சைக்கிள் பஞ்சரை ஒட்டி வீட்டிற்கு வந்தபொழுது வீடு இரண்டுபட்டுக் கொண்டிருந்தது. அவர் இரவு அச்சடிப்பதற்காக வாங்கி வந்திருந்த கொப்பிகளை 'உனக்கு எனக்கு' என்று குழந்தைகள் பங்கு போட்டு சண்டை பிடித்துக்கொண்டிருந்தன. அவள் சமையலறையில் வேலையாக இருந்தாள்.

அவருக்குக் கோபம் கண்ணை மறைத்தது. சைக்கிளை வேகமாக இழுத்து 'ஸ்ராண்டில்' நிறுத்தினார். அவரைக் கண்டதும் குழந்தைகள் தங்கள் சண்டையை மறந்து நியாயம் கேட்க அவரை நோக்கி ஓடி வந்தன.

"அப்பா எனக்கு தமிழுக்குக் கொப்பியில்லை.... அண்ணா தரமாட்டானாம்..."

"அப்பா... டீச்சர் என்னட்ட கொப்பியில்ல எண்டு நேத்து அடிச்சவ... நான் கொப்பியில்லாம பள்ளிக்கூடம் போக மாட்டன்..."

அவர் கோபம், குழந்தைகள் பிரச்சினையிலில்லை. அச்சுக்குக் கொடுக்க வேண்டிய தாள்கள் வீடு முழுவதும் சிதறி...

இரண்டு குழந்தைகளையும் பற்றி இழுத்து...

குழந்தைகளின் அலறலைக்

# கிளஸ்ரர் குண்டு

முல்லைத்தீவு பிரதேசத்தில் முதன் முதலாக மாத்தலன் என்னும் இடத்தில் கலை நிகழ்ச்சியைப் பார்த்துக்கொண்டிருந்த பெரும் மக்கள் கூட்டத்தின் மீது இரவில் இக்குண்டு போடப்பட்டது. நிலத்தில் விழுகின்ற வேளை பல குண்டுகளாக பிரிந்து வெடிப்பதே கிளஸ்ரர் குண்டு ஆகும். இவ்வருடம் புரட்டாதி மாதம் வீசப்பட்ட இக்குண்டுவீச்சின்போது 27 பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டனர். இவை சர்வதேச போர்ச்சட்டங்களின் கீழ் தடைசெய்யப்பட்ட குண்டுகளாகும். கிளாலிப் படையெடுப்பின் போதும் அண்மையில் இக்குண்டு வல்வெட்டித்துறையில் வீசப்பட்டதை நேரில் பார்த்த ஒருவர் பின்வருமாறு கூறுகின்றார். "நான்கு அடி நீளமான ஒரு பொருள் கெலியிலிருந்து போடப்பட்டது. அது ஐந்தாகப் பிரிந்து திடீரெனச் சீறிக்கொண்டு வெடித்தன." தாக்குதலின்போது அரைமைல் சுற்றளவுப் பிரதேசத்தில் 18 இடங்களில் இத்தகு குண்டுகள் வெடித்திருந்தன. பொதுமக்கள் பதுங்கு குழிக்குள் ஒழித்துக்கொண்டனர். பொதுமகனொருவர் கொல்லப்பட்டார். நால்வர் காயமுற்றனர். பல வீடுகள் சேதமடைந்தன. ஒரு மாடிவீட்டைத் துளைத்துச் சென்ற ஒரு குண்டு பக்கத்துச் சுவரைச் சிதைத்திருந்தது.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



கேட்டு அவள் ஓடி வந்தாள். குழந்தைகள் இரண்டும் 'அலக்க மலக்க' மல்லாந்து நிலத்தில் வீழ்ந்து கிடப்பதைக் கண்டதும் அவளால் தாள முடியவில்லை.

"என்ன செய்தனியள்?.... என்ர குஞ்சுகளை என்ன செய்தனியள்.... புள்ளையளைக் கொல்லவா போறியள்....? அடிகிடி என்னென்னத்தில பட்டுதோ தெரியேல்லியே!' என்ற வாறு ஓடிச்சென்று குழந்தைகளைத் தூக்கினாள்.

அப்போதுதான் அவருக்குத் தான் செய்த வேலையின் கொடூரம் புலப்பட்டது. உள்ளுக்குள் வெட்கிப் போனார். ஆனாலும் சமாளிப் பதற்கு "பார் அச்சுக்கு வாங்கிய கொப்பியளை?.. இதுகள் கசக்கி எறிஞ்சுபோட்டுதுகள்... இதுகளுக்கு கொஞ்சமும் மூளை இருக்கா?" என்று கத்தினார்.

"அதுகளுக்கு ஒழுங்கா கொப்பி புத்தகங்களை வாங்கிக் கொடுத்தா அதுகள் ஏன் உங்கடயள எடுக் குதுகள். பெரிய அச்சகம் நடத்து றாராம்... புள்ளையள் படிக்க நாலு கொப்பி கட்டிக்கொண்டு வந்து கொடுக்க வழியில்லை... இங்கயே கிடந்து என்னையும் புள்ளைய ளையும் கொல்லத்தான் வழிபார்க் கிறார்." அவள் இரவு நினைவு களுடன் புலம்பத் தொடங்கினாள்.

"சீ!... வீடு வர வர நரகமாகி வருகிறது" என்றபடி கொப்பிகளை எடுத்து 'கரியலில்' கட்டினார். சைக்கிளை வெளியே எடுத்தார். குழந்தைகள் பயத்துடன் பார்த்தபடி நின்றார்கள். புலம்பிக்கொண்டு இருந்தவள் திடீரென நிறுத்திவிட்டு, "சாப்பிட்டிட்டுப் போங்களேன்..." என்று கூறவும், "நீயும் உன்ர சாப்பாடும்" என்று பதிலுக்குக் கத்திவிட்டு, சைக்கிளில் ஏறி மிதிக்கலானார்.

அச்சக வாசலிலே அவர் இறங்கவும், அவர் வருகைக்காக காத்திருந்த ஒருவர் எழுந்து நின்றார்.

"என்ன கனகசபை, எங்களை எல்லாம் மறந்தாச்சுப் போல... நாங்கள் பேப்பருக்கு எவ்வளவு அலையுறம் தெரியுமே?..."

> **விடுதலைப் புலிகள் வாழவேண்டும் என்றோ, ஆளவேண்டும் என்றோ ஆசைகொள்ளவில்லை. எமது மக்களுக்கு நிரந்தரமான, சுபீட்சமான எதிர்காலம் கிடைக்குமானால் நாம் அனைவரும் மரணிக்கவும் தயாராக உள்ளோம்.**
>
> *திலீபன்*

"உங்களுக்குத் தெரியும்தான். மார்க்கட்டில சாமான் சூடு... அதுதான்... வாறதில்லை... இராத்திரி கொஞ்சம் கிளாலியால வந்திருக்கு... வேணுமெண்டால் சொல்லும்... விலை கொஞ்சம் சூடுதான். ஜேஓசி காரன் கடுமையா நிக்கிறான் பேப்பர் விசயத்தில... அதால வழியில கனலட்சங்கள் புரள வேண்டியிருக்கு... கிளாலியைக் கடந்து கொண்டுவாறதும் பெரிய 'றிஸ்கி'யாக் கிடக்கு... சாமான் படகுகளுக்கு சூடு விழுகுது... இதுகள் எல்லாத்துக்கும் தப்பித்தான் சாமான் வரவேண்டியிருக்கு. என்ன சொல்லுறீர்... வெளியில மூண்ட ரைக்குப் போகுது... வாடிக்கையாள் மூண்டுக்கெண்டால் அனுப்புறன்...'

அவருக்கு உள்ளூர மகிழ்ச்சி எழுந்தது. அந்தப் புத்தக வேலையை முடிச்சிடலாம்.

"சரி.. சரி.. விலையைப் பேந்து பேசுவம்... ஒரு பத்து றிம் அனுப்பும்..

மண்ணெய்ப் புகையைக் கக்கியவாறு மோட்டார் ஓடத்தொடங்கியது. எட்டெட்டுப் பக்கங்களாகப் புத்தகம் அச்சேறலா யிற்று. அவர் ஆவலுடன் அதன் அருகில் போய் நின்றுகொண்டார். அந்த மகிழ்ச்சி அச்சகக்காரனுக்கும் நூலை எழுதியவனுக்கும்தான் விளங்கும்.... அந்த ஈர மையின் பள பளப்பு எவ்வளவு அலாதியானது....

பக்கங்கள் போம்... போமாக.... அச்சிட்டு ஓட...

இதென்ன!...

"நிறுத்து.. நிறுத்து" பலமாகக் கத்தினார். அவசரமாக ஒரு பக்கத்தை எடுத்துப் பார்த்தார். தாளின் நடுவில் எதுவோ துளைத் தது போல் கிழிசல்... யந்திரத்தில் கோளாறா?...

அவரும் மிஷின்மைன்டரும் பார்த்தார்கள்.

ஒரு பிழையும் தெரியவில்லை.

முதலில் ஓடிய பக்கங்களில் கிழிசல் காணப்படவில்லை. புதிதாக இப்போதுதான்.... பத்திருபது தாள்கள்...

ஒருவேளை பேப்பர் றீமில கிழிசல்கள் இருக்கோ?

எப்படி இருக்க முடியும். நாங்கள்தானே பக்கட் உடைச்சுப் போட்டது... எதற்கும் அடிக்க இருக்கும் பேப்பர்களைப் பார்ப்பம்...

அவர்கள் அந்த றீம் பேப்ப ரைப் பார்த்தார்கள்.

அந்த றீமில் மத்திய பாகத்தில் பேப்பர்கள் வெடித்தது போல் கிழிசல்...

அவருக்கு ஆத்திரம் ஆத்திர மாக வந்தது.

றீமுக்கு மூண்டு வாங்கிறாங்கள். ஆனால் கழிவுப் பேப்பர்கள்? வரட்டும்.... வரட்டும்.... காசு வாங்க...

"கிழிஞ்ச பேப்பரை தனியா எடுத்து வை... அவன் வந்தாக் காட்டவேணும்.... பதிலுக்கு நல்ல பேப்பர் வாங்குவம்"

மெஷின் மைன்டர் நடுவில் கிழிந்த தாள்களை சேகரிக்கத் தொடங்கியவன்... திடீரென்று "ஐயா!" என்று கத்தினான்.

"என்னடா!.... என்னடா!..." என்று அவர் அவன் அருகே ஓடினார். அவன் அந்தப் பொருளைச் சுட்டிக் காட்டினான்.

வெள்ளைத் தாளின் மத்தியில் அது பள பளத்துக் கொண்டிருந்தது.

அது வெடித்த ரவைக்குண்டு.

★★★

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# மறைந்துபோன தமிழ்க் கிராமம்

செ. கிருஸ்ணராசா

கிராமங்கள் பண்பாட்டின் பாதுகாப்பு மையங்கள். நாட்டினதும் இனத்தினதும் பண்பாட்டைக் கண்டுகொள்ள வேண்டுமாயின் கிராமங்களுக்குச் செல்லவேண்டும். அக்கிராமங்கள் பண்பாட்டு அம்சங்களின் விளை நிலமாக மட்டுமன்றி, உணவு உற்பத்திக் களஞ்சியமாகவும் இருந்துவருகின்றன. எமது கிராமங்களும் இதற்கு விதிவிலக்கல்ல. ஆனால் எமது புராதன பழம்பெருங் கிராமங்கள் சில இன்று திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களினால் மறைக்கப் பட்டுவிட்டன. மறைந்த புராதன தமிழ்க் கிராமங்களின் வரிசையில் சிறிபதிக் கிராமமும் ஒன்றாகும்.

வரலாற்றுக் காலத்தில் 'சிறிபதிக் கிராமம்' என அழைக்கப்பட்ட புராதனம் வாய்ந்த இந்த தமிழ்க்கிராமம் இன்று பதவியா என்ற மருவுப் பெயரில் சிங்கள மக்களது கிராமமாக குடியேற்றத்தின் ஊடாக மாற்றுவிக்கப் பட்டுள்ளது. திருகோணமலை மாவட்டத்திற்குள் அமைந்து காணப்படும் இக்கிராமத்தின் உள்ளேயும் அயலிலேயும் புராதன திராவிடப் பண்பாட்டின் எச்சங்கள் பல சிதறுண்ட நிலையில் காணப்படுகின்றன. ஏற்கனவே சேகரிக்கப்பட்ட தொல்லியற் சான்றுகள் இக்கிராமத்தினுடைய பழைமைத் தன்மையையும் பாரம்பரியத்தின் இனங் காட்டலையும் வெளிப்படுத்தி நிற்கின்றன.

பதவியாவிலிருந்து கண்டு பிடிக்கப்பெற்று, பதிப்பிக்கப்பெற்ற சில தமிழ்ச் சாசனங்களிலிருந்தே அதன் பழைமைத் தன்மை உணரப்பட்டது. அத்தமிழ்க் கல்வெட்டுக்களில் சிறிபார்வதி புரம் எனவும், ஸ்ரீபதிக்கிராமம் எனவும் சிறிபுரம் எனவும் அக்கிராமத்தின் பெயர் குறிப்பிடப்பட்டிருந்த தன்மையைக் கண்டுகொள்ள முடிகிறது. 'பார்வதி சத்திரம்' ஒன்று அங்கு கட்டப்பட்டிருந்ததற்கான சாசனச் சான்றுகளும் கிடைத்துள்ளன.

பதவியாவிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட தொல்லியல் எச்சங்களுள் நந்தி இலச்சினை பொறித்த ஒரு முத்திரையும் அடங்கும். செம்பினாலான வட்ட வடிவான இவ்விலச்சினை யாழ்ப்பாணத்து சிங்கை ஆரிய மகாராசாக்களினால் வெளியிடப் பட்டிருந்த சேது நாணயத்தின் முற்பக்கத்திலுள்ள வடிவங்களை ஒத்துள்ளது. முன்னங்கால்களுள் ஒன்றினை மடக்கிப் படுத்துக் கொண்டிருக்கும் ஓர் எருதுவுக்கு முன் குத்துவிளக்கு ஒன்றும், எருதுவுக்கு மேற்பக்கத்தில் பிறையும் நட்சத்திரமுமாக அச்சின்னம் அமைந்துள்ளது.

சிறிபதிக் கிராமமான பதவியாவிலிருந்து குறிப்பிட்ட எண்ணிக்கையான பார்வதி விக்கிரகங்களும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அவை இன்னும் சரியான முறையில் அடையாளம் காணப்பாடாது தொல் பொருட் காட்சிச் சாலைகளில் வைக்கப்பட்டுள்ளன. இச்சிற்பங்களுள் பெரும்பாலானவை இலக்குமி சிலைகளாக இருக்கவும் கூடும். சிறி இலக்குமியினது இன்னொரு பெயராகும். இச்சிலைகளைப் பற்றி மேலும் ஆராய இடமுண்டு. எவ்வாறெனின் இவை ஈழத்தமிழரின் சிற்பக்கலை மரபுகளை இனங் காண உதவுகின்ற படிமங்களாகவே இருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இதுவரையில் பதவியாவிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தொல்லியற் சான்றுகளின் படி, அக்கிராமமானது தனித்துவமான சைவமதத் தொடர்புடைய ஒரு தமிழ்க்கிராமமாக விளங்கியிருந்தது என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அந்நிலையை அக்கிராமமானது ஈழத்தினை சோழர் ஆண்ட காலத்திலோ அல்லது அதற்கு முன்னரோ பெற்றிருந்திருக்கலாம். கந்தளாய் ஒரு பிராமணக் குடியேற்றமாக, சதுர்வேதி மங்கலமாக விளங்கிய காலத்தில் சிறிபதிக் கிராமமும், பார்வதி, இலக்குமி வழிபாட்டுடன் தொடர்புபட்டிருக்கக்கூடும்.


இவ்வாறான ஒரு நிலை இன்று மடிந்துவிட்டது. அப்பண்பாட்டிற்குரிய தளம் கைமாறிப் போய்விட்டது. இருந்தும் புராதன தொல்லியற் தடயங்கள், இழந்த எம் வாழ்க்கையை, பண்பாட்டினை குறிகாட்டிக்கொண்டேயிருக்கின்றன.

**நன்றி: நங்கூரம்**

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# எழுத்துலகில் நாக. பத்மநாதன்



நாக. பத்மநாதன் அவர்கள், எழுத்துலகிற்கோ இன விடுதலைப் போராட்ட வாழ்விற்கோ புதியவரல்ல.

பொங்கிப்பிரவாகித்துப் புரண்டெழும் கடலலையைப் போலல்லாது, அமைதியான ஒரு நீர்ப்பாசனக் குளத்தைப் போலவே அவரது இலக்கிய வாழ்வும், அரசியல் வாழ்வும் உருண்டோடி வந்திருக்கின்றது.

எமது மூத்த சந்ததி, ஐயாவைப் பற்றி ஓரளவு தெரிந்து வைத்திருந்தாலும், இளைய தலைமுறைக்கு ஐயாவை அறிமுகப்படுத்தியது விடுதலைப் புலிகள், அதில் வெளியாகிவரும் அவரது உருவக வடிவிலான இலக்கியப் படைப்புகள்தான் என்றால் மிகையாகாது.

ஏறக்குறைய கடந்த மூன்று வருடங்களாக அவர் எழுதிவரும் எழுத்துக்கள், ஒரு புலிவீரனின் துப்பாக்கியிலிருந்து கனன்று செல்லும் ரவையைப் போல ஆவேசம் நிறைந்ததும், சக்தி வாய்ந்ததுமாகவே இருக்கின்றன.

சமூக அநீதிகளையும், தனி மனித பலவீனங்களையும் அவரது பேனா குறிவைக்கும் போது ஆணித்தரமான கருத்துக்களை வெளிப்படுத்தும் அதேவேளை, புலிவீரர்களின் வீரத்தை, அவர்களின் தியாகத்தை சித்தரிக்கும் போது போர்க்குணம் கொண்டதாக மாறிவிடுகின்றது.

இந்தவகையில், போராட்ட நிகழ்வுகளை இலக்கியமாக்கும் பணியில் போராளிகளுடனேயே வாழ்ந்து தனது உச்சப் பங்களிப்பை நல்கி வருகின்றார்.

இது மட்டுமல்ல, எமது தாய்நிலத்தில் சிங்களப் பேரினவாதப் புயல் வேகங்கொண்டு வீசத்தொடங்கிய நாளிலிருந்து, அதற்கெதிரான போராட்டங்களிலும் ஐயா ஒரு தொண்டனாக பங்குபற்றி வந்திருக்கின்றார்.

அந்தப் போராட்ட வாழ்வில் எவ்வளவோ துன்பங்களையும் அசௌகரியங்களையும் விரும்பியேற்று, தமிழ் மக்களின் அரசியல் சுபீட்சத்திற்காகத் தன்னை வருத்தி உழைத்திருக்கின்றார். இந்த முதிர்ந்த வயதில் அவரது இதயம் குறைந்த வேகத்துடன் துடிக்க முற்பட்டாலும் அவரது எழுத்துப்

**'ஐயாவின் எழுத்துக்கள் ஒரு புலிவீரனின் துப்பாக்கியில் இருந்து கனன்று செல்லும் ரவைகளைப் போல ஆவேசம் நிறைந்ததும், சக்தி வாய்ந்ததுமாக இருக்கின்றன.'**

பணி இப்போதுதான் வேகம் பெற்றிருக்கின்றது. இதற்கு, கடந்த மூன்று வருடகால அவரது எழுத்துப்பணி சிறந்த உதாரணம்.

ஐயா தனது முன்னுரையில் குறிப்பிட்டதைப்போல, கடந்த நாற்பத்துமூன்று வருட வாழ்வில் அவர் எழுதிய உருவகங்கள் இந்த நூலிலுள்ள முப்பத்துநான்குதான். ஆனால், இந்த முப்பத்துநான்கில் கடந்த மூன்று வருடத்தில் அவர் எழுதியவை பதினாறு என்பது குறிப்பிடத்தக்கது. சிரித்திரன், சுடர், வெளிச்சம், சாளரம், ஆதாரம் ஆகிய இதழ்களிலும் அவரது ஆக்கங்கள் இடம் பெற்றிருக்கின்றன.

'அதிர்ச்சி நோய் எமக்கல்ல' என்ற இந்த நூலில், மண்பற்றும், இனவிடுதலையும், இதற்கான தியாகங்களும் அலைவீசி நிற்பதைக் காணலாம்.

இதேவேளை, ஐயா எழுதிய 'வள்ளுவர் வழியில் வீரம், மானம்' என்ற நூல் எமது 'தமிழ்த்தாய் வெளியீடாக' 1992 இல் வெளிவந்துள்ளமையும் குறிப்பிடத் தக்கது.

**(இவரது நூலை வெளியிட்டு வைத்த தமிழ்த்தாய் பதிப்பகம் எழுதிய பதிப்புரையிலிருந்து)**

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

**தமிழீழத்தில் அண்மையில் நடைபெற்ற கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்த ஓவியங்கள். சிங்கள இராணுவத்தினரின் கொடுமைகளை சித்தரிக்கின்ற ஓவியங்களும் இன்னும் கலைவெளிப்பாடுகளோடு கூடிய பிற ஓவியங்களும் அக்கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்தன. அவ்வோவியங்களில் சிலவற்றை இங்கு காண்கிறீர்கள்.**

1983 ஆனித் திங்களில் கன்னியா 10ம் கட்டையில் குடியிருந்த தமிழுணர்வு மிக்கவரான திருநாவுக்கரசு குடும்பத்தினர் அயலில் குடியேறிய சிங்கள இன வெறியர்களால் கொடூரமாக வெட்டிக் கொல்லப்பட்டனர். இவர்களின் மூன்று வயதான சிறுமி உஷா எரியும் நெருப்பில் வீசப்படும் காட்சி, திருமலைத் தமிழ் மக்களின் துயர்தோய்ந்ததில் சூழ்ந்த வாழ்வுக்கே சாட்சி.



1984ல் திருகோணமலையில் ஒரு கிராமத்தில் பயிரழிவு நிகழா வண்ணம் பரண்மீது காவல் புரிந்து நின்ற சிறுவனை உயிரழிவு செய்து வதைத்தனர் சிங்கள இராணுவ உலுத்தர்கள். கால் கைகளில் துளையிட்டு, தலைகீழாய் தொங்கவிட்டு அடிமேல் அடியெடுத்து அங்கமெல்லாம் சிதைத்தபின்னர் வெடிவைத்து விளையாடும் வெறிகொண்ட சிங்களத்துப்படையினர் வீரம் காணீர்.

**1984ல் திரியாயைச் சேர்ந்த தமிழ்க் குடிமக்கள் நால்வர் சிறீலங்கா இராணுவத்தினரால் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டுப் பின்னர் சுட்டுக் கொல்லப்பட்டனர். சித்திரவதையின் உச்சக்கட்டமாக கைகளைத் துளைத்து முட்கம்பிகளால் கோர்த்துக் கட்டி இழுத்துச் செல்லும் வெறித்தனத்தை விளக்கும் காட்சி.**





www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


1984ம் ஆண்டு கிழக்கை நோக்கிய ஆரம்பப் பயணத்தின்போது விடுதலைப் புலிகள், காட்டில் எதிர் கொண்ட வேதனையான அனுபவத்தின் சித்தரிப்பு மேஜர் சுரேந்திரன் நினைவாக உருவம் கொண்டது.

'06.09.1985ம் ஆண்டு திருகோணமலையில் அருணாசலம் என்ற தமிழரை சிங்களப் படையினர் கைது செய்து சாகடித்த பின்னர் அவரது தொண்டையில் தூண்டில் முள்ளைக் கொழுவி தெருவழியே இழுத்துச் செல்லும் விலங்குணர்வு படைத்தோரின் வெறியாட்டத்தை விளக்கும் படம்.





லெப். சீலன் நினைவாக, தேவா வரைந்த ஓவியம்
"காட்டில் அடிவானம் சிவக்க புலிகள் பதுங்குவது எதிரியின் மீது பாயவே".

17.07.1986ல் மணற்சேனை அரசாங்க தமிழ் கலவன் பாடசாலையில் தங்கியிருந்த தமிழ் அகதி மக்களை சிங்களப் படையினர் வரிசையாக நிறுத்தி சுட்டுக் குவித்தனர். செஞ்சை நெருடும் இக்கொடுரத்தின் போது 67 தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டனர்.





காலத்திற்குக் காலம் திருகோணமலை மக்கள் தம் சொந்த மண்ணிலிருந்து சிங்கள இனவாதப் படைகளினால் அடித்துவிரட்டப்பட்டு அகதிகளாகச் செல்லும் அவலக்காட்சி.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# உயிர்ப்பின் தன்மையறியா..

நேற்றைய தொடர்ச்சியாய் இன்றும்
விடிந்தும் விடியாமல் தொடரும்
அவசர அஞ்சலோட்டங்கள்.

எப்போதும் எதற்கோ பரபரக்கும்
மனித அவசரங்களுள்
ஒரு குழந்தை கிழித்த
புத்தகமாய்
கசங்கிய மனத்துடன்
எட்டும் பத்துமாய்
ஆண்டுகள் போனது எதுவுமற்று.

பருவச் சுழற்சிக்குள்
வசந்தம் தொலைத்த பின்
மந்தாரம் கவிந்த
குளிர்கால நாட்களில்,
கதிர்களால் விழுதுவிட்டு
ஒவ்வொரு பகலையும் தாங்கிய
நாட்கள் மறந்து
உறங்கிக் கிடக்கின்ற
சோம்பல் சூரியன்.


வீதியோரம் பசுமை உதிர்த்த
நெடுமரங்கள்;
இலைகள் உதிர்த்தாலும்
வேர்களின் இருப்பில்
விறைப்பாய் நிமிர்கையில்,
மொட்டையாய் நிற்கின்ற
மரங்களைப் பார்த்தே
பொறாமைப் படுகின்ற உள்மனது.

எப்போதாவது வருகின்ற என்
தேசத்துக் கடிதங்கள் கூட
எங்கெல்லாமோ அலைந்து
தாமதமாய் வந்து சேரும்.

கந்தக நெடில் தோய்ந்த
கடிதங்கள்; ஆனாலும்
எழுத்துக்களின் ஒவ்வொரு
முகம்களிலும்
நாளை பற்றிய நம்பிக்கை
சுடராய் ஒளிரும்.

அதுவும், இதுவும், எதுவுமற்ற
நானும் நீயும்
உயிர்ப்பின் தன்மையறியா
பொறிகளில் நசுங்கி
நேற்றைய தொடர்ச்சிகளுடன்...

- கஜன் -



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்





# அக்கரைப்பூக்கள்

**அன்பினிய எரிமலை ஆசிரியர் குழுவினர்க்கு!**
அன்பினிய சீனு தமிழ்மணியின்
அன்பினிய புரட்சிநிறை
வாழ்த்துக்கள்!
தமிழீழத்தில் நடக்கும்
செய்திகளடங்கிய அரிய இதழான
'எரிமலை'யை எனது
நண்பர்களுக்கும் படிக்கக் கொடுத்து
தமிழீழ நிலைகளை விளக்குவேன்.
தங்கள் மொழி/இன/நாட்டுப்பற்று
எம்மைப் பெரிதும்
உவப்புக்குள்ளாக்குகிறது.
தமிழ் வாழ்க! தமிழீழம் வெல்க!

அன்புடன்
**சீனு தமிழ்மணி, தமிழ்நாடு.**

**ஆசிரியர் எரிமலை....**
புலம் பெயர்ந்து வாழும் மக்களுக்கு, எமது போராட்டம், விடுதலையின் அவசியம், இன உணர்வு போன்றவற்றை ஆழமாக உணர்த்தும் எரிமலை இதழில் சில பிழைகளையும் எடுத்துச் சொல்லவேண்டியுள்ளது. எரிமலையில் வரும் ஆக்கங்களில் ஆங்கில சொற்பதங்கள் அதற்கான விளக்கங்கள் இல்லாமல் வருகின்றன. அவற்றிற்கான விளக்கங்கள் சகலரும் விளங்கிக் கொள்ளும் விதத்தில் தமிழில் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். மேலும் படங்களின் கீழ் அவற்றிற்கான விளக்கக்குறிப்புகள் அநேகமாக காணப்படுவதில்லை. ஏன்? அத்துடன், களத்தில் பத்திரிகையிலும் எரிமலை இதழிலும் ஒரே செய்தியையே காணக்கூடியதாக உள்ளது. ஆசிரியருக்கு வேறு விடயங்கள் கிடைப்பதில்லையா?

**உதயன்**
**மான்த், பிரான்ஸ்.**

**மதிப்பிற்குரிய ஆசிரியர் அவர்கட்கு!**
ஐப்பசி மாத எரிமலை இதழில் பிரசுரமான "பயப்படாதையடா! எங்கட கடல்; எங்கட கரை; நான் இருக்கிறன்." என்ற தலைப்பிற்கு இக்கவிதையை சமர்ப்பித்துள்ளேன். நன்றி. தாயகச் செய்திகளும் தரமான கட்டுரைகளும் நினைவு அலைகளை அள்ளித்தரும் எரிமலையே நீ உன் பணியை சிறப்புடன் படைப்பதற்கு எனது நல்வாழ்த்துக்கள். நன்றி.

இவ்வண்ணம்
**அளவையூர் யோ. நர்மதா**

**அன்புள்ள ஆசிரியர் குழுவிற்கு எனது முதற்கண் வணக்கங்கள்.**
சகல விதத்திலும் மக்களை புரட்சிப் பாதையிலும் ஒவ்வொரு மனிதனையும் சுதந்திர பாதையிலும் வழிநடத்த முனைந்துவரும் எரிமலைக்கு எனது வாழ்த்துக்கள் என்றும் உண்டு. மேலும், எரிமலை மக்களின் விடியலோடு கலக்கும்வரை தோளோடு தோள்கொடுக்க என்றும் விரும்பும் நல்விரும்பி.

இப்படிக்கு
**மா. டயந்தன், பாரிஸ்.**

**அன்பின் எரிமலை ஆசிரிருக்கு,**
ஒவ்வொரு தன்மானம் உள்ள தமிழர்களினதும் உணர்ச்சிகளை தட்டி எழுப்பும் உன் பணி அன்று போல் இன்றும் என்றும் எரிமலை போல் வெடிக்கும். ஐரோப்பாவின் மூலை முடுக்குகளில் உறங்கிக் கிடக்கும் தமிழர்களின் நெஞ்சங்களை தட்டி எழுப்பும் உன் பணி தொடர என் வாழ்த்துக்கள்.
வாழ்க வாழியவே எரிமலை
தொடர்க உங்கள் பணி

**செல்வி. ந. சந்திரா**
**சுவிஸ்**

**திங்கள் தோறும் எம்மை எம் தாயிடம் அழைத்துச் செல்லும் எரிமலையின் ஆசிரியர் குழாத்திற்கு என் அன்பு வணக்கங்கள்.**
தங்களது மாதந்தோறும் வெளியாகும் எரிமலையைப் பார்வையிடும் அக்கறைப் பூக்களில் நானும் ஒரு இதழே.
"அழகில்லை என்பதற்காக என்னைப் பெற்ற தாய் எப்படி அடுத்த வீட்டு ஆச்சி ஆக முடியும். அழகானவள் என்பதற்காக அடுத்த வீட்டு ஆச்சி எப்படி என்னைப் பெற்றவள் ஆகிவிட முடியும்?"
உண்மைதான் ஆசிரியரே! இப்படியான பாரிய கருத்துக்களை வழங்கும் தங்களது சிறிய கவிதைகள், சிறிய கதைகள் என்பவற்றை ரசித்து ருசிப்பேன்.
'வளர்க எரிமலையின் பணி'
"மலர்க தமிழீழம்"
என்று வாழ்த்தும் வயது
அல்லாததால், வணங்கி நிமிரும்

**ச. சுதா**
**நோர்வே.**

**அன்பின் எரிமலை ஆசிரியர் அவர்கட்கு,**
எங்கள் நாட்டின் வரலாற்று உண்மைகள் புதைந்து போகாமல் இருக்க வேண்டுமானால், எரிமலை போன்ற நல்ல புதுமைகள் கொண்ட புத்தகங்கள் எங்கள் வசம் வந்துசேர வேண்டும். அப்புத்தகங்களைப் படிக்கும் ஒவ்வொரு தமிழ் மகனும் எங்கள் வரலாற்று உண்மைகளை இவ்வுலகிற்கு எடுத்துணர்த்த வேண்டும். நான் குறிப்பிட வருவது, எனக்கு எரிமலையில் பிடித்ததாக எம்நாட்டு உண்மைக் கதைகள், கவிதைகள் எங்கள் மாவீரர்களின் நிஜவாழக்கை வரலாற்றுக் கதைகள் உள்ளன. எரிமலை இத்தகு சிறந்த அம்சங்களைக் கொண்டுள்ளது. இந்த எரிமலை என் மனதை நெகிழ வைக்கிறது. விழிப்புணர்ச்சியைக் கொடுக்கக்கூடியதான வரிகளும் எரிமலையில் உள்ளன. எரிமலை ஆழமான கருத்துக்களையும், நான் அறியாமல் அறியும் தமிழ்ச் சொற்றொடர்களின் சுவைகளையும், இன்னும் பல புதிய ஆக்கங்களையும், சிறந்த முறையில் எங்களுக்கு படைக்கும் என்பது என்னுடைய ஆழமான நம்பிக்கை.
"இந்த எரிமலை மக்களின் மனதைக் கவரும் அறிவுமலை!"


**வசி,**
**ஒஸ்லோ.**

**அன்புடன் "எரிமலை" ஆசிரியர் குழுவிற்கு,**
எரிமலை மாத இதழினை தவறாது படிக்கும் பல்லாயிரம் வாசகர்களினுள் நானும் ஒருவன். தமிழீழ மக்களின் விடுதலை, வீரம், வரலாறு மற்றும் கலை, பண்பாட்டின் சிறப்புக்களை கவிதை, கட்டுரையாக வெளியிட்டு, தமிழன் தாழ்ந்தவனல்ல என்று உணரவைத்து வருகின்றீர்கள். குறிப்பாக வரலாற்றுக் கட்டுரைகள், எங்களின் தமிழீழம் என்பது எங்களின் பாடப்புத்தகங்களில் (இலங்கையில் குறிப்பிட்டுள்ளது போல் 15ம் நூற்றாண்டில் தோன்றவில்லை, அது ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே சிறப்புற்றிருந்தது) என்பதனை பறைசாற்றுகின்றது.
தொடர்ந்து வரும் இதழ்களிலும் எமது வரலாற்று பாரம்பரியங்கள் பற்றிய செய்திகளை எதிர்பார்க்கின்றோம்.

**ஞானசேகரம், ஜேர்மனி.**

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# அதிர்ச்சி நோய் எமக்கல்ல!

பெரிய பறவைகள் வானில் உயரப் பறந்துகொண்டிருந்தன. தரையில் இருக்கும் கண்களுக்குத் தம்மைச் சிறிதாக்கும் அளவு அவை உயரப் பறந்துகொண்டிருந்தன.

பூமரச் செடிகளின் நடுவே சிறிய தேன் குருவிகளும் சிறகடித்து, இசை பரப்பிக் கொண்டிருந்தன.

இவை செல்லாத இடமெல்லாம் உயர்ந்தும் பதிந்தும், பறந்தும் வீழ்ந்தும், இன்னொன்று தத்தளித்துக் கொண்டிருந்தது. அது மனித உள்ளம்.

"ஏன் பதறுகிறாய்?"

"பயமாக இருக்கிறது."

"ஏன் பயம்?"

"குண்டு விழப் போகுது...... ஆமி வரப்போறான்..... யோசிக்க யோசிக்க பயமாயிருக்கு."

கேள்வியை எழுப்பிய குரல் இப்போது சிரித்தது!

"நீ யோசி, ஆனால் பயத்தோடு யோசியாதே!"

"ஏன்?"

"பயந்தவனை எதுவும் வெருட்டும்; தளர்ந்தவனை எதுவும் வெல்லும் என்பதால் தான்!" என்றது அந்தக் குரல்.

"அப்போ?" என ஏங்கியது மனம்.

குரல் கூறிக்கொண்டே போயிற்று...

"பயந்து சாகாதே! துணிவு தான் தெளிவைத் தரும். அதுவே அறிவைத் தரும்; ஒளியைத் தரும். அந்த ஒளி கொண்டு பார்; பாதை தெரியும்.

பயத்துடன் உன் கண்களை மூடாதே. அது இருளையே புகுத்தும்! விழித்த கண்ணோடு பார். வருங்காலப் பாதையை அது தரும். துணிவும் அறிவுமே உன் கண்கள், விளங்குகிறதா?"

"ஆமாம்" என குரல் கொடுத்தது மனித உள்ளம்.

ஆனால் அந்தக் காற்றில் எழுந்த குரல் அத்துடன விட்டு விடவில்லை; அது தொடர்ந்தது...

"அடிக்க வருவதை நீ அடி! கொல்ல வருபவனை நீ கொன்றுமுடி! வாழ்வுக்கு வேண்டிய வழியும் நெறியும், பொய்யா மொழியும், இதுதான்!" எனத் தொடர்ந்தும் முழங்கிற்று அக்குரல்.

வானம் இதனையே எதிரொலித்து ஓய்ந்தது.

ஒரு கண அமைதி தொடர்ந்தது.

புதிய உயிரோட்டமொன்று தன்னுள் எழுவதை அந்தத் தத்தளித்து நின்ற மனம் உணர்ந்தது. அது விழிப்பாக, வீர உணர்வாக உதிரத்துள் செறிந்தது! என்ன.....?

முன்பு பயந்து நின்ற மனத்தை இப்போது அங்கு காணவில்லை; வீர மனிதனொருவன் அங்கு தலைநிமிர்ந்து நின்றான்! காலவேகத்தின் நொடிப்பொழுதில் ஒன்று, நூறு, ஆயிரம் ஆயின! விடுதலை வேண்டும் இனமொன்று அங்கு கரம் உயர்த்தி நின்றது; புதிய வரலாறே உருவாகி நின்றது!

"அதிர்ச்சியும் பயமும் எமக்கல்ல!

அவையும், அழிவும், எம் பகைவனுக்கே!" என்ற விடுதலையின் விளக்கம், அங்கு ஒலித்துக்கொண்டிருந்தது.

**நாக. பத்மநாதன்**

நன்றி
விடுதலைப் புலிகள் (மாசி 1992)

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



சிறுகதை

ரகுராம்

திரும்பினேன். "உள்ள வாங்கோ, இஞ்ச குமார், அப்பாவை ஓடிப் போய் கூட்டிவா, அண்ணைமார் வந்திருக்கினம் என்று சொல்லு, போ" என்று மனைவி மூத்தவனை அனுப்பும் சத்தம் கேட்கிறது. "நான் வந்திட்டன், பெடியண்ட குரல் வேலியைக் கடக்கைக்குள்ள கேட்டுது! கொஞ்சநேரம் பயந்த களப்பு போறதை எண்ணி வேதனை அடைந்தேன். நான் சேனையூருக்கு யாழ்ப்பாணத் திலிருந்து இடமாற்றம் வாங்கிவந்த ஒரிரு நாட்களில் அறிமுகமான வன் தவம். தன்னுடைய செயல்

# ஞானோபதேசம்

வெளிச்சம் வற்றிப் போய் வெகு நேரமாயிருந்தது. சில்வண்டுகளின் ஓலம் காதைக் கிழித்தது. நாய்கள் குரைக்கின்ற சத்தம் தூரக்கேட்டுக் கொண்டிருக்கிறது. படலையடியில் ஏதோ அரவம். காதை கூர்மை யாக்கிக் கொண்டேன். "அண்ணை, சிவம் அண்ணை" மெல்லிய குரல் மிதந்து வந்தது. நெஞ்சு 'திடுக்' என்றது. நான் உதவி செய்கிறது இவங்களுக்குத் தெரிஞ்சுபோச்சுப் போல கிடக்கு. மெதுவாக வீட்டிற்குள் நழுவி னேன். "இஞ்சை, றோட்டிலை ஆரோ என்னைக் கூப்பிடுகினம். இழவெடுத்தவங்கள் ஆமியோட வந்திட்டாங்கள் போல கிடக்கு, நான் பின்பக்கமா தோட்டப் பக்கமா போறன், நீ போய் நான் இல்லையெண்டு சொல்லு" என்று மனைவியிடம் சொன்னேன். மனைவி பயப்பிராந்தி அடைந் தாள். பிள்ளைகளின் முகங் களிலும் இனம்புரியாத கிலேசம். மனைவி முன்னுக்குப் போனாள். "யார் தம்பி? அண்ணை வீட்டிலை இல்லை." பதிலை எதிர்பார்த்து மௌனமாகிறாள். "கமலம் அக்கா, அது நாங்கள்" என்ற குரல் வேலியைக் கடக்கும் என் செவிகளில் விழுகிறது. 'அட நம்மாக்கள்' என்று புரியாத சந்தோசத்தோடு முணுமுணுத்துக் கொண்டு சென்ற வேகத்தில் பயம்" என்றபடி முன் விறாந் தைக்கு வந்தேன். "அண்ணை வந்திட்டியளே? ஆமி அங்கால போனாப்பிறகு வரலாமெண்டு வந்தனாங்கள்." என்றான் தவம். தவத்தோடு இன்னும் இருவரும் வந்திருந்தார்கள். "யார் தம்பி புதிசா கிடக்கு?" என்றேன் கேள்விக்குறியோடு. "இவை திருக்கோணமலையிலை இருந்து வந்தவை அண்ணை. வரையுக் குள்ளை மூதூரிலை ஆமியைக் கண்டு பிரிஞ்சு இஞ்சாலை இவரெண்டு பேரும் வந்திட்டினம். மற்றவையும் வருவினமாம்." என்றான் தவம்.

"தவம், நீங்கள் இஞ்சாலை நடமாடுறதை யாரோ சொல்லிப் போட்டாங்கள் போல கிடக்கு. அஞ்சாறு நாளா ஏக 'ரவுண்ட் அப்'. பார்த்து வந்து போங்கோ" என்றேன்.

"அண்ணை, நாளையோட நான் மட்டக்களப்பிலை. நாளைக் குக் காலம்பிற போறன். இனி இவை இரெண்டுபேரும்தான் இஞ்சாலை பொறுப்பு. உங்களுக்கு இவையைத் தெரியப்படுத்தத்தான் கூட்டிக்கொண்டு வந்தனான். இவர் கஜன், ஊர் முருங்கன். இவர் வசந்தன், ஊர் சுழிபுரம்" என்று அறிமுகப்படுத்தினான் தவம்.

தவம் நாளையோட மட்டக் களால் ஊர் மக்களைத் தன் வசப்படுத்தியவன். 83 யூலையில் தமிழர் பட்ட இன்னல் கண்டு வேதனைப்பட்டு உரிமை காக்க புலிகளுடன் இணைந்தவன். களம் பல கண்டவன். எனது கூடப் பிறந்த சகோதரன்போல் பழகி யவன். மனைவியைத் திரும்பிப் பார்த்தேன். கண்கள் குளமாக நின்றது. பிள்ளைகள்? அவர்கள் வேதனை சொல்லுந்தரமன்று. பேச்சற்று நின்ற எங்கள் நிலையை தவத்தின் குரல் கலைத்தது. "அண்ணை, எனக்குக் காட்டின அன்பையும் ஆதரவையும் இவைக் கும் காட்டுங்கோ. கஜன், வசந்தன் அண்ணையை நீங்க எந்த உதவிக்கும் கேட்கலாம். சரியே" என்றான்.

"தம்பியவை, சாப்பிட்டுட்டுப் போகலாந்தானே" என்றாள் மனைவி. "இல்லையக்கா, ஆமி திரும்ப இதாலே வந்தாலும் வருவான்கள். நாங்கள் அதுக்கிடை யில போயிடோணும்' என்றவன், பிள்ளைகளைப் பார்த்து, 'டேய் தம்பியள் தவம் அண்ணையை மறக்க மாட்டியள்தானே?' என்ற போது அவன் குரல் கமறியது. மனைவியால் தாங்க முடிய வில்லை. விசும்பினாள்.

"சரி அண்ணை வாறன், அக்கா வாறன்" என்றபடி படலையை நோக்கிப் போனான்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

அவர்கள்!

நாட்கள் நகர்ந்தன. ஒருநாள் பிற்பகலில் மனைவியும் கடைசி இருபிள்ளைகளும் வீடு வந்தார்கள். "என்ன மூத்தவனை காணவில்லை?" வாற வழியிலை பயமெண்டு விட்டுட்டு வந்திட்டாளாக்கும். என் எண்ண ஓட்டம் ஓடியது. மனைவியின் முகத்தைப் பார்த்தேன். ஏதோ சொல்ல வருபவள் போல அவள் முகம் இருந்தது. "என்ன ஏதும் பிரச்சனையோ?" என்றேன். "குமார் அங்கே இயக்கத்தில சேர்ந்திட்டான்." என்றாள். தந்தை என்ற முறையில் வேதனை மனதைப் பிசைந்தது. அதனை வெளிப்படுத்தாமல் "அவனுக்கு தன்ட உணர்வுகளை வெளிப் படுத்த உரிமை இருக்கு. அவனைப்பற்றி நீ கவலைப் படிறியே?" என்றேன். அவளால் ஏதும் பேசமுடியவில்லை. கண்கள் குளமாக நின்றன. "அவனைப் பெற்றதில நீ பெருமைப்படு, வீணாக் கவலைப்படாதே" என்றேன். என் மனம் குமாரைப் பற்றிக் பெருமைப்பட்டது. ஆயினும் என் மனதின் ஒரு மூலையில் வேதனை இருந்தது. குமாரைக் கண்டு கதைக்க என் உள்ளம் ஏங்கியது. என் எண்ணத்தை மனைவியிடம் கூறினேன். அவளும் சம்மதித்தாள்.

குமார் இருக்கும் இடத்தை மனைவியிடம் அறிந்துகொண்டு யாழ்ப்பாணம் புறப்பட்டேன். பஸ்சில் எனது சிந்தனைகள் பலவாறு ஓடின. எல்லாவற்றிலும் குமாரின் செயல் சரி என்றே முடிவு கண்டேன். மனம் சாந்திபெற்றது. நேரம் ஓடிக் கொண்டிருந்தது. வழியில் பல இடங்களில் தடை முகாம்களில் ஏறி இறங்கினேன். வவுனியாவில் வைத்து இரு இளைஞர்கள் இறக்கப்பட்டனர். அவர்களின் பெற்றோர் கதறிய கதறல், கல்லைக் கூட கரையச் செய்து விடும் போல் இருந்தது. அவர்களுக்கு கிடைத்த வசவுகள் நாவைக்கூட நாணச்செய்யு. பெற்றோர்கள் பலவந்தமாக பஸ்சில் ஏற்றப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டார்கள். நாள் முழுவதும் ஓடிய பஸ் யாழ்ப்பாணத்தை அடைந்தது. நாளைக்கு குமாரைக் காண்பது என்ற முடிவுடன் நகருக்குள் இருக்கும் அக்காவின் வீட்டை நோக்கி நடக்கத் தொடங்கினேன். வழியெல்லாம் களிமண் கோட்டைகள் என்னை வரவேற்றன. புரியாத மொழிகள் ஓங்கி ஒலித்தன. காடு, மேடு எல்லாம் அன்னியனின் கொட்டகைகள். நாயோடு கூடியிருக்கும் தெள்ளுப் போல, அருகில் எங்கள் ஊர் எட்டப்பர்கள். பராக்குப் பார்த்த படி நடந்த என் முகத்தில் மழைத்துளி ஒன்று பட்டது. மேலே வானம் பொழிய ஆயத்த மாயிருந்ததை அது பறைசாற்றியது. பார்வையை ஒடுக்கிக் கொண்டு எட்டி நடக்கத்தொடங்கினேன். தூரத்தே வீடு தெரிந்தது.

மறுநாள் காலையில், நேரத்தோடு எழுந்து, மனைவி கூறியிருந்த இடத்தை உறவுப் பொடியன் ஒருவனின் உதவியோடு அடைந்தேன். நகரிலிருந்து தொலைவில் இருந்தது அம்மறைவிடம். வழியில் பல இடங்களில், மடித்துக் கட்டிய சாறமும், கையில் வெடிகுண்டுமாக பல இளம் இரத்தங்கள். எல்லோரும் எனக்கு மகன் குமாராகவே தெரிந்தனர். உள்ளே அடர்ந்த பனங்கூடலுக்குள் பயிற்சித் தளங்கள். எனக்கு ஏற்கனவே அறிமுகமான இளைஞன் ஒருவன், என்னைக் கண்டதும், "ஆ, சிவா அண்ணை. வாங்கோ" என்று சொல்லிவிட்டு, "இப்ப நான் இஞ்சை பொறுப்பாய் இருக்கிறன்" என்றான். "தம்பி நான் குமாரை ஒருக்கா காணலாமே" என்றேன். "ஓமண்ணை, கொஞ்சம் இருங்கோ, இந்தா வரச்சொல் லுறன்" என்றபடி உள்ளே போனான்.

சில நிமிடங்கள் மௌனமாகக் கரைந்தன. "அப்பா" என்ற குரலைக்கேட்டு தலை நிமிர்ந்தேன். "ஆ குமார், வா" என்றேன். முன்னைவிட அவன் முகம் பொலிவுடன் இருந்தது. "அப்பா, பார்க்க மட்டும்தானே வந்தனீங்கள்?" என்ற அவன் குரல், எங்கே தன்னைக் கூட்டிப் போகத்தான் வந்திருப்பாரோ? என்று எச்சரிக்கையோடு ஒலித்தது. "ஓம் குமார்" என்றேன். அவன் முகம் இப்போது மேலும் பூரித்தது.

"அப்பா, நான் சேர்ந்ததைப் பற்றி, நீங்கள் படிச்சவர், விளங்கிக் கொண்டிருப்பியள். ஆனா அம்மா பேதை மனம். அவ நிச்சயம் கவலைப்படத்தான் செய்வா. நீங்கதான் அவக்கு விளங்கப்படுத் தோணும்" என்றவன் தொடர்ந்து "இஞ்சை இருக்கிற ஒவ்வொரு போராளியும் தன்ரை இன சனத்தை மறந்து, தன்ரை சுக போகத்தை மறந்து, எங்கட மண்ணுக்காண்டி, மக்களுக் காண்டி வந்திருக்கினம். அந்த வரிசையிலே நானும் சேர்ந்திருக் கிறதைப் பற்றி மிச்சம் பெருமைப் படுகிறன். வீட்டில இருக்கேக்க ஓடி ஒளிச்ச நான், இப்ப அநியாயத்தை எதிர்த்து நேருக்கு நேர் மோத தயாராக இருக்கிறன். வீணாச் சாகிறதை விட வீரச்சாவு மேல் என்று உணர்ந்திட்டன். நீங்கள் எண்ட உணர்வை வடிவா புரிஞ்சுகொண்டிருப்பியள்." என்று முடித்தான்.

என் மனதில் கொஞ்ச நஞ்சமிருந்த வலியும் மறைந்தது. புராணங்களில் முருகன் சிவனுக்கு தகப்பன் சுவாமியாக உபதேசித்தது நினைவில் வந்தது.

"அப்ப நான் வாறன்" என்றேன். "ஓமப்பா, அம்மாவை யும் தம்பியவையையும் கேட்டதாகச் சொல்லுங்கோ" என்றான்.

எனது கால்கள் நடைபோடத் துவங்கின. திரும்பிப்பார்த்தேன். குமாரின் முகம் எனக்குத் தெரியவில்லை. ஒரு வீரனின் முகம் தெரிந்தது. சிரித்துக் கொண்டு கையசைத்தான். ஒரு வீரப்புலியினை பெற்றவன் என்ற பூரிப்போடு நடக்கத்தொடங்கினேன்.

**நன்றி: ஈழநாதம்**

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# கி.மு. 1 – கி.பி. 3 ஆம் நூற்றாண்டு வரையான தமிழிலக்கியத்தில் பெண்கள்

"வழமையாக ஏற்றுக் கொள்ளப்பட்ட சமூக மட்டத்திலான பிரிவினைகளைப் போலவே ஆண், பெண் வேறுபாடானது வர்க்கம், இனம், சாதி ஆகியவற்றை ஊடறுத்துச் செல்கிறது. பெண்ணின சமூக, அரசியல் அதிகாரமின்மையை நெடுங்காலமாகச் சமூகவியலாளர்களும், மனிதவியலாளர்களும் தமது ஆய்வுகளில் பாலியலின் பரிமாணத்தை நோக்கும் போது, தொடர்ந்து புறக்கணித்து வந்துள்ளனர்."

எஸ். எஸ் ஸ்யோனஸ் போர்க் 'இன்னுமொரு ஜாதி'(பக் 19)

இந்த தொடர்ச்சியான புறக்கணிப்புக் காரணமாகவே தமிழ்ச் சாதியில் பெண்கள் நிலைமை பற்றிய உண்மையான ஆதாரம் மிக்க, விசுவாசமான ஆய்வுகள் மேற்கொள்ளப்படவில்லை. மிகச் சில கட்டுரைகள் மட்டுமே இவ்வகையில் வெளிவந்தன.

அடக்குமுறை அதிகரிக்கும் போது எழுச்சி பிறக்கிறது. ஆனால் பெண்கள் மீதான அடக்குமுறை காலங்காலமாகத் தொடர்ந்த காரணத்தினாலும் அது அடக்குமுறை என்ற வடிவத்தில் எண்ணப்படாமையாலும் அது சம்பந்தமான எழுச்சி ஏற்படவில்லை. ஏற்படக் கூடிய எழுச்சிகள் பண்பாடு, பாரம்பரியம், சமயம் என்பவற்றின் செல்வாக்குகளினால் அடக்கப்பட்டு விடுவதினால், தமிழ்ச் சமூகத்தில் பெண்கள் பற்றிய ஆராய்ச்சி மேற்கொள்ளப்படுவதில் அதிக அக்கறை காட்டப்படுவதில்லை.

எனினும் மாறிவரும் சமுதாய நிர்ப்பந்தம் இதுபற்றிய சமூக சிந்தனைக்கு வழிவகுக்கிறது.

* * *

கி.பி.3 ஆம் நூற்றாண்டுக்கு முந்திய தமிழிலக்கியத்தில் பெண்கள் பற்றி ஆராய்வு செய்யும் போது, அக்காலச் சமூக பொருளாதார நிலைமைகளை ஆராய்தல் அவசியம். சமூக வரலாற்றை அவ்வப் பிரதேசப் பொருளாதார உற்பத்தி உறவுகளும், உற்பத்தி உறவுகளை அவ்வப் பிரதேசப் புவியியலும் பாதிக்கின்றன.

புவியியல் ரீதியாக நோக்கும் போது பின்வரும் பொருளாதாரப் படிமுறை வளர்ச்சி நிலைகள் தோன்றும் எனக் கூறப்படுகிறது.

(1) உணவு சேகரித்தல்

(2) வினைத்திறன் மிக்க சேகரிப்பாளர், வேட்டைக்காரர், மீனவர் தோன்றுதல்.

(3) இனக்குழு விவசாயமும் மந்தை மேய்ப்பும்.

(4) விவசாய பிரபுத்துவ ஒழுங்கமைப்பு.

(5) ஆரம்ப நகராக்கம்

(6) கைத்தொழிற் சமூக முதலாளித்துவமும் நவீன நகராக்கமும்

மேற்கூறப்பட்டவற்றில் முதல் ஐந்து நிலைகளையும் இக்கால இலக்கியங்களிற் காணமுடியும்

இவ்விலக்கியங்களில் வரும் பாடல்களைக் கொண்டு இக்காலப் புவியியல் நிலைமையையும், அதனடியாகத் தோன்றும் பொருளாதார நிலையையும் அதன் மூலம் வெளிக்கிளம்பும் சமூக உறவுகளையும் அவதானிக்க முடியும்.

இவ்விலக்கியங்களில் குறிஞ்சி. முல்லை, மருதம், நெய்தல், பாலை எனப்பட்ட புவியியற் பிரிவுகளை / நிலைகளைக் காணமுடியும். உலகத்தைப் பகுத்த முறையாக குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல்

அம்மன்கிளி முருகதாஸ்
தமிழ்த்துறை,
யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்.

என்பவற்றைத் தொல்காப்பியர் கொண்டார். குறிஞ்சியும், முல்லையும் வேனிற்காலத்தில் மாறுபடுகின்ற ஒரு காலநிலைத் தோற்றமாக பாலை உள்ளது என்பதனை, சிறுபாணாற்றுப் படையிலும், சிலப்பதிகாரத்திலும் காணமுடியும்.

முன்பு கூறப்பட்ட பொருளாதார நிலைகளில் குறிஞ்சி, நெய்தல் நிலங்களில் உணவு சேகரித்தல், வினைத்திறன் மிக்க சேகரிப்பாளர், வேட்டைக்காரர், மீனவர் காணப்பட்டமையையும் முல்லை, மருதப் பிரதேசங்களில் இனக்குழு விவசாயமும், மந்தை மேய்த்தலும் விவசாய பிரபுத்துவ ஒழுங்கமைப்பும் நெய்தல், மருத நிலங்களில் ஆரம்ப நகராக்கமும் காணப்பட்டமையை அவதானிக்க முடியும்.

இக்கால இலக்கியங்களில் இலக்கியப் பொருள் முதல், கரு, உரி எனப் பாகுபாடு செய்யப்பட்டன. நிலம், பொழுது என்பன முதற் பொருளாகவும் தெய்வம், உணவு, மா, மரம், புள், பறை, செய்தி என்பன கருப்பொருளாகவும் ஒழுக்கங்கள் உருப்பொருளாகவும் கூறப்பட்டன. தற்கால மொழியில்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

சொன்னால் நிலம் என்பது புவியியல் நிலைமையையும் கருப் பொருள்கள் அங்கு காணப்பட்ட இயற்கை நிலைகளையும் தொழில், சமூக அமைப்புகளையும், உரி அதன் வழித் தோன்றும் ஒழுக்கத் தையும் குறித்து நின்றது.

இக்காலப் பிரிவில் வாழ்ந்த மக்கள் அனைவரினதும் வாழ்க்கை பற்றிய செய்திகளை ஒரே காட்சியில் தரும் நூலான பெரும்பாணாற்றுப் படை உப்பு வணிகர், எயின எயிற்றியர், முல்லை நில ஆயர், முல்லை நில உழவர், மருத நில உழவர், வலைஞர் பற்றிய குறிப்புகளைத் தருகிறது. இந்நூலில் மருதநிலைத்தில் உழுவோர் உழுதுவித்துண்போர் என்ற இரு பிரிவினரை நாம் காணமுடிகிறது. இந்நூலின் 206 256 ஆவது வரிகளில் இதனைக் காணலாம். உழுவோன் நிலமற்ற விவசாயி யாவான். அவன் நெல் விளைத்த வனாக, சூடடித்தவனாக, களை பிடுங்கியவனாக காணப்படுகின் றான். குறு. 309, நற். 60, 400, பெ.ஆ.ப. 196, ம.கா.230, பதிற்றுப்பத்து 719, புறம் 61 என்பன இவர்களைப் பற்றிக் கூறும். தொழிலாளரைப் பயன்படுத்திய இவ்வளர்ச்சியில் பழஞ்சோற்றை ஒதுக்கும் குழந்தைகளையும் (உழுவோரின் பிள்ளைகள்) செவிலித் தாயாரின் பாலை உண்டு, கோழியின் இறைச்சியோடு சோறு உண்ணும் குழந்தைகளையும் (உழுவித்துண்போரின் பிள்ளைகள்) நாம் காணமுடிகிறது. முன்குறிப் பிட்டவாறு ஒரு விவசாய, பிரபுத்துவ ஒருங்கமைப்பை இதிற் காணலாம். புறத்திணையில் போர் உழிஞை எனப்பட்டது. எயில் காத்தலும் எயில் வளைத்தலும் இப்போரின் பிரதான அம்சம். தனது நாட்டைக் காத்தலும் இன்னொரு நாட்டை வளைத்தலும் நிலை நிறுத்தப்பட்ட ஒரு சமூகத்தி லேயே சாத்தியமாகும்.

முல்லைத்திணையை எடுத்துக் கொண்டால் அதுவும் ஒரு நிரந்தரக் குடியிருப்பே. இது காட்டில் அமைந்திருந்தது. நற்றிணை 59ம் பாடல் முல்லை நிலத்தைக் 'காட்டுநாடு' என விபரிக்கிறது. முல்லை நிலம் மேய்ச்சல் நிலமாக மட்டுமன்றி விவசாய நிலமாகவும் இருந்த தன்மையை அகம் 394 விளக்கும்.

"காடுறை இடையன் யாருதலைப் பெயர்க்கும்

மடிவிடு வீளை வெரிஇக் குறுமுயல்

மன்ற இரும்புதல் ஒளிரும்

புன்புல வைப்பின் எருகிற நல்லூரே"

என்பது அது. காட்டில் ஆடு மேய்க்கும் இடையன் பற்றியும் முயல் ஒளிக்கின்ற புன்செய் நிலம் பற்றியும் இதிற் காணப்படுகிறது. இங்கு எருமை, ஆடு, பசு, எருதுகள்

## தொல், நச்சினார்க்கினியத்திலிருந்து பெறப்பட்ட பின்வரும் அட்டவணை அக்கால புவியியல், பொருளாதார, சமூகநிலையைக் காட்டும்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| முதல் | நிலம் | குறிஞ்சி | முல்லை | மருதம் | நெய்தல் | பாலை |
| | பொழுது | யாமம் | கார்,மாலை | வைகறை | ஏற்பாடு | நண்பகல் |
| | தெய்வம் | சேயோன் | மாயோன் | வேந்தன் | வருணன் | கொற்றவை |
| | செய்தி (தொழில்) | தேனழித்தல் | நிரைமேய்த்தல் | நடுதல் | மீன்படுத்தல் | ஆறலைத்தல் |
| கரு | | கிழங்ககழ்தல் | களைகட்டல் | கடாவிடுதல் | உப்புவிளைதல் | சூறை |
| | | தினை விளைத்தல் | கடாவிடுதல் | அரிதல் | | |
| | | கிளிகடிதல் | | களைகட்டல் | | |
| | உரை | ஐவனநெல் | வரகு,சாமை | செந்நெல் | மீன்விலை | ஆறலைத்தல் |
| | | தினை | முதிரைக்கூலம் | வெண்ணெல் | உப்புவிலை | சூறை |
| | | மூலங்கரிசி | | | | கொண்டன |
| உரி | அகம் | புணர்தல் | இருத்தல் | ஊடல் | இரங்கல் | பிரிதல் |
| | புறம் | வெட்சி | வஞ்சி | உழிஞை | தும்பை | வாகை |

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



**போர்க்குணம் கொண்ட ஓரினமே எம் தமிழினம் என்பதை நிலைநிறுத்திய ஒரு மீமிசை மாந்தனே பிரபாகரன் என்னும் எல்லாளன். பிரபாகரன் என்றாலும் எல்லாளன் என்றாலும் ஞாயிறு எனப் பொருள் படுவதனால் மட்டுமே அவ்வாறு சொல்லவில்லை. ஈழத்து எல்லாளனின் தொடர்ச்சியே அந்தப் பிரபாகரன். தமிழினத்தின் இழந்த புகழை மீட்டிட நெருப்பால் நாண்கட்டி விடுதலை யாழை மீட்டிவருகின்ற தன்னிகரில்லாத் தமிழினத் தலைவனே தம்பி பிரபாகரன்.**

**தமிழகத்திலிருந்து திரு.குணா எழுதிய 'பிரபாகரனை நெஞ்சில் நிறுத்துவோம்' எனும் சிறு கைநூலிலிருந்து..**

வளர்ப்பு பிரதான தொழில் ஆகும். இவர்களுடைய போரொழுக்கம் எயில் காத்தல் (வஞ்சி, அதாவது தமது அரணைப் பாதுகாத்தல்) ஆகும்.

நெய்தல் நில மக்கள் பரதவர் இவர்களது தொழில்களாக உப்பு விளைத்தல், மீன் பிடித்தலுடன் கடல் வணிகமும் மேற்கொள்ளப் பட்டன. அதற்கு

"வாலுளைப்புரவியொடு வடவளம் தரூஉ
நாவாய் சூழ்ந்த நனிநீர்ப் படப்பை
மாடமோங்கிய மணன்மலி மறுகிப்
பரதர் மலிந்த பல்வேறு தெருவில்"
(பெ.ஆ.ப.320)

என்பது உதாரணமாகும். இவர்களின் குடியிருப்பிலும் வளம் குறைந்த, வளம் நிறைந்த சமூகங்களைக் காணமுடியும்.

மாடமோங்கிய, மணன்மலி மறுகும், தருப்பைப் புல் வேய்ந்த குறியிறைக் குரம்பைகளும் இங்கு காணப்பட்டன (பெ.ஆ.ப.) இவர்களது போர் தும்பை.

பாலை நில மக்களின் தொழில் ஆறலைத்தலெனவும், சூறைகொண்டலெனவும் முன்னர் கூறப்பட்டது. பயிர் விளைவித்தலோ வேறு பொருளாதார முயற்சிகளோ சாத்தியப்படாத இந்நிலத்தில், வழிப்போக்கரை ஏமாற்றி வழிமாறிக் கூட்டிச் சென்று (ஆறு+அலைத்தல்) சூறை கொள்ளுதல் தொழிலாக இருந்தது. எனவே தலைவர் பொருள்வயிற் பிரிந்தனர். போர் வாகை எனப்பட்டது.

குறிஞ்சி நில மக்களின் தொழில் வேட்டையாடல், தேனழித்தல், தினை விளைத்தல், கிழங்ககழ்தல் என்பனவே. இவர்களின் போர் முல்லை நிலத்து ஆனிரைகளைக் கவர்ந்து செல்லல் ஆகும். இது வெட்சி எனப்பட்டது.

எனினும் மக்களிடையே ஒரு பண்டமாற்றுப் பொருளாதாரமும் காணப்பட்டது.

"கானுறை வாழ்க்கைக் கதநாய் வேட்டுவன்
மான்றசை சொரிந்த வட்டியும் ஆய்மகள்
தயிர் கொடுவந்த தசும்பு நிறைய
ஏரின் வாழ்நர் பேரில் அரிவையர்
குளக்கீழ் விளைந்த களக்கோள் வெண்ணெல்
முகந்தனர் கொடுப்ப உவந்தனர்" (புறம்)

என்ற பாடல் வேட்டுவனும், ஆய்மகளும் தமது உற்பத்திப் பொருள்களானா மான்தசையையும் தயிரையும் கொடுத்து நெல்லைப் பெற்றுச் சென்ற செய்தியைக் கூறுகின்றது.

இந்த சமூக அமைப்பில் பெண்கள் என்ன பங்கு வகித்தனர் என இனி நோக்குவோம்.

"ஈன்று புறந்தருதல் என்றலைக் கடனே
சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே
வேல் வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே
ஒளிறுவாளருஞ்சமமுருக்கிக்
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே"


என்று தாய், குடும்பத்தில் தனது கடன் பிள்ளையைப் பெற்று வளர்த்தல் என்பதாகக் கூறுகிறார். மிகுதிக் கடமைகள் ஏனையோருக்கு உரியன.

சங்க இலக்கியத்தில் நற்றாய், செவிலித்தாய், தலைவி, தோழி, பரத்தை என்று பெண்கள் ஐந்து வகையினராகக் காணப்படுகின்றனர். இதில் தலைவியும் பரத்தையும் எதிரெதிரானவர்கள். நற்றாய், செவிலித்தாய், தோழி ஆகிய மூவரும் தலைவி தலைவனுடன் சேருவதற்காக அல்லது தலைவனுடன் கோபிக்காமல் இருப்பதற்காக, அல்லது அவனுடன் உறவு கொள்வதற்கான முயற்சிகளைச் செய்பவர்கள். சில சமயங்களில் தாய்மார் தங்கள் பெண்களைக் காவல் காப்பவராகக் கூறப்படுகின்றனர்.

( அடுத்த இதழில் தொடரும்)

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



www.tamileelamarchive.com